இரண்டாம் பதிப்பு

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை - 20
பக்கங்கள்: 28

சுடர் 32 | கதிர் 235 | வள்ளுவர் ஆண்டு 2048 | ஆடி 03 புதன்கிழமை 19.07.2017

## மர்மப் பொருள் வெடித்து எட்டு மாணவர்கள் காயம்

கொக்கிளாய் பாடசாலையில் நேற்றுக் காலை சம்பவம்

முல்லைத்தீவு, ஜூலை 19
கொக்கிளாய் முகத்துவாரத்திலுள்ள அரசினர் சிங்களக் கலவன் பாடசாலையில் நேற்றுக் காலை >> 06



## டிப்பர் வாகனம் மோதி 10 வயதுச் சிறுமி சாவு

மக்கள் சாரதி மீது தாக்குதல்: தலைமன்னார் வீதியில் சம்பவம்

மன்னார், ஜூலை 19
மன்னார் தலைமன்னார் பிரதான வீதியில் பெரியகரிசல் சந்தியில் நடந்த விபத்தில் சிறுமி ஒருவர் உயி >> 06

## கூட்டமைப்பு –ஐ.தே.க. கூட்டு அரசமைத்தால் நாட்டுக்குப் பேராபத்து

எச்சரிக்கின்றது சுதந்திரக் கட்சி

கொழும்பு, ஜூலை 19
தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து, ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சி அமைப்பது நாட்டுக்குப் பேராபத்தாக அமையும். இவ்வாறு >> 06

வித்தியா படுகொலை வழக்கு:

## சுவிஸ்குமாரை பொலிஸ் நிலையத்தில் முற்படுத்த அறவே மறுத்தார் எஸ்.ஐ.

முன்னாள் எஸ்எஸ்பி தீர்ப்பாயத்திடம் சாட்சியம்

யாழ்ப்பாணம், ஜூலை 19
மாணவி வித்தியா படுகொலை வழக்கின் சந்தேகநபர் சுவிஸ்குமாரை புங்குடுதீவில் வைத்துக் கைது செய்து யாழ்ப்பாணத்துக்கு அழைத்து வந்த உப பொலிஸ் பரிசோதகர் சிறிகஜன், அவரை யாழ்ப்பாணம் தலைமையகப் பொலிஸ் நிலையத்தில் முற்படுத்துவதற்கு அறவே மறுத்துவிட்டார் என்று யாழ்ப்பாண முன்னாள் மூத்த பொலிஸ் அத்தி >> 25

வித்தியா படுகொலை வழக்குடன் தொடர்புடைய

## எஸ்ஐ சிறிகஜன் தலைமறைவு

சிஐடியினர் நீதிமன்றில் அறிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 19
புங்குடுதீவு மாணவி வித்தியா படுகொலை வழக்கில் தொடர்புடைய உப பொலிஸ் பரிசோதகர் சுந்தரேஸ்வரன் சிறிகஜன் >> 04

## நாவற்குழி விகாரை சீரமைப்புக்கு வடக்கு அரசியல்வாதிகளே தடை

குற்றம் சாட்டுகின்றார் விகாராதிபதி

கொழும்பு, ஜூலை 19
வடக்கில் உள்ள சில தீவிரப் போக்குடைய அரசியல் >> 24

# தீர்வை அடைய கூட்டரசின் ஆட்சி நீடிக்கவேண்டும்

சிங்கப்பூர் அயலுறவு அமைச்சரிடம் நேற்றுச் சுட்டிக்காட்டினார் சம்பந்தன்

கொழும்பு, ஜூலை 19
ஐக்கிய தேசியக் கட்சியும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் தங்களது பிரச்சினையை ஒரு பக்கம் ஒதுக்கிவைத்துவிட்டு இனப் பிரச்சினைக்குத் தீர்வைக் காண்பதற்கு ஒன்றிணைந்து செயற்படவேண்டும். இல்லாவிடின் ஒருபோதும் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியாது. அனைத்து மக்களும் சமத்துவத்துடன் வாழ்வதற்குப் புதிய அரசமைப்பு உருவாக்கப்படுவதற்குப் பன்னாட்டுச் சமூகம் உறுது >> 05



முச்சந்தி முரளி



கறை படியாத கைகளை மாகாண சபையில் தேடித்தான் பிடிக்க வேண்டும்...

## மாணவியை வீடு புகுந்து கடத்திச் செல்ல முயற்சி!

மடக்கிப் பிடிக்கப்பட்டவர் நையப்புடைப்பு இமையாணனில் நேற்றுச் சம்பவம்

கரணவாய், ஜூலை 19
வீடு புகுந்து மாணவியைக் கடந்த முயன்ற குழுவை ஊர் இளைஞர்கள் மடக்கிப் பிடித்தனர். அவர்களை நன்றாகக் கவனித்த பின்னர் >> 05

## மல்யுத்த களமாக மாறியது வடமத்திய மாகாண சபை

கொழும்பு, ஜூலை 19
வடமத்திய மாகாண அவைத் தலைவர் பி.எம்.ஆர்.சிறிபாலவுக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரே >> 05



வடமராட்சி கிழக்கில் தீவிரமடைந்துள்ள

## மணல் கடத்தலைத் தடுக்க சிறப்புப் பொலிஸ் குழு களத்தில்

>> 04

கொலையில் சம்பந்தப்பட்டவர் என்று கூறி

## சிவநேசனை நிராகரித்துவிட்டு விந்தனுக்கு மட்டும் பதவியா?

முதலமைச்சரிடம் எதிர்ப்புக் குரல்கள் பதிவு

யாழ்ப்பாணம், ஜூலை 19
வடக்கு மாகாணப் போக்குவரத்துத் துறை அமைச்சர் பா.டெனீஸ்வரனைப் பதவி விலக்கினால் அவரது இடத்துக்கு அடுத்த அமைச்சரை நியமிப்பது தொடர்பில் சிக்கல்கள் தோன்றியுள்ளன. கொலைச் சந்தேகநபர் எனக் குறிப்பிடப்படக்கூடிய >> 06

## டெனீஸ்வரனை நீக்கி விந்தனை நியமியுங்கள்

சிறிகாந்தா நேற்று முதலமைச்சருக்குக் கடிதம்

யாழ்ப்பாணம், ஜூலை 19
வடக்கு மாகாண அமைச்சரவையில் தமது கட்சியின் சார்பில் அமைச்சராக >> 06

## இம்முறையும் ஏமாற்றம்தான் கேப்பாபிலவு மக்கள் விசனம்

இன்று விடுவிக்கப்படும் காணிகளில் மக்கள் குடியிருப்புக்களே இல்லை

யாழ்ப்பாணம், ஜூலை 19
கடந்த காலத்தைப் போன்றே இம்முறையும் நாம் ஏமாற்றப்பட்டுள்ளோம். கேப்பாபிலவில் இன்று விடுவிக் கப்படுவ தாகச் சொல்லப்படும் காணிகளில் மக்கள் குடியிருப்பு இல்லை. போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்களின் எந்த நிலமும் விடு >> 06

## அமைச்சர் யார்? இன்றே முடிவு

கூறுகிறார் ரெலோ தலைவர் செல்வம்

யாழ்ப்பாணம், ஜூலை 19
எமது கட்சியின் சார்பில் யாரை அமைச்சராக நியமிப்பது என்பது குறித்து இன்றுதான் நாம் முடிவை அறிவிப்போம்.
இவ்வாறு ரெலோ அமைப் >> 06

முறாவோடை சக்தி வித்தியாலய

## விளையாட்டு மைதானக் காணி முஸ்லிம் நபர்களால் அபகரிப்பு!

எதிர்ப்புத் தெரிவித்து மாணவர்கள், கிராம மக்கள் நேற்று ஆர்ப்பாட்டம்

மட்டக்களப்பு, ஜூலை 19
முறாவோடை சக்தி வித்தியாலயத்தின் விளையாட்டு மைதானக் காணி முஸ்லிம் தனிநபர்களால் அபகரிக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்து நேற்று மாணவர்கள், பெற்றோர்கள், கிராம மக்கள் இணைந்து >> 06

### பிரச்சினையைத் தீர்க்க 10 நாள்களே அவகாசம்

அதிகாரிகளை எச்சரிக்கிறார் சுமணரத்தின தேரர்

மட்டக்களப்பு, ஜூலை 19
மட்டக்களப்பு முறாவேடை சக்தி வித்தியாலய மைதானக் >> 06

## தமிழ் அரசியல் கைதிகளைச் சந்திக்க ஐ.நா. நிபுணரை அனுமதித்தது யார்?

அமைச்சரவைக் கூட்டத்தில் மைத்திரிபால கேள்வி

யாழ்ப்பாணம், ஜூலை 19
தமிழீழ விடுதலைப் புலிச் சந்தேக நபர்களைச் சந்திப்பதற்கு, ஐ.நா. சிறப்பு அறிக்கையாளருக்கு அனுமதி வழங்கியது யார் என்று, அரச தலைவர் >> 06





முல்லைத்தீவு, பாண்டியன்குளம் மகா வித்தியாலயத்தில் மாணவத் தலைவர்களுக்கான சின்னம் சூட்டும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது. பாடசாலை அதிபர் த.அருமைநாயகம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக வட மாகாண சபையின் பிரதி அவைத்தலைவர் கமலேஸ்வரன் கலந்து கொண்டார். (ந-ஐ)

## சிவாஜி தெரிவித்த கருத்துக்காக செய்தியாளரிடம் விசாரணை

யாழ்ப்பாணம், ஜூலை 19

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நாளில் முல்லைத்தீவுக்கு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன வரக்கூடாது என்று வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் பத்திரிகையாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தமை தொடர்பில் செய்தியாளர் ஒருவரிடம் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நேற்று இரண்டு மணி நேரம் விசாரணை நடத்தியுள்ளனர்.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நாளான மே 19ஆம் திகதி, அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன முல்லைத்தீவுக்கு வரக் கூடாது எனவும், அவர் வந்தால் கறுப்புக்கொடி காட்டி எதிர்ப்பு வெளியிடப்படும் எனவும், வடக்கு மாகாணசபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம், மே மாதம் 8ஆம் திகதி நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில் கூறியிருந்தார்.

இந்தச் செய்தி கொழும்புத் தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகியிருந்தது. குற்றப் புலனாய்வுப் பிரிவினர் அந்தச் செய்தியை தொலைக்காட்சிக்கு வழங்கினார் என்று கூறப்படும் யாழ்ப்பாணப் பிராந்திய செய்தியாளரை விசாரணைக்கு வருமாறு கொழும்புக்கு அழைத்திருந்தனர்.

தனது உடல்நிலை காரணமாக கொழும்புக்கு வரமுடியாது என்று செய்தியாளர் தெரிவித்திருந்த நிலையில், குற்றப் புலனாய்வுப் பிரிவினர், அச்சுவேலிப் பொலிஸ் நிலையத்தில் செய்தியாளரை நேற்று வருமாறு அழைத்திருந்தனர். நேற்றுக் காலை 10 மணியிலிருந்து 12 மணி வரை விசாரணை நடத்தினர். செய்தியாளர் வழங்கிய வாக்குமூலம் சிங்கள மொழியிலேயே பதிவு செய்யப்பட்டது. (ந-5)

## காணி நடுவர் சபை அடுத்த மாதம் முதல் யாழ்ப்பாணத்தில்

யாழ்ப்பாணம்,ஜூலை 19

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைக்கு அமைய யாழ். மாவட்டத்துக்கான சிறப்பு (காணி) நடுவர் சபை எதிர்வரும் முதலாம் திகதி முதல் யாழ்ப்பாணத்தில் இயங்கும்.

இவ்வாறு ஆசிய அபிவிருத்தி நிதிய நிபுணத்துவ ஆலோசகர் சட்டத்தரணி எம்.திருநாவுக்கரசு தெரிவித்தார்.

யாழ்.மாவட்டக் காணி சம்பந்தமான சிறப்பு மத்தியஸ்த சபையை நடைமுறைப்படுத்தல் தொடர்பான சிறப்புக் கூட்டம் யாழ். மாவட்டச் செயலகத்தில் நேற்று நடைபெற்றது.

அதில் கலந்து கொண்டு கருத்துரை வழங்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது சாதாரண சனசமூக மத்தியஸ்தசபை யாழ்.மாவட்டத்தில் 15 இடங்களில் இயங்குகின்றது. அவை 5 லட்சம் ரூபாவுக்கு உட்பட்ட பிணக்குகளை ஆராயலாம். ஆனால் காணி சம்பந்தமான சிறப்பு மத்தியஸ்த சபை 20 லட்சம் ரூபாவுக்கு மேற்பட்ட காணிப் பிணக்குகளை ஆராயலாம். இதற்கென சிறப்பு நிபுணத்துவம் பெற்ற பயிற்றுவிக்கப்பட்ட 27 சிறப்பு காணி சம்பந்தமான நடுவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

வெளிநாட்டில் புலம்பெயர்ந்துள்ளவர்களது காணிப்பிணக்குகளும் தீர்த்து வைக்கப்படும். எதிர்வரும் முதலாம் திகதி முதல் காணி சம்பந்தமான சிறப்பு மத்தியஸ்தசபை யாழ்.மாவட்டத்தில் தோற்றம் பெறும். விரைவில் தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர் விவரம் வர்த்தமானியில் பிரசுரமாகும் என்றார். (ந-ஐ-50)

## படகு சேதமாக்கப்பட்டமைக்கு எதிர்ப்பு

# மீனவர்களை பிடித்துவைத்து மணற்காட்டில் போராட்டம்

## இழப்பீடு வழங்கப்பட்டதால் பின்னர் கைவிடப்பட்டது

மணற்காடு, ஜூலை 19

மணற்காட்டு மீனவரின் படகுக்கு சேதம் விளைவிக்கப்பட்டமைக்கு நீதி கோரி, மணற்காட்டு மீனவர்கள் கடற்கரைப் பிரதேசத்தில் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மணற்காட்டுப் பகுதியைச் சேர்ந்த கடற்றொழிலாளர் ஒருவர் மீன்பிடிப்பதற்காக நேற்று முன்தினம் இரவு கடலுக்குச் சென்றார். அந்தவேளையில் கடல் அட்டை பிடித்துக் கொண்டிருந்த மீனவர்களின் படகு ஒன்று மீன் பிடிக்கச் சென்ற படகை மோதி சேதம் விளைவித்து விட்டு தப்பிச் சென்றது. படகில் இருந்த மீனவருக்கும் காயம் ஏற்பட்டது. அன்று இரவு மந்திகை ஆதார மருத்துமனையில் அவர் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டார்.

இந்தச் சம்பவத்தை அடுத்து நேற்று அதிகாலை கடல் அட்டை பிடித்துக் கொண்டிருந்த மீனவர்கள் 6 பேரையும் அவர்களது 2 படகுகளையும் கைப்பற்றிய மீனவர்கள் அவற்றை விடுவிக்க முடியாது. அவர்களை விடுதலைசெய்யவேண்டுமாயின் எமக்கு நட்ட ஈடு தரவேண்டும் என்று தெரிவித்து அமைதியான வழியில் போராட்டத்தை ஆரம்பித்தனர்.

கடலட்டை பிடித்த படகுக்கு உரிமையாளர் புத்தளம் பகுதியைச் சேர்ந்தவர் எனத் தெரிவிக்கப்பட்டது. போராட்டத்தின் இடையில் படகு உரிமையாளர் நட்ட ஈடு தரப்படும் என்று தெரிவித்தார். 50 ஆயிரம் ரூபா படகு சேதத்துக்கும், 20 ஆயிரம் ரூபா சங்கச் செலவுக்கும், 10 ஆயிரம் ரூபா காயம் ஏற்பட்ட நபருக்கும் என 80 ஆயிரம் ரூபா இழப்பீடாக வழங்கப்பட்டது. இழப்பீட்டை பெற்றுக் கொண்ட பின்னர் போராட்டம் கைவிடப்பட்டது. (ந-ஐ-10,26)

## மனைவி மீது தாக்குதல்; கணவருக்கு விளக்கமறியல்

தென்மராட்சி, ஜூலை 19

மனைவியைத் தாக்கி காயப்படுத்திய குற்றச்சாட்டில் சந்தேகநபரான கணவனை விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்று நேற்று உத்தரவிட்டது.

கணவனின் தாக்குதலுக்கு இலக்கான பெண் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தார். பொலிஸாருக்கு வழங்கிய முறைப்பாட்டின் பிரகாரம் பெண்ணின் கணவரை சாவகச்சேரி பொலிஸார் கைது செய்தனர்.

பொலிஸார் சாவகச்சேரி நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தனர். வழக்கை விசாரித்த நீதிவான் சந்தேகநபரை எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (ந-ஐ-9)

## விபத்தில் மாணவர்கள் 10 பேர் காயம்

கொழும்பு, ஜூலை 19

கினிகத்தேன கண்டி பிரதான சாலையில் பகதொழுவ பகுதியில் இடம்பெற்ற பேருந்து விபத்தில் பாடசாலை மாணவர்கள் 10 பேர் படுகாயமடைந்தனர் என்று கினிகத்தேன பொலிஸார் தெரிவித்தனர். இந்த விபத்து பகதொழுவப் பகுதியில் நேற்றுக் காலை நடந்துள்ளது.

பகதொழுவையிலிருந்து நோட்டன் பிரிட்ஜ் வரை சேவையில் ஈடுபடும் இ.போ. சபைக்கு சொந்தமான பேருந்து பாடசாலை மாணவர்களை ஏற்றி வந்த போது, நாவலப்பிட்டியிலிருந்து கினிகத்தேன நோக்கி பயணிகளை ஏற்றி வந்த தனியார் பஸ் முந்திச்செல்ல முற்பட்டது. அதன் போதே விபத்து ஏற்பட்டுள்ளது.

விபத்தில் கடவளை வித்தியாலயத்தில் கல்வி கற்கும் மாணவர்கள் 10 பேர் காயமடைந்து கினிகத்தேன மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். மேலதிக சிகிச்சைக்காக மாணவர்கள் மூவர் நாவலப்பிட்டி மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளனர் என்று கினிகத்தேன பொலிஸார் தெரிவித்தனர். (ந-ஐ)



## கல்வியங்காடு சந்தைக்கு நேரில் சென்ற முதல்வர்

### *குறைபாடுகளை ஆராய்ந்தார்*

யாழ்ப்பாணம், ஜூலை 19

கல்வியங்காடு பொதுச் சந்தையில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பாக ஆராய்வதற்காக.வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் நேற்று நேரில் சென்றார். மு.ப. 10 மணியளவில் அங்கு சென்ற முதலமைச்சர் அங்குள்ள பிரச்சினைகள் தொடர்பாகக் கேட்டறிந்தார்.

2015 தொடக்கம் மாநகர சபைக்கு முறையிட்டும் உரிய வசதி செய்து தரப்படவில்லை. மலசல கூட வசதிகள் சீரில்லை. உரிய முறையில் சந்தை சுத்தப்படுத்தப்படுவதில்லை. சந்தைத் கட்டடத் தொகுதியில் மேல் மாடியில் அமைந்துள்ள கடைகள் ஒப்பந்த அடிப்படையில் கொடுக்கப்பட்டுள்ளது. ஆனால் அவை திறக்கப்படுவதில்லை. அவற்றை வேறு ஆள்களுக்கு மாற்றிக் கொடுக்க வேண்டும் என்று சந்தை வியாபாரிகளும், பொதுமக்களும் முதலமைச்சரிடம் கோரிக்கை விடுத்தனர்.

நீர் வசதி, சுகாதார விடயங்களை உடன் நடைமுறைப் படுத்தவேண்டும் என்று மாநகர சபை அதிகாரிகளுக்குப் பணித்த முதலமைச்சர் அது தொடர்பாக 3 நாள்களுக்குள் தனக்கு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் என்று உத்தரவிட்டார்.

கல்வியங்காடு பொதுச் சந்தை வியாபாரிகள் விடுத்த கோரிக்கையை அடுத்தே முதலமைச்சர் அங்கு நேரில் சென்று ஆராய்ந்தார் என்று தெரிவிக்கப்பட்டது. (ந)

## பகிடிவதை நிரூபிக்கப்பட்டால் கற்றலுக்கு முற்றாகத் தடை

### *கல்வி இராஜாங்க அமைச்சர் எச்சரிக்கை*

நுவரெலியா, ஜூலை 19

பத்தனை ஸ்ரீ பாத கல்வியியல் கல்லூரியில் அண்மையில் இடம்பெற்ற பகிடிவதை தொடர்பாக விசாரித்த ஒழுக்காற்றுக் குழு பரிந்துரைகளை முன்வைத்துள்ளது. அதில் முழுமையான விசாரணைகளின் பின்பு குற்றம் நிரூபிக்கப் படும் மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளை முழுமையாக இடைநிறுத்த முடியும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தப் பரிந்துரைகளை நான் ஏற்றுக் கொள்கிறேன்.

இவ்வாறு கல்வி இராஜாங்க அமைச்சர் வேலுசாமி இராதாகிருஸ்ணன் தெரிவித்தார்.

ஊடகங்களுக்கு நேற்றுக்கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது

பத்தனை ஸ்ரீ பாத கல்வியியல் கல்லூரியில் அண்மையில் இடம்பெற்ற பகிடிவதை தொடர்பாக கல்லூரியின் ஒழுக்காற்றுக் குழு அறிக்கை சமர்ப்பித்துள்ளது. கடந்த 6 ஆம் திகதி மாலை இடம்பெற்ற சம்பவம் தொடர்பாக இனம் காணப்பட்ட மாணவர்களை மீள் அறிவித்தல் வழங்கப்படும் வரை கல்லூரிக்குள் பிரவேசிப்ப தற்கு தடை விதிக்கப்பட்டுள் ளது. தொடர்ந்து நடைபெறுகின்ற விசாரணைகள் மூலம் அவர்கள் குற்றவாளிகள் என நிரூபிக்கப்பட்டால் அவர்களின் கல்வி நடவடிக்கைகளை முற்றாக தடை செய்வதற்கும் ஒழுக்காற்று குழு தீர்மானித்துள்ளது.என்றார். (ந-ஐ-10)

# மாணவியைத் துர்நடத்தைக்கு உட்படுத்தியவருக்குச் சிறை

கொழும்பு,ஜூலை 19
திஸ்ஸமகாராம பிரதேசத்தில் வசிக்கும் பாடசாலை மாணவியைப் பலவந்தமாக துர்நடத்தைக்கு உட்படுத்திய குற்றச்சாட்டில் இளைஞன் ஒருவருக்கு 7 வருடங்கள் கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. பாதிக்கப்பட்ட மாணவிக்கு ஒரு இலட்சம் ரூபா நட்டஈடு வழங்க வேண்டும் என்றும் அம்பாந்தோட்டை மேல் நீதிமன்ற நீதிபதி அஜித் எம்.மாசிங்க நேற்று உத்தரவிட்டார்.
2008.02.22ஆம் திகதி சந்தேக நபர் அந்தப்பிரதேசத்தில் வசிக்கும் பாடசாலை மாணவியை துர்நடத்தைக்கு உட்படுத்திய பின்னர் தப்பிச் சென்றார். மாணவியின் வீட்டுக்குள் நுழைத்து பலவந்தமாக அவரைத் துர்நடத்தைக்கு உட்படுத்தினார் என்று சந்தேகநபர் மீது குற்றம் சுமத்தப்பட்டிருந்தது. பாதிக்கப்பட்ட மாணவி ஓடிச்சென்று, அயல் வீட்டுப் பெண்ணிடம் இது குறித்து கூறியுள்ளார். பின்னர், தாய் மற்றும் மாணவி ஆகியோர் திஸ்ஸமகாராம பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தனர்.
சந்தேக நபர், திஸ்ஸமகாராம காவல்துறை அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்டார். இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இளைஞனுக்கு 7 வருடங்கள் கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. 2 ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. அபராதத் தொகையைச் செலுத்தாவிட்டால் மேலும் 6 மாதச்சிறைத் தண்டனையும், பாதிக்கப்பட்ட மாணவிக்கு ஒரு இலட்சம் ரூபா நட்டஈடும், அதனை வழங்கத் தவறினால், 1 வருட சிறைத்தண்டனையும் அனுபவிக்கவேண்டும் என்று நீதிபதி உத்தரவிட்டார்.
(ற-ஜ)

# ஒருங்கிணைப்புக் குழு தீர்மானங்கள் கிடப்பில்

## கிளிநொச்சி மக்கள் விசனம்

கிளிநொச்சி, ஜூலை 19
பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் எடுக்கப்படுகின்ற தீர்மானங்கள் நடைமுறைப்படுத்தப்படுவதில்லை என்று கிளிநொச்சி மக்கள் குற்றஞ்சாட்டினர்.
கிளிநொச்சி கரைச்சி பிரதேச ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் இணைத் தலைவர்களான இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன், மாவை சேனாதிராசா, அங்கஜன் இராமநாதன் ஆகியோரின் இணைத் தலைமையில் நேற்று இடம்பெற்றது.
"எங்களின் காணிப் பிரச்சினை உள்ளிட்ட அடிப்படைப் பிரச்சினைகள் எவையும் தீர்த்து வைக்கப்படவில்லை. கடந்த வருடம் ஜனவரி மாதம் 25 ஆம் திகதி கூட்டுற வாளர் மண்டபத்தில் இடம்பெற்ற கூட்டத்தின் போது எங்களது பிரச்சினை தீர்க்கபடும் எனத் தீர்மானம் எடுக்கப்பட்டது. ஆனால் அந்தத் தீர்மானங்கள் எவையும் நிறைவேற்றப் படவில்லை. அதனால் தான் மக்களாகிய நாங்கள் வந்திருக்கின்றோம். எங்களுக்கு தீர்க்கமான முடிவு வேண்டும்" என்று கிளிநொச்சி நகர் கிராம மக்கள் தெரிவித்தனர்.
"கிளிநொச்சி நகர் மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் ஆராய்வதற்கு தனியான ஒரு கூட்டம் ஏற்பாடு செய்யப்படும். எதிர்வரும் ஓகஸ்ட் 15 ஆம் திகதிக்கு முன்னர் ஏற்பாடு செய்யப்படும். அங்கு குறித்த மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் ஆராய்ந்து முடிவெடுக்கப்படும்" என்று நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா தெரிவித்தார்.
கூட்டத்தில் வீட்டுத்திட்டம், கல்வி, சுகாதாரம், வாழ்வாதாரம், காணி, சமுர்த்தி உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் ஆராயப்பட்டன. ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன், வடக்கு மாகாண கல்வி அமைச்சர் சர்வேஸ்வரன், புனர்வாழ்வு அமைச்சர் அனந்தி சசிதரன், மாகாண சபை உறுப்பினர்களான குருகுல ராஜா, பசுபதி பிள்ளை, அரியரத்தினம் மற்றும் மக்கள் அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.
(ற-ஜ-10,35)

# நானுஓயா வன்முறை; 59 பேருக்கு பிணை

நுவரெலியா, ஜூலை 19
நானுஓயாவில் இடம்பெற்ற விபத்துக்கு பின்னரான வன்முறை சம்பவம் தொடர்பாகக் கைது செய்யப்பட்ட மற்றும் அழைப்பாணை பிறப்பிக்கப்பட்ட 59 பேருக்கு நேற்றுப் பிணை அனுமதி வழங்கப்பட்டது.
விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த 47 பேருக்கும், அழைப்பாணை பிறப்பிக்கப்பட்ட 12 பேருக்கும் பிணை அனுமதி வழங்கப்பட்டது.
நுவரெலியா நானுஓயா பகுதியில் ஜூன் மாதம் 15 ஆம் திகதி காலை 7 மணியளவில் இடம்பெற்ற விபத்தில் பாரவூர்தியுடன் மோதுண்டு சிறுமி ஒருவர் சம்பவ இடத்தில் உயிரிழந்தார். அதனைத் தொடர்ந்து நானுஓயா நகரில் அசாதாரண சூழ்நிலை ஏற்பட்டது பொது மக்கள் ஆத்திரமடைந்து அந்தப் பாரவூர்தியை தீ மூட்டினர். இந்த விடயம் தொடர்பாக நானுஓயா பொலிஸாரால் 42 பேர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர். அது தவிர 12 பேருக்கு நீதிமன்றில் முன்னிலையாகுமாறு அழைப்பானை விடுக்கப்பட்டிருந்தது.
(ற-ஜ-10)

# சர்வமதச் செயற்பாடுகள் முரண்பாட்டைத் தீர்க்கும்

## தேசிய சர்வமதப் பேரவை இணைப்பாளர் தெரிவிப்பு

மட்டக்களப்பு, ஜூலை 19
காலத்துக்குக் காலம் அரசியல் மாற்றங்கள் ஏற்படுகின்றன. அதன் விளைவாக உருவாகின்ற முரண்பாடுகளைச் சாதகமான முறையில் தீர்ப்பதற்கு சர்வமத செயற்பாடுகள் கைகொடுக்கும். இவ்வாறு தேசிய சமாதானப் பேரவையின் மட்டக்களப்பு மாவட்ட சர்வமதப் பேரவைக்கான இணைப்பாளர் இராசையா மனோகரன் தெரிவித்தார்.
மாவட்ட சர்வ மதப் பேரவையின் மாதாந்த ஒன்று கூடல் நிகழ்வு கல்லடி கிறீன் கார்டன் விடுதியில் நேற்று இடம்பெற்றது. அதில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது
முரண்பாடுகளும் அதன் பின் தொடர் விளைவாக வன்முறைகளும் உருவாவது இயல்பு. ஆயினும் அவற்றுக்கு கருத்துப் பகிர்வு, புரிந்துணர்வு, விட்டுக் கொடுப்பு, கௌரவம், மதிப்பளித்தல் மற்றும் ஆன்மிகச் செயற்பாடுகள் துணை புரியும். வன்முறைகளையும், அழிவுகளையும் தவிர்த்து அனைவரும் சமத்துவமாக அகிம்சை முறையில் வாழலாம். நீண்ட நெடுங்கால பிணக்குகளுக்கும் அறநெறிச் செயற்பாடுகளின் மூலம் வெற்றி பெறலாம். கடந்த கால வன்முறையின் விளைவாக ஏற்பட்ட இழப்பு அனுபவங்களிலிருந்து நாம் கற்றுக் கொண்ட பயன்மிக்க, பெறுமதி மிக்க பாடங்களைப் பிரயோகித்து இனிமேலும் அழிவுகள் வராமல் பாதுகாக்க சர்வமத ஒன்றியம் பாடுபடும். என்றார்.
(ற-ஜ-10)

# சாரதிகளிடையே முறுகல்; பயணிகள் அந்தரிப்பு

இ.போ.ச. மற்றும் தனியார் பேருந்துச் சாரதிகளிடையே ஏற்பட்ட முரண்பாட்டால், பேருந்துகளில் பயணித்த பயணிகள் அந்தரித்தனர்.
இந்தச் சம்பவம் சாவகச்சேரிப் பகுதியில் நேற்று இடம்பெற்றது. யாழ்ப்பாணத்தில் இருந்து வவுனியாவுக்குச் சென்ற இ.போ.ச. பேருந்து, தனியார் பேருந்துக்கு வழிவிடாது பயணித்ததாலேயே சாரதிகளிடையே வாக்குவாதம் ஏற்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. பயணிகள் இது தொடர்பாக சாவகச்சேரி பொலிஸாருக்கு அறிவித்தனர். சம்பவ இடத்துக்கு வந்த பொலிஸார் இ.போ.ச. பேருந்தை சாவகச்சேரி பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு சென்றனர் என்று கூறப்படுகிறது. அந்தப் பேருந்தின் பயணிகள் மாற்றுப் பேருந்தில் பயணம் செய்தனர்.
(ற-ஜ)



# ஆசிரியர் மீதான தாக்குதலை கண்டித்து நேற்று ஆர்ப்பாட்டம்

வவுனியா,ஜூலை 19
வவுனியா, செட்டிகுளம் முதலியார்குளம் பாடசாலை ஆசிரியர் தாக்கப்பட்டமையைக் கண்டித்தும், குற்றவாளிகளை கைது செய்யக் கோரியும் நேற்றுக் காலை ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. பாடசாலை முன்னாள் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் இணைந்து ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர். "ஆசிரியர்களின் பாதுகாப்பை உறுதி செய், பொலிஸாரே குற்றவாளி களைக் கைது செய்" என எழுதப்பட்ட பதாகைகளை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் ஏந்தியிருந்தனர். கோசங்களையும் எழுப்பினர். சம்பவ இடத்துக்கு வந்த செட்டிகுளம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மற்றும் கோட்டக் கல்வி அதிகாரி ஆகியோர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களுடன் கலந்துரையாடினர்.
தாக்குதல் நடத்திய நபர்கள் மூன்று தினங்களுக்குள் கைது செய்யப்படுவார்கள் என அவர்கள் உறுதிமொழி வழங்கினர். அதன்பின்னர் ஆர்ப்பாட்டம் கைவிடப்பட்டது. நேற்று பாடசாலை முடிவடைந்து ஆசிரியர் விடுதிக்குத் திரும்பிச் சென்ற ஆசிரியரை இளைஞர்கள் நால்வர் வழிமறித்தனர். அவரை இரும்புக் கம்பியால் கடுமையாகத் தாக்கியிருந்தனர். காயமடைந்த ஆசிரியர் வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.
(ற-ஜ-402)

# உமா ஓயா திட்ட அறிக்கை அமைச்சரவையில்

கொழும்பு, ஜூலை 19
உமா ஓய திட்டம் தொடர்பாக ஆராய்ந்த அமைச்சர்கள் உள்ளடங்கிய குழுவின் அறிக்கை அமைச்சரவையில் நேற்றுச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்று அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.
உமா ஓய திட்டம் தொடர்பில் ஆராய்ந்து அறிக்கை ஒன்றை சமர்ப்பிப்பதற்காக அரச தலைவரால் குழுவொன்று நியமிக்கப்பட்டது. அமைச்சர்களான மகிந்த அமரவீர, பாட்டலி சம்பிக்க ரணவக்க, விஜித் விஜயமுனி சொய்சா ஆகியோர் அடங்கிய குழு திட்டம் தொடர்பாக ஆராய்ந்தது.
பண்டாரவளை நகர் மற்றும் உமா ஓய திட்டம் முன்னெடுக்கப்படுகின்ற பகுதிகளை குழு மேற்பார்வை செய்தது. அது தொடர்பில் அறிக்கையிட்டு அந்த அறிக்கை அமைச்சரவையில் சமர்ப்பித்துள்ளது. திட்டத்தால் பாதிக்கப்பட்ட வீடுகளுக்கு நட்ட ஈடு வழங்கல் மற்றும் நீர்ப் பிரச்சினைக்கு தீர்வு பெற்றுக்கொடுத்தல் போன்ற யோசனைகள் அந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன என்று அமைச்சர் குறிப்பிட்டார்.
(ற-ஜ-10)

# சீரான சாலைகள் அமைந்தாலே கிராமம் துரித வளர்ச்சி பெறும்

## வடக்கு மாகாணப் போக்குவரத்து அமைச்சர் டெனீஸ்வரன் சுட்டிக்காட்டு

வவுனியா, ஜூலை 19
ஒரு கிராமத்தின் வளர்ச்சி சாலை மற்றும் போக்குவரத்திலேயே தங்கியுள்ளது. இவை இரண்டும் சீராக இருக்கும் பட்சத்தில் அந்தக் கிராமம் வளர்ச்சியடையும்.
இவ்வாறு வடக்கு மாகாண போக்குவரத்துத் துறை அமைச்சர் டெனீஸ்வரன் தெரிவித்தார்.
வவுனியா கோவில்குளம் சாலையில் புதிதாக அமைக்கப்பட்ட சமணங்குளம் பாலத்தின் திறப்பு விழா நேற்று நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது
சாலை சீராக இருக்குமாயின் அந்தக் கிராமத்திலுள்ளவர்கள் தமது விவசாய செய்கைகளை விரைவாகச் சந்தைப்படுத்த முடியும். அதே போல போக்குவரத்துச் சீராக இருக்குமாயின் அவர்கள் தமது விவசாயப் பொருள்களை காலதாமதமின்றி சந்தைப்படுத்த முடியும்.
இந்தப் பகுதி மக்கள் போக்குவரத்தில் எதிர் கொண்ட பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட்டுள்ளது. மக்கள் பெரிதும் நன்மையடைவார்கள். உங்களுக்கு சேவை செய்வதற்கே நாம் தெரிவு செய்யப்பட்டுள்ளோம். நாங்கள் பணிகள் மேற்கொள்ளவில்லை என்றால் நீங்கள் எங்களிடம் தாராளமாக கேள்விகளைக் கேட்கலாம். அதற்கு உங்களுக்கு உரிமையுண்டு.
என்றார். நிகழ்வில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கே. காதர் மஸ்தான், வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் மருத்துவர் ப. சத்தியலிங்கம், வடமாகணசபை உறுப்பினர்களான ஜி.ரி. லிங்கநாதன், செந்தில்நாதன் மயூரன், மற்றும் அப்பகுதியிலுள்ள கிராம அமைப்புக்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.
(ற-ஜ-10)

## நாணய நிதியம் இலங்கைக்கு 2ஆம் கட்ட கடன்

கொழும்பு, ஜூலை 19

பன்னாட்டு நாணய நிதியத்தின்விரிவாக்கப்பட்ட நிதிவசதிஎன்னும்திட்டத்தின் கீழ் இலங்கைக்கு இரண்டாம்கட்டமாக167.2மில்லியன் அமெரிக்க டொலர் கடனுதவி வழங்கப்படவுள்ளது.

மூன்றாண்டு வேலைத்திட்டத்தின் கீழ் 1.45 பில்லியன் அமெரிக்க டொலர் கடனுதவிவழங்குவதற்குக்கடந்த ஆண்டு ஜூன் மாதம் 03ஆம் திகதி பன்னாட்டு நாணய நிதியத்தினால் தீர்மானிக்கப்பட்டது.

அதன்படி முதற்கட்டமாக கடந்த வருடம் நவம்பர் 18ஆம்திகதி162.6மில்லின் அமெரிக்க டொலர் கடன் தொகை வழங்கப்பட்டது. இந்த நிலையில், இரண்டாம்கட்டமாக167.2மில்லியன் அமெரிக்க டொலர் வழங்கப்படவுள்ளது.

நிதித் தட்டுப்பாட்டைக் குறைத்தல், அந்நியச்செலாவணி கையிருப்பை மீளக் கட்டியெழுப்பல், பொருளாதார உறுப்பாட்டை ஏற்படுத்தல் போன்றவற்றுக்காக எளிய நியாயமான வரி முறை ஒன்றை அறிமுகப்படுத்துவதற்காகஇந்தக்கடன் தொகை வழங்கப்படவுள்ளது. (த)

## ஆடிப்பிறப்பு நிகழ்வு

வடக்கு மாகாண பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் ஆடிப்பிறப்பு விழாஇன்றுபுதன்கிழமை மு.ப. 10 மணிக்கு கோப்பாய் வடக்கு உக்கி வைரவர் ஆலயத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

(4,11)

# கொடிகாமம் கூட்டுறவுநகர்க் கிளை வடமாகாணத்தில் முதலிடம் பிடித்தது

தென்மராட்சி, ஜூலை 19

உலக கூட்டுறவு தினத்தைமுன்னிட்டு கூட்டுறவுச் சங்கங்களுக்கு இடையே மாகாண மட்டத்தில் நடத்தப்பட்ட போட்டியில் வடக்கு மாகாணத்தில் கொடிகாமம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கூட்டுறவு நகர்க்கிளை முதலாவது இடத்தையும் சங்கத்தின் கிராமிய வங்கி மூன்றாவது இடத்தையும் பிடித்துள்ளன.

கொழும்பு கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் மற்றும் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் அலுவலகத்தால் நடத்தப்பட்ட 95ஆவது உலக கூட்டுறவு தினத்தை முன்னிட்டு மாகாண மட்டத்தில் இயங்கும் கூட்டுறவு நகர்க் கிளைகள் மற்றும் கிராமிய வங்கிகள் ஆகியவற்றின் செயற்பாடுகளை ஆய்வு செய்து முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

இதில் கொடிகாமம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் ' கூட்டுறவு நகர் ' வடக்கு மாகாணத்தில் சிறந்த கூட்டுறவு நகர் என்ற முதலாவது விருதையும் சங்கத்தின் கிராமிய வங்கி மூன்றாவது இடத்துக்கான விருதையும் பெற்றுள்ளன என்று வடக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது'' என்று சங்கப் பொது முகாமையாளர் சி.தேவகுமார் தெரிவித்தார்.

(4-9)

# தாயிடம் நகைகளை பறித்ததாக இளைஞனுக்கு விளக்கமறியல்

யாழ்ப்பாணம், ஜூலை 19

தாயிடம் நகைகளை அபகரித்தார் என்ற குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட வடமராட்சியைச் சேர்ந்த இளைஞனை எதிர்வரும் 25ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதிவான் மன்று உத்தரவிட்டது.

முச்சக்கரவண்டி வாங்குவதற்காக சந்தேகநபர் தாயாரிடம் பணம் கேட்டுள்ளார். எனினும் அவருக்கு தாயார் பணம் கொடுக்க வில்லை. இதனால் அந்த இளைஞன் தாயாரிடம் இருந்த தங்க நகைகளை பறித்துக்கொண்டு வீட்டைவிட்டு ச் சென்றுள்ளார்.

இது தொடர்பில் தாயார் தனது மகனுக்கு எதிராக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தார். முறைப்பாட்டை பெற்றுக்கொண்ட பொலிஸார் அவரது மகனை நேற்றுமுன்தினம் கைதுசெய்தனர். சந்தேகநபர் பருத்தித்துறை நீதிவான் மன்றில் நேற்று முற்படுத்தப்பட்டார். அவரை எதிர்வரும் 25ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டது. (4,8,26)

# இளைஞனுக்கு மறியல் நீடிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 19

சிறுமியைக் கடத்திச் சென்று குடும்பம் நடத்திய குற்றச்சாட்டில் கைதாகிய இளைஞனின் விளக்கமறியல் எதிர்வரும் முதலாம் திகதிவரை நீடித்து பருத்தித்துறை நீதிவான் மன்று உத்தரவிட்டது.

வல்வெட்டித்துறைப் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட சிறுமியைக் கடந்த வருடம் 26 வயதுடைய இளைஞன் கடத்திச் சென்றார்.

அது தொடர்பில் சிறுமியின் உறவினர்களால் பொலிஸ் நிலைத்தில் முறையிடப்பட்டது. அவர் சிறுமியுடன் 6 மாதங்க ளுக்கு மேலாகத் தலை மறைவாகியிருந்தார். இந்த நிலையில் கடந்த ஏப்ரலில் அவர் கைது செய்யப்பட்டார். சிறுமியைக் கடத்தியதோடு, அவரை கர்ப்பமாக்கியதாக இளைஞன்மீது குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன. இவர் மீதான வழக்கு பருத்தித்துறை நீதிமன்றில் நேற்று விசாரணைக்கு வந்தது. அதன்போதே அவரது விளக்க மறியல் நீதிமன்றால் நீடிக்கப்பட்டது.

(4,26)

# இறுவட்டு வெளியீடு

சிவபுராண தெய்வீக இசை இறுவெட்டு அறிமுக விழா நாளை வியாழக்கிழமை பி.ப.2.30மணிக்கு இலங்கை வேந்தன் கல்லூரி மண்டபத்தில் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டது. இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் அ.உமாமகேஸ்வரன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுக்கு

முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரனும், மதிப்புறு விருந்தினர்களாக கல்வி அமைச்சின் முன்னாள் மேலதிகச் செயலாளர் எஸ்.தில்லை நடராஜாவும், மாகாணக் கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமாரும், சிறப்பு விருந்தினராக தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலய தலைவர் செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறுதிருமுருகனும் கலந்து கொள்வர். (4)

## விளையாட்டு விழா

யாழ்ப்பாணம், ஜூலை 19

மறுமலர்ச்சி மன்ற முன்பள்ளி மாணவர்களின் பாலர் விளையாட்டு விழா நாளை வியாழக் கிழமை பி.ப. 3 மணியளவில் பண்டத்தரிப்பு, காலையடியில் அமைந்துள்ள மறுமலர்ச்சி மன்ற மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

மறுமலர்ச்சி மன்றத்தின் தலைவர் சு. சுந்தரசிவம் தலைமையில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக மறுமலர்ச்சி மன்றத்தின் ஆரம்பகால உறுப்பினர் எஸ். நகுலேஸ்வரனும், மதிப்புறு விருந்தினராக மன்ற மூத்த உறுப்பினர் எஸ். ஜெகதீஸ்வரனும், சிறப்பு விருந்தினராக மன்ற நலன்விரும்பி இ. அற்புதராசாவும் கலந்து சிறப்பிப்பர் என்று தெரிவிக்கப்பட்டது.

(4)

## மழை பொழிய வேண்டி கனகாம்பிகைக்கு யாகம்

கிளிநொச்சி, ஜூலை 19

மழை வேண்டி இரணைமடு கனகாம்பிகை ஆலயத்தில் நேற்று யாகம் நடத்தப்பட்டது. ஆயிரத்து எட்டு இளநீர் கொண்டு கனகாம்பிகை அம் >> 23

## ஐ.நா. அரசியல் செயலர் இன்று கொழும்பு வருகை

**மைத்திரி, ரணில், சம்பந்தனைச் சந்திப்பார் கிழக்கு மாகாணத்துக்கும் அவர் பயணம்**



கொழும்பு, ஜூலை 19

ஐ.நா. பொதுச் செயலரின் அரசியல் விவகாரங் களுக்கான செயலர் ஜெப்ரி >> 06

# நிறுக்கும் கருவிகள் முத்திரையிடப்படும்

யாழ்ப்பாணம், ஜூலை 19

வலி.கிழக்குப் பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் இந்த வருடத்துக்கான நிறுவைகள் அளவைகள் நிறுக்கும் கருவிகள் முத்திரையிடல் நிகழ்வு எதிர்வரும் தினங்களில் இடம்பெறவுள்ளது. எனவே வலி.கிழக்குப்பிரதேசத்தைச் சேர்ந்த சகல வர்த்தகர்களும் (ப.நோ.கூ. சங்கங்கள், சந்தை வியாபாரிகள் உட்பட) நிறுவைகள் அளவைகள் நிறுக்கும் கருவிகளுக்கு முத்திரையிட்டுக்கொள்ளுமாறு சபையின் செயலாளர் யு.ஜெலீபன் அறிவித்துள்ளார்.

யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தின் அளவீட்டு அலகுகள் நியமங்கள் மற்றும் சேவைகள் பிரிவினால் இது முன்னெடுக்கப்படவுள்ளது.

அதன்படி, நாளையும் நாளைமறுதினமும் முற்பகல் 9 மணி தொடக்கம் 3 மணி வரையும் வலி.கிழக்கு பிரதேச சபையின் கோப்பாய் உபஅலுவலகத்திலும். எதிர்வரும் 24ஆம், 25ஆம் திகதிகளில் மு.ப. 9 மணிதொடக்கம் மாலை 3 மணி வரையும் வலி.கிழக்கு பிரதேச சபையின் அச்சுவேலி உப அலுவலகத்திலும், 27ஆம், 28 ஆம் திகதிகளில் முற்பகல் 9 மணி தொடக்கம் மாலை 3 மணி வரையும் வலி.கிழக்கு பிரதேச சபையின் உரும்பிராய் உப அலுவலகத்திலும் இடம்பெறவுள்ளது என்று வலி. கிழக்குப் பிரதேச சபைப் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார். (4)

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்...

## எஸ்.ஐ...

தலைமறைவாகிவிட்டார் என குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நேற்று ஊர்காவற்றுறை நீதிவான்மன்றில் அறிக்கை முன்வைத்தனர். "அவர் வெளிநாட்டுக்கு தப்பிச் செல்வதற்கு முயற்சிக்க முடியும். ஆகையால் அவர் நாட்டைவிட்டு வெளியேறத் தடை விதித்து கட்டுநாயக்க வானூர்தி நிலைய குடிவரவு, குடியகல்வுப் பிரிவுக்கு உத்தரவிட வேண்டும்" என்று குற்றப்புலனாய்வுப் பிரிவின் பொலிஸ் பரிசோதகர் நீதிவான் மன்றில் விண்ணப்பம் செய்தார்.

புங்குடுதீவு மாணவி வித்தியா சிவலோகநாதன் 2015ஆம் ஆண்டு மே 13ஆம் திகதி படுகொலை செய்யப்பட்டார். மாணவியின் கொலையின் முக்கிய சூத்திரதாரி எனத் தெரிவித்து புங்குடுதீவைச் சேர்ந்த சுவிஸ்குமார் கைது செய்யப்பட்டார். எனினும் அவர் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் வைத்துப் பொலிஸாரால் விடுவிக்கப்பட்டார்.

கைது செய்யப்பட்ட சுவிஸ்குமாரை நீதிவான் மன்றில் முற்படுத்தாமல் பொலிஸார் விடுவித்தமையால் பெரும் சர்ச்சை ஏற்பட்டது. சுவிஸ்குமாரிடம் பணம் பெற்றுத்தான் அவரை பொலிஸார் விடுவித்தனர் என்று குற்றச்சாட்டு எழுந்தது.

இந்தக் குற்றச்சாட்டை விசாரணை செய்த குற்றப்புலனாய்வுப் பிரிவின் வடக்கு மாகாண முன்னாள் மூத்த பிரதிப் பொலிஸ்மா அதிபர் லலித் ஜயசிங்கவைக் கடந்த வாரம் கைது செய்தனர். அவர் ஊர்காவற்றுறை நீதிவான் மன்றின் உத்தரவில் எதிர்வரும் 25ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இந்தநிலையில் சுவிஸ்குமாரை தப்பிக்க உதவினார் என்ற குற்றச்சாட்டில் உப பொலிஸ் பரிசோதகர் சிறிகஜனை கைது செய்ய குற்றப் புலனாய்வுப் பிரிவினர் முயற்சிகளை எடுத்த போதும் அவர் தலைமறைவாகிவிட்டார் என்று ஊர்காவற்றுறை நீதிவான் மன்றுக்கு நேற்று அறிவிக்கப்பட்டது.

"வித்தியா படுகொலை வழக்குடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் உப பொலிஸ் பரிசோதகர் சிறிகஜனை கைது செய்வதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டன. எனினும் அவர் தலைமறைவாகிவிட்டார். அவர் வெளிநாட்டுக்குத் தப்பிக்க முயற்சிக்கலாம். உப பொலிஸ் பரிசோதகர் சுந்தரேஸ்வரன் சிறிகஜன் நாட்டைவிட்டு வெளியேறத் தடை விதித்து கட்டுநாயக்க பன்னாட்டு வானூர்தி நிலைய குடிவரவு, குடியகல்வுப் பிரிவுக்கு உத்தரவிட வேண்டும்" என்று குற்றப்புலனாய்வுப் பிரிவின் பொலிஸ் பரிசோதகர் ஊர்காவற்றுறை நீதிவான் மன்றில் நேற்று விண்ணப்பம் செய்தார்.

அதனை ஆராய்ந்த நீதிவான், தடை உத்தரவை வழங்க நீதிமன்றப் பதிவாளருக்கு கட்டளையிட்டார்.

திருட்டு நகைகளைக் கொள்வனவு செய்பவர்களிடமிருந்து யாழ்ப்பாணப் பொலிஸார் சிலர் தரகுப் பணம் பெறுவதாக குற்றச்சாட்டு எழுந்திருந்தது. இதன் பின்னர், யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் பணியாற்றிக் கொண்டிருந்த உப பொலிஸ் பரிசோதகர் சிறிகஜன், வல்வெட்டித்துறைப் பொலிஸ் நிலையத்துக்கு இடமாற்றப்பட்டார். இது வழமையான இடமாற்றம் என்று பொலிஸ் தரப்பினர் தெரிவித்திருந்தனர்.

பொலிஸ் தலைமையகத்திடம் உரிய அனுமதியைப் பெற்றுக் கொள்ளாமல் அவர் இந்தியாவுக்குச் செல்ல முயன்ற போது கட்டுநயக்க வானூர்தி நிலையத்தில்மறித்து திருப்பி அனுப்பப்பட்டார். வித்தியா கொலை வழக்குடன் தொடர்புடையவர் என்பதால் அவர் திருப்பி அனுப்பப்பட்டார் என்று பொலிஸ் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்திருந்தது.

(வ-37)

## மணல்...

வடமராட்சி கிழக்கில் அதிகரித்துள்ள மணல் கொள்ளைச் சம்பவங்களை முறியடிக்கும் வகையில் காங்கேசன்துறை பொலிஸ் நிலைய உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் மாரசிங்க தலைமையில் 40க்கும் மேற்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர்கள் அங்கு கடமையில் ஈடுபடுத்தப்பட்டதுடன் ரோந்து நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படுகின்றன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

"வடமராட்சி வல்லிபுர ஆழ்வார் ஆலய வீதியிலிருந்து நாகர் கோவில் மருதங்கேணி வரையும் சிறப்பு ரோந்து பணியில் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர். 9 பொலிஸ் ஜீப் வாகனங்களும் இந்த நடவடிக்கைக்கு வழங்கப்பட்டுள்ளன. நேற்று காலை முதல் இரவு வரை ரோந்து நடவடிக்கைகள் இடம்பெற்றன. நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, காங்கேசன்துறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள் உட்பட 40க்கும் மேற்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர்கள் இந்த மணல் கடத்தல் முறியடிப்பு நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

உரிய அனுமதியுடன் மணல் ஏற்றிச் செல்லும் வாகனங்களும் சோதனையின் பின்னரே விடுவிக்கப்பட்டன" என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

பின்னணி

வடமராட்சி கிழக்கில் பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டில் இளைஞன் ஒருவர் கொல்லப்பட்டார். அந்த இளைஞன் மணல் கடத்தில் ஈடுபட்ட போதே சுட்டுக் கொல்லப்பட்டார் என்று பொலிஸார் குற்றஞ்சாட்டினர்.

இந்தச் சம்பவத்தைத் தொடந்து பொலிஸார் மணல் கொள்ளையைத் தடுக்கும் நடவடிக்கையை அங்கு முன்னெடுக்கவில்லை. இது தொடர்பில் பொது மக்களால் அரச அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டது. எனினும் மணல் கொள்ளை தடுக்கப்படவில்லை என்று வடமராட்சி மக்கள் குற்றஞ்சாட்டியிருந்தனர்.

(வ-21,26)

# எனது பதவி நீக்கம் திட்டமிட்ட ஒரு சதி

## *ரெலோ தலைமையைச் சாடுகிறார் வடக்கு அமைச்சர் டெனீஸ்வரன்*

விசாரணைக்குழு இரு அமைச்சர்களைத்தான் பதவி விலக வேண்டும்என்றுபரிந்துரைந்திருந்தபோதே, நான்குஅமைச் சர்களையும் மாற்றுவதற்கு ரெலோ அமைப்பின் தலைவர், முதலமைச்சருக்கு சம்மதம் தெரிவித்திருந்தார். பிழையே செய்யாதஎன்னைமாற்றுவதற்குஎமதுகட்சியின்தலைமை முன்னரே முடிவெடுத்து விட்டு, இப்போது யாப்பு விதிகளை மீறி விட்டதாகச் சப்பைக்கட்டுக் காரணங்களை புனைந்து கொண்டிருக்கின்றனர். பிழை செய்யாதவரை நீங்கள் திட்ட மிட்டுச் சதி செய்து வெளியே அனுப்புவதற்குரிய தண்டனை களைக் கடவுள் நிச்சயம் வழங்குவார்.

இவ்வாறு வடக்கு மாகாணப் போக்குவரத்து அமைச்சர் பா. டெனீஸ்வரன்தெரிவித்தார். வவுனியாவில்வைத்து ஊடகவி யலாளர்கள் நேற்று எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையி லேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

முதலமைச்சருக்குஎதிராகக்கையெழுத்திட்டமைதொடர்பில் விளக்கம் கோரி எனக்குக் கடிதம் அனுப்பப்பட்ட நேரத்தில், என்னைக் கட்சியிலிருந்து நீக்கியதாகத் தெரி வித்து அமைச் சரவையிலிருந்து நீக்குமாறு முதலமைச்சருக்குக் கட்சிச் செயலாளர் கடிதம் அனுப்பியிருந்தார்.

முதலமைச்சர் நியமித்த விசாரணைக்குழு என்னை விடு வித்தபின்னரும், நான்ஊழல்செய்யவில்லைஎன்றுதெரிந்த பின்னரும் என்னைப் பதவி நீக்க முதலமைச்சருக்கு எனது கட்சிஇணக்கம்தெரிவித்தது. கட்சியில்இருக்கின்றஅமைச்சர் ஊழல்செய்யவில்லைஎன்றால்அவரைப்பாதுகாக்கவேண் டும். ஆனால் அதைவிடுத்து என்னை அமைச்சுப் பதவியிலி ருந்து வெளியேற்றவேண்டும் என்பதில் கட்சித் தலைமை குறியாக இருந்தமையை இதிலிருந்து அறிய முடியும்.

நான் விசாரணைக்குழுவில் தோன்றமாட்டேன் என்பதால் எனக்கு எதிராக நடவடிக்கை எடுக்க முதலமைச்சர் காத்திருப் பதாகக் கூறியுள்ளார். விசாரணைக் குழு முன்பாக நான் தோன்றமாட்டேன் என்று சொல்லவில்லை. சட்டரீதியான சுயாதீனமான எந்தவொரு விசாரணைக் குழு முன்னிலையிலும் தோன்றுவதற்குத் தயாராக இருக்கின் றேன் என்று திரும்பத் திரும்பக் கூறியுள்ளேன். தெரிவுக் குழுவை அமைக்குமாறு முதலமைச்சரைக் கோரியிருந் தேன். அதைச் செய்யத் துணிவில்லாத முதலமைச்சர், நான் தன்னால் நியமிக்கப்படும் விசாரணைக்குழு முன்பாகத் தோன்றமாட்டேன் என்பதற்காக நடவடிக்கை எடுக்க முயற் சிக்கின்றார் - என்றார். (து-5)

# வலுச் சமநிலையில் கவனம் வேண்டும்

## மைத்திரியிடம் எடுத்துரைத்தார் சிங்கப்பூர் அயலுறவு அமைச்சர்

கொழும்பு, ஜூலை 19

பலம்பொருந்திய அயல்நாடுகளுக்குப்பக்கத் தில் உள்ள சிறிய நாடுகள் என்ற வகையில் சிங்கப்பூர் மற்றும் இலங்கை போன்ற நாடு கள்வெளிஉறவுகள்மற்றும்வலுச்சமநிலை யில்மிகுந்தகவனத்துடன்செயற்படவேண் டும்.

இவ்வாறு சிங்கப்பூர் அயலுறவுத்துறை அமைச்சர்விவியன்பாலகிருஸ்ணன், அரச தலைவர்மைத்திரிபாலசிறிசேனவிடம்எடுத் துரைத்துள்ளார்.

இலங்கைக்கு வந்துள்ள சிங்கப்பூர் அயலுற வுத்துறை அமைச்சர், அரச தலைவர் மைத் திரிபால சிறிசேனவை நேற்றுச் சந்தித்துப் பேச்சு நடத்தினார். இதன்போது அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார் என, அரச தலை வர் ஊடகப்பிரிவு அனுப்பிவைத்துள்ளபத்தி ரிகைச் செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

நல்லிணக்கத்தை பலப்படுத்துவதற்காக அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன மேற்கொண்டுவரும் முயற்சிகள் பாராட்டத் தக்கவை என்று அயலுறவுத்துறை அமைச் சர் கலாநிதி விவியன் பாலகிருஸ்னன் தெரி வித்தார்.

யாழ்ப்பாண நூலகத்திற்குச் சென்று நூல் களை அன்பளிப்பு செய்யவுள்ளதாகவும் நூலகஊழியர்களுக்குப்பயிற்சிவசதிகளை வழங்கும்உடன்படிக்கையில்கைச்சாத்திட வுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

யாழ்ப்பாண வைத்தியசாலையின் எலும்பு இயல் பிரிவுக்குச் சிங்கப்பூர் உதவவுள்ளதா கவும் அவர் கூறினார்.



சிங்கப்பூருக்கும் இலங்கைக்கும் இடையே நீண்டகாலமாக இருந்துவரும் இருதரப்பு உறவுகளைநினைவுகூர்ந்தஅரசதலைவர் மைத்திரிபால, யாழ்ப்பாண நூலகத்திற்கும் மருத்துவமனைக்கும்சிங்கப்பூர்வழங்கும் உதவிகளுக்கு நன்றி தெரிவித்தார். இலங் கையில் போர் இடம்பெற்ற காலப்பகுதியில் பன்னாட்டு மன்றங்களில் சிங்கப்பூர் இலங் கைக்கு வழங்கிய உதவிகளுக்கும் அரச தலைவர் நன்றி தெரிவித்தார்.

இலங்கையில்சிங்கப்பூர்முதலீடுகளைஅதி கரிப்பதற்கானநல்லவாய்ப்புகள்உள்ளதாக பாலகிருஸ்னன் தெரிவித்தார். சுற்றுலா மற் றும் உபசரிப்பு துறைகளில் சிங்கப்பூர் முத லீட்டார்களுக்கு நல்ல முதலீட்டுவாய்ப்புகள் உள்ளதாக அரச தலைவர் தெரிவித்த கருத் துக்கு பதிலளிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். இலங்கையில் ஏற்கனவே 300க்கும் மேற்பட்ட சிங்கப்பூர் முதலீடுகள் உள்ளதாககுறிப்பிட்டசிங்கப்பூர்அயலுறவுத் துறை அமைச்சர், சக்திவளம், நீர், கல்வி மற்றும்தொழில்நுட்பம்ஆகியதுறைகளிலும் சிங்கப்பூர் முதலீட்டாளர்கள் முதலீடுகளை செய்யும் வாய்ப்புகள் உள்ளதாக தெரிவித் தார் என்றுள்ளது. (து-5)

# வேலைதேடும் பட்டதாரிகள் சமூகத்தின் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜூலை 19

வட மாகாண வேலைதேடும் பட்டதாரிகள் சமூகத்தால் இன்று மிக முக்கியமான கலந்துரையாடல் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

வட மாகாண அபிவிருத்தி உத்தியோகத்தர், ஆசிரியர் நியமனங்கள் தொடர்பாக மிக முக்கியமான தீர்மானங்கள் எடுக்கப்பட வுள்ளன. அனைத்து வட மாகாண வேலைதேடும் பட்டதாரிகளையும் யாழ். மாவட்ட செயலகம் முன் காலை 9 மணிக்கு ஒன்று கூடுமாறு வட மாகாண வேலைதேடும் பட்டதாரிகள் சமூகம் கோரியுள்ளது. (ற-21)

# இசையமைப்பாளர் சோமபால காலமானார்

கொழும்பு, ஜூலை 19

சிங்கள மொழி இசையமைப் பாளர் சோமபால ரத்னாயக்க (வயது 69) நேற்று அதி காலை காலமானார்.

திடீர் சுகவீனம் காரணமாக கொழும்பு தேசிய மருத்துவம னையில் சேர்க்கப்பட்ட நிலையில் சிகிச்சை பய னின்றி நேற்று உயிரிழந் தார். (ற-ஐ)

# கந்தபுராண வசனம் நூல் வெளியீடு இன்று

## *அமைச்சர் சுவாமிநாதன் பங்கேற்பு*

யாழ்ப்பாணம், ஜூலை 19

நல்லைநகர் நாவலர் பெருமாள் படைத்தரு ளிய "கந்தபுராண வசனம்" என்னும் நூல் சைவப்பிரகாச பதிப்பகத்தினரின் முயற்சி யில்இந்துசமய கலாசார அலுவல்கள்திணைக் களத்தால் வெளியீடு செய்யப்படவுள்ளது.

இந்த நிகழ்வு இன்று புதன்கிழமை காலை 8 மணிக்கு நல்லூர் கந்தசுவாமி ஆலயத் தில் சிறைச்சாலை மறுசீரமைப்பு அமைச் சரும், மீள்குடியேற்றம் மற்றும் புனர்நிர் மாணம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சருமான டி.எம். சுவாமிநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது. (4)

## தொடர்ச்சிகள்...)

### *மல்யுத்த...*

ரணை யால் சு.க. உறுப்பினர்களுக்கும், ஐ.தே.க. உறுப்பினர்களுக்கும் இடையே கடும் மோதல் ஏற்பட்டது. சபை மல்யுத்த களமாக மாறியது.

அவைத் தலைவர் பி.எம்.ஆர்.சிறிபால மீது 8 குற்றச்சாட்டுக்கள் சுமத்தி ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த 11 உறுப்பினர்களால் முன் னர் சமர்ப்பிக்கப்பட்டிருந்த நம்பிக்கையில் லாப் பிரேரணை எதிர்ப்புகளை அடுத்து நிரா கரிக்கப்பட்டிருந்தது. நேற்று சபை கூடிய போது நம்பிக்கையில்லாப் பிரேரணையை உடனடியாக ஏற்றுக் கொள்ள வேண்டும் என்றும், புதிய அவைத் தலைவரை நிய மித்து சபை நடவடிக்கையை முன்கொண்டு செல்ல வேண்டும் என்றும் ஐ.தே.க. உறுப்பி னர்கள் கோசமிட்டனர்.

அவர்களின் கோரிக்கையை அவைத் தலை வர் நிராகரித்தார். எதிர்வரும் 8 ஆம் திகதி வரை சபை நடவடிக்கைகளை ஒத்திவைப்ப தாகவும் அறிவித்தார். ஆத்திரமடைந்த ஐ. தே.க. உறுப்பினர்கள் அவைத் தலைவரை முற்றுகையிட முயன்றனர். அதையடுத்து ஆளுங்கட்சியான சு.கவினருக்கும், எதிர்க் கட்சியினரான ஐ.தே.கவினருக்கும் இடையே மோதல் உருவானது.

ஐ.தே.க. உறுப்பினர்கள் செங்கோலை எடுத் துச் செல்ல முயன்றனர். இரு தரப்பினரும் ஒருவருக்கு ஒருவர் தாக்கத் தொடங்கினர். சபையில் இருந்த பொருள்கள் நாலாபுறமும் தூக்கியெறியப்பட்டன. மல்யுத்த களமாக மாறியது வடமத்திய மாகாண சபை.

அவைத் தலைவரை வலுக்கட்டாயமாக அவைத் தலைவர் ஆசனத்தில் அமர்த்துவ தற்கு எதிர்க்கட்சியினர் மேற்கொண்ட முயற்சி பயனளிக்கவில்லை. அவைத் தலைவர் பி.எம். ஆர்.சிறிபால சபையை விட்டுவெளியேறினார். எதிர்க்கட்சியினர் அவைத்தலைவராக ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த டி.எம்.அமரதுங் கவைப் பிரேரித்தனர். அவர் அவைத் தலை வர் ஆசனத்தில் அமர்ந்தார். எட்டுக் குற்றச் சாட்டுகள் அடங்கிய பி.எம்.ஆர்.சிறிபால மீதான நம்பிக்கையில்லாப் பிரேரணையை விவா தத்துக்குஎடுத்துக்கொள்ளநடவடிக்கைஎடுத்தார். நம்பிக்கையில்லாப் பிரேரணை எந்தவித எதிர்ப்பும் இன்றி நிறைவேற்றப்பட்டது.

அவைத் தலைவராக நியமிக்கப்பட்ட எதிர்க் கட்சி உறுப்பினர் டி.எம். அமரதுங்க சபை அமர்வை ஒத்திவைக்க நடவடிக்கை எடுத் தார். (ற)

### *மாணவியை...*

வல்வெட்டித்துறைப் பொலிஸாரிடம் ஒப்படைத் தனர். இந்தச் சம்பவம் நேற்று நடந்துள்ளது.

இமையாணன் கிழக்குப் பகுதியைச் சேர்ந்த பதின்ம வயதுடைய மாணவி ஒருவரைத் திருமணம் செய்வேன் என்று கூறி இளைஞர் ஒருவர் அழைத்துச் சென்றுள்ளார். பெற்றோர் வல்வெட்டித்துறைப் பொலிஸ் நிலையத்தில் அது தொடர்பில் முறைப்பாடு செய்தனர். இரு வரும் பொலிஸ் நிலையத்தில் சரணடைந்த னர். மாணவியின் வயதை அடிப்படையாகக் கொண்டு இருவரின் சம்மதத்துடன் பிரிந்து செல்ல பொலிஸார் அனுமதித்தனர். நேற்று அதிகாலை 12 மணியளவில் ஹைஏஸ் ரக வாகனத்தில் வந்த பெண்கள் இருவர் உட்பட 7 பேர் கொண்ட குழுவினர் இமையாணன் பகுதியில் உள்ள வீடொன்றின் சுற்றாடலில் உள்ள மின் விளக்குகளை அணைத்து வீட் டுக்குள் அத்து மீறி நுழைந்தனர். அவர்கள் வீட்டிலிருந்த வயோதிபப் பெண்ணைத் தாக் கினர். அங்கிருந்த மாணவியைக் கடத்த முயற்சி செய்தனர். அதனால் வீட்டில் இருந் தோர் அபயக் குரல் எழுப்பினர்.

அயலிலுள்ள இளைஞர்கள் ஒன்று கூடியதை அடுத்து தாக்குதல் மேற்கொண்டவர்கள் தப் பியோட முயற்சித்தனர். அவர்களைச் சுற்றி வளைந்த இளைஞர்கள் அவர்களில் இருவரை மடக்கிப் பிடித்தனர். ஏனையவர்கள் ஹை ஏஸ் வாகனத்தில் தப்பிச் செல்ல முயற்சித்த போது அவர்களையும்பிடித்தனர். அவர்களுக்கு முறை யான கவனிப்பு வழங்கிய பின்னர் வல்வெட்டித்துறைப் பொலிஸாரிடம் ஒப்ப டைத்தனர்.

இந்தக் கடத்தலுடன் தொடர்புடைய ஒருவர் தப்பியோடி தலை மறைவாகியுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது. இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வல்வெட்டித்து றைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்ற னர். மடக்கிப் பிடிக்கப்பட்டவர்கள் அனைவ ரும் தாவடிப் பகுதியைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டது. (ற-ஐ-10,108)

### *தீர்வை...*

ணையாக இருக்கவேண்டும். இவ்வாறு சிங் கப்பூர் அயலுறவுத்துறை அமைச்சர் கலாநிதி விவியன் பாலகிருஸ்ணனிடம் எடுத்துரைத் ததாக எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசி யக் கூட்டமைப்பின் தலைவருமான இரா. சம்பந்தன் தெரிவித்தார்.

இலங்கை வந்துள்ள சிங்கப்பூர் அயலுறவுத் துறை அமைச்சர், எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தனைக் கொழும்பிலுள்ள எதிர்க் கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று மாலை சந்தித்துப் பேச்சு நடத்தினார். இந்தச் சந்திப்பில் எதிர்க்கட்சித் தலைவருடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ. சுமந்திரனும் கலந்துகொண்டார். மாலை 4 மணிமுதல் 4.30 வரையான 30 நிமிடங்க ளில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்தாவது:

எமது மக்கள் எதிர்நோக்குகின்ற பல்வேறு பிரச்சினைகள் குறித்து இந்தச் சந்திப்பில் விரி வாகக் கலந்துரையாடினோம். மக்களின் காணிப் பிரச்சினை, காணாமல் ஆக்கப்பட் டோர் விவகாரம், வாழ்வாதாரம், மீள்குடி யேற்றம், அபிவிருத்தி உள்ளிட்ட விடயங்கள் குறித்துக் கலந்துரையாடினோம். வடக்கு, கிழக்கில் அபிவிருத்தியை ஏற்படுத்தி இளை ஞர்களுக்கு வேலைவாய்ப்பை வழங்குமாறு அயலுறவுத்துறை அமைச்சரைக் கேட்டுக் கொண்டோம்.

இலங்கையில் சகல மக்களும் சமாதானத்து டன் வாழ புதிய அரசமைப்பு கட்டாயம் நிறை வேற்றப்படவேண்டும் என்பதை வலியுறுத்தி னோம். ஒரு நியாயமான அரசியல் தீர்வு வரும்போதுதான் விமோசனம் ஏற்படும் என்பதுடன் நாட்டில் மாற்றம் ஏற்பட்டு சமத்து வத்துடன் வாழ முடியும்.

புதிய அரசமைப்பை நிறைவேற்ற ஐக்கிய தேசியக் கட்சியும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி யும் இணைந்து செயற்படவேண்டும். அவர் களுக்கு இடையிலான போட்டியைத் தூக்கி ஒருபக்கம் வைத்துவிட்டுத் தேசிய பிரச்சினை யைத் தீர்க்க அவர்கள் உதவவேண்டும்.

இரு தேசியக் கட்சிகளும் இணைந்து செயற் படாவிட்டால் தேசிய பிரச்சினையை ஒருபோ தும் தீர்க்கமுடியாது. அதற்குப் பன்னாட்டுச் சமூகம் உறுணையாக இருக்கவேண்டிய அவசியத்தை வலியுறுத்தினோம் - என்றார்.

கூட்டு அரசிலிருந்து சிறிலங்கா சுதந்திரக் கட்சி யினர் வெளியேறவேண்டும் என்ற கோரிக்கை வலுப்பெற்று வரும் நிலையிலேயே, எதிர்கட் சித் தலைவர் மேற்படி கருத்தை முன்வைத் துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (து-5)

## பிரச்சினையை...

காணிப் பிரச்சினைக்கு 10 நாள்களுக்குள் தீர்வு வழங்க வேண்டும். இல்லாவிடில் அதன் விளைவுகளைச் சந்திக்க அதிகாரிகள் தயாராக இருக்க வேண்டும்.

இவ்வாறு மட்டக்களப்பு மங்களராமய விகாராதிபதி அம்பிட்டியே சுமணரத்ன தேரர் எச்சரித்தார்.

முறாவோடை சக்தி வித்தியாலயத்தின் விளையாட்டு மைதான காணியில் முஸ்லிம் தனிநபர்கள் அத்துமீறிக் குடியமர்ந்துள்ளனர் என்று தெரிவித்து நேற்று ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. அதில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் தெரிவித்ததாவது:

முறாவோடையில் மட்டுமல்ல, கிழக்கு மாகாணம் முழுவதிலும் தமிழ் மக்களின் காணிகளை முஸ்லிம் மக்கள் சிலர் சட்ட விரோதமாக அபகரிக்கின்றனர். மக்கள் போராட்டம் நடத்துவதில் தவறில்லை. வருங்காலத்தில் பாடசாலையில் மாணவர் தொகை அதிகரிக்கும் போது பாடசாலையை விரிவுபடுத்த வேண்டும். அப்போது காணி தேவை. உரிய அதிகாரிகளுக்கு 10 நாள்கள் கால அவகாசம் வழங்குகிறேன்.

போரால் பாதிப்புகளுக்குள்ளான தமிழ் மக்கள் இன்று தனிமை நிலைக்குள் தள்ளப்பட்டுள்ளனர். தளவாய் பகுதியில் காணி அபகரிக்கப்பட்டுள்ளது. புனானையில் பல ஏக்கர் காணியில் ஆசியாவில் பெரிய முஸ்லிம் பல்கலைக் கழகம் அமைக்கப்படுகிறது - என்றார். (ற-ஜ-10)

## மர்மப்...

இடம்பெற்ற வெடிப்புச் சம்பவத்தில் 6 பாடசாலை மாணவிகளும், 2 மாணவர்களும் பாதிக்கப்பட்டுள்ளனர். டைனமற் வெடித்தமையால் இந்தப் பாதிப்பு ஏற்பட்டதா என்ற கோணத்தில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத் துள்ளனர்.

தென்பகுதியைச் சேர்ந்த மீனவர்கள், முகத்துவாரம் பகுதியில் டைனமற் பயன்படுத்தி மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபடுவதாகக் கிடைத்த தகவலையடுத்து, பொலிஸார் கடந்த சனிக்கிழமை அந்தப் பகுதியில் சல்லடை போட்டுத் தேடுதல் நடத்தியிருந்தனர். ஆனால் டைனமற் எதுவும் சிக்கவில்லை. அவற்றை மீனவர்கள் மறைத்தமையால் கண்டுபிடிக்க முடியாமல் போனதாகப் பொலிஸார் தெரிவித்திருந்தனர்.

இவ்வாறானதொரு நிலையில், நேற்றுச் செவ்வாய்க்கிழமை பாடசாலையை மாணவ மாணவியர் துப்புரவு செய்துள்ளனர். இதன் போது பொருள்களுடன் காணப்பட்ட உரப் பையை எடுத்துச் சென்று நெருப்பில் போட்டுள்ளனர். அது திடீரென வெடித்துள்ளது.

பாடசாலை மாணவிகள் 6 பேரும், 2 மாணவர்களும் அதிர்ச்சியடைந்து மயக்கநிலைக்குச் சென்றுள்ளனர். உடனடியாகவே மாஞ்சோலை வைத்தியசாலையில் அவர்கள் சேர்ப்பிக்கப்பட்டனர். (த-5-7-101)

## இம்முறையும்...

விக்கப்படவில்லை. இவ்வாறு கேப்பாபிலவில் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்கள் தெரிவித்தனர்.

கேப்பாபிலவு இராணுவ முகாம் அமைந்துள்ள பகுதியிலிருந்து 179 ஏக்கர் இன்று விடுவிக்கப் படவுள்ளது. மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் கலந்து கொண்டு இதனை மாவட்டச் செயலரிடம் ஒப்படைக்கவுள்ளார்.

இது தொடர்பில் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்களிடம் கேட்டபோது, பெருமளவான காணிகள் காட்டுப் பிரதேசம். அதனையே இன்று விடுவிக்கின்றார்கள். மத்திய வகுப்பினருக்குரிய சில காணித் துண்டுகளும் இன்று விடுவிக்கப்படுவதனுள் உள்ளடங்கியுள்ளன. கடந்த காலங்களிலும் இந்த அரசு, கேப்பாபிலவை விடுவிப்பதாகச் சொல்லி சீனியா மோட்டை, பிலக்குடியிருப்பையே விடுவித்தது. தற்போதும் அதே ஏமாற்று வேலையைத் தான் செய்கின்றது. போராட்டத்தில் ஈடுபட்டுள்ள எங்களின் காணிகள் விடுவிக்கப்படவேயில்லை என்று அவர்கள் கூறினர். (த-5-7)

## டெனீஸ்வரனை...

நியமிக்கப்பட்ட, பா.டெனீஸ்வரனை, அந்தப் பதவியில் இருந்து நீக்கிவிட்டு, மாகாணசபை உறுப்பினர் விந்தன் கனகரத்தினத்தை அமைச்சராக நியமிக்குமாறு, வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனுக்கு ரெலோ அமைப்பின் செயலாளர் என். சிறி காந்தா நேற்றுக் கடிதம் அனுப்பினார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளில் ஒன்றான ரெலோவின், சார்பில் வடமாகாண அமைச்சரவையில் இடம்பெற்றிருந்த பா.டெனீஸ்வரனை, தமது கட்சியின் ஒழுக்க விதிகளை மீறினார் என்பதால் கட்சியில் இருந்து நீக்கியுள்ளதாகவும், அவரை அமைச்சரவையில் இருந்து நீக்குமாறும் கோரி ரெலோ சார்பில் கடந்த 13ஆம் திகதி முதலமைச்சருக்குக் கடிதம் அனுப்பப்பட்டது. அதற்கு முதலமைச்சரும் உடனடியாகவே சாதகமான பதிலை அனுப்பியிருந்தார்.

இதையடுத்து, வவுனியாவில் கூடிய ரெலோ உயர்மட்டக் குழு டெனீஸ்வரனுக்குப் பதிலாக அமைச்சர் பதவிக்கு யாரை நியமிப்பது என்று ஆராய்ந்தது. அந்தக் கூட்டத்தில் முடிவெடுப்பதில் குழப்பம் ஏற்பட்டது.

இந்த நிலையில், வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனுக்கு, ரெலோ பொதுச் செயலர் சிறிகாந்தா அனுப்பியுள்ள கடிதத்தில், பா.டெனீஸ்வரனை அமைச்சர் பதவியில் இருந்து நீக்கிவிட்டு, அவருக்குப் பதிலாகத் தமது கட்சியைச் சேர்ந்த விந்தன் கனகரத்தினத்தை அமைச்சராக நியமிக்குமாறு கோரப்பட்டுள்ளது. (த-5-101)

## அமைச்சர்...

பின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

வடக்கு மாகாண சபை உறுப்பினர் விந்தன் கனகரத்தினத்தின் பெயரை, கட்சியின் செயலாளர் ந.சிறிகாந்தா முதலமைச்சருக்கு எழுத்துமூலமாக அறிவித்துள்ளமை தொடர்பில் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

எமது கட்சியின் சார்பில் அமைச்சராக யாரை நியமிப்பது என்பது தொடர்பில் நாளை (இன்றுதான்) அறிவிக்கப்படும். எமது கட்சியின் உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் பத்திரிகையாளர் சந்திப்பு நடத்தி அதனைத் தெரியப்படுத்துவார் - என்றார். (த-5-101)

## தமிழ்...

மைத்திரிபால சிறிசேன கேள்வி எழுப்பியுள்ளார்.

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தலைமையில் அமைச்சரவைக் கூட்டம் நேற்று நடைபெற்றது. இதில் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கேட்டுள்ளார்.

இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டிருந்த ஐ.நா.வின் சிறப்பு அறிக்கையாளர் பென் எமர்சன், அநுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளைச் சந்தித்திருந்தார். அதேபோன்று விடுவிக்கப்பட்ட தமிழ் அரசியல் கைதிகளையும் சந்தித்துக் கலந்துரையாடியிருந்தார். இவ்வாறான பின்னணியிலேயே, அரச தலைவர் இந்தக் கேள்வியை எழுப்பியுள்ளார்.

இதேவேளை, ஐ.நா. அறிக்கையாளருக்கும், நீதி அமைச்சருக்கும் இடையில் கடும் வாக்குவாதம் நடைபெற்றிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (த-5)

## சிவநேசனை...

ஒருவரை அமைச்சராக நியமிக்க முடியாது என்று முதலமைச்சர் நிராகரித்த நிலையில் அடுத்த அமைச்சர் விடயத்திலும் அதுவே பிரச்சினையாக மேற்கிளம்பியுள்ளது. புதிய அமைச்சராக நியமிக்கப் பரிந்துரைக்கப்பட்ட விந்தன் கனகரத்தினத்தின் மீதும் கொலைக் குற்றச்சாட்டு உண்டு என்று முதலமைச்சரிடம் இப்போது சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அமைச்சர் பா.டெனீஸ்வரன் மீது கட்சி ஒழுங்கு நடவடிக்கை எடுத்திருப்பதால் அவரை அமைச்சர் பதவியிலிருந்து விலக்குமாறு கேட்டு வடக்கு மாகாண முதலமைச்சருக்கு ரெலோ அமைப்புப் பரிந்துரைத்திருந்தது. அவருக்குப் பதிலாக மற்றொரு மாகாண சபை உறுப்பினரான விந்தன் கனகரத்தினத்தை அமைச்சராக்குமாறு கட்சியின் செயலாளர் முதலமைச்சருக்கு நேற்று அறிவித்தார். கட்சிக்குள் இந்தப் பரிந்துரை தொடர்பில் குழப்பங்கள் நிலவினாலும் விந்தனின் நியமனத்துக்கு எதிர்ப்புகள் காணப்பட்டாலும் அவரது பெயரைக் கட்சிச் செயலர் முதலமைச்சருக்கு அனுப்பி வைத்துள்ளார்.

இந்த நிலையில் விந்தன் கனகரத்தினமும் ஒரு கொலையில் தொடர்புபட்டவர் என்ற குற்றச்சாட்டில் இந்திய இராணுவத்தினரால் தடுத்து வைக்கப்பட்டிருந்த நபர், அப்படிப்பட்டவருக்கு எப்படி நீங்கள் அமைச்சுப் பதவியைக் கொடுக்க முடியும் என்று முதலமைச்சரிடம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பத்திரிகையாளர் சிவராம் படுகொலையுடன் தொடர்புபட்டவர் என்று கூறப்பட்டதன் காரணத்தால் புளொட் அமைப்பைச் சேர்ந்த பவான் எனப்படும் சிவநேசனுக்கு அமைச்சுப் பதவி வழங்க முடியாது என்று ஏற்கனவே நிராகரித்திருந்தார் முதலமைச்சர். அதனடிப்படையிலேயே சிவநேசனுக்கு அமைச்சுப் பதவி வழங்க முடியாது என்றால், அதே போன்ற குற்றச்சாட்டுக்கு உள்ளாக்கப்பட்டுள்ள விந்தனுக்கு மட்டும் அமைச்சுப் பதவியைக் கொடுக்க முடியும் என்ற கேள்வி முதலமைச்சரிடம் எழுப்பப்பட்டுள்ளது.

1988ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் முத்திரைச் சந்தைப் பகுதியில் வைத்து ஒருவரைச் சுட்டுக் கொலை செய்த சம்பவத்துடன் நேரடியாகத் தொடர்புடையவர் என்றும், இந்தக் கொலையைச் செய்தமைக்காக இந்திய இராணுவம் நாட்டை விட்டு வெளியேறும் வரையில் அவரைச் சிறை வைத்திருந்தாகவும்இதன் பின்னர் மோசடிக் குற்றச்சாட்டில் அதே நபர் 3 ஆண்டுகள் நீதிமன்றத்தால் சிறைத்தண்டனை பெற்றவர் என்றும் முதலமைச்சரிடம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த விடயங்கள் தொடர்பான ஆதாரங்களை முதலமைச்சர் கோரிய நிலையில், அவற்றைத் திரட்டும் நடவடிக்கையில் முதலமைச்சரிடம் இந்த விடயத்தைக் கொண்டு சென்ற தரப்பினர் ஈடுபட்டுள்ளனர் எனவும் தெரியவருகின்றது. இதேவேளை, தமிழ் அரசுக் கட்சி பரிந்துரைத்த நபரைக் கல்வி அமைச்சராக நியமிக்க மறுத்த முதலமைச்சர் ரெலோ பரிந்துரைக்கும் நபரை மட்டும் எப்படி அமைச்சராக நியமிக்க முடியும் என்றும்

தமிழ் அரசுக் கட்சி ஒழுக்காற்ற நடவடிக்கைக்கு உள்ளாக்கிய நபர் என்று குறிப்பிட்ட பின்னரும் அனந்தி சசிதரனுக்கு அமைச்சுப் பதவியை வழங்கிய முதலமைச்சர், பா.டெனீஸ்வரன் மீது ரெலோ ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்ததும் அவரைப் பதவி நீக்குவதாக இருந்தால் அதில் என்ன நியாயம் இருக்க முடியும் என்றும்தமிழ் அரசுக் கட்சி ஆதரவாளர்களும் குரல் எழுப்பத் தொடங்கியுள்ளனர். (உ-5,101)

## விளையாட்டு...

கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தினர். இந்தப் போராட்டத்தில் மட்டக்களப்பு மங்களராமய விகாராதிபதி சுமணரத்ன தேரரும் கலந்து கொண்டு ஆதரவு தெரிவித்தார்.

மட்டக்களப்பு, கல்குடா கல்வி வலயத்துக்குட்பட்டது முறாவோடை சந்தி வித்தியாலயம். வித்தியாலயத்தின் விளையாட்டு மைதானம் தனிநபர்கள் சிலரால் அபரிக்கப்பட்டுள்ளது என்று குற்றஞ்சாட்டப்படுகின்றது.

"மைதானக் காணியின் ஒரு பகுதியை முஸ்லிம் குடும்பத்தினர் சிலர் சட்டத்துக்கு முரணாக அபகரித்துள்ளனர். இந்த மைதானக் காணி, காணி ஆணையாளர் நாயகத்தால் திணைக்களத்தின் கடிதம் மூலம் கையளிப்புச் செய்யப்பட்ட காணியாகும். இந்தக் காணியை பாடசாலை மாணவர்கள் விளையாட்டு மைதானமாகப் பயன்படுத்தினர்.

தற்போது இந்தக் காணியில் தற்காலிகக் குடிசைகள் அமைத்து, வேலிகள் இட்டு காணி அபகரிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக உரிய அதிகாரிகளிடம் முறையிடப்பட்டது. தீர்வு ஏதும் கிடைக்கவில்லை." என்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்கள் தெரிவித்தனர்.

"எங்கள் மைதானம் எங்களுக்குத் தேவை, அகற்று அகற்று வேலியை அகற்று, நாங்கள் விளையாட எங்கள் மைதானம் தேவை, மைதானத்தை விட்டு வெளியேறு" போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு மாணவர்களும், மக்களும் கோசங்களை எழுப்பி ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

போரட்டத்தில் கலந்து கொண்ட மட்டக்களப்பு மங்களராமய விகாராதிபதி அம்பிடியே சுமணரத்தின தேரரிடமும் தமது கோரிக்கைகள் அடங்கிய மனுவைக் கையளித்தனர்.

இந்த ஆர்ப்பாட்டம் முறாவோடை சக்தி வித்தியாலய பாடசாலை அபிவிருத்திக் குழுவின் ஏற்பாட்டில் நடத்தப்பட்டது. (ற-ஜ-10)

## கூட்டமைப்பு...

சிறிலங்கா சுதந்திரக் கட்சி அபாய எச்சரிக்கையை நேற்று விடுத்தது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பத்திரிகையாளர் சந்திப்பு நேற்று நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு அந்தக் கட்சியின் மூத்த உறுப்பினர் மகிந்த சமரசிங்க கருத்துத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:

தற்போது கூட்டு அரசில் அங்கம் வகிப்பவர்களெல்லாம் விரும்பி வந்தவர்களே தவிர, அழுத்தங்களால் சேர்ந்தவர்கள் அல்லர். பொதுத்தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு 106 ஆசனங்கள் கிடைத்தன. சுதந்திரக் கட்சி முழுமையாக எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்திருந்தால் பெரும்பான்மையைப் பெற்றுத் தனித்து ஆட்சியமைப்பதற்கு ஐக்கிய தேசியக் கட்சி முயற்சிக்கும்.

அந்தக் கட்சியுடன் இணைந்து ஆட்சியமைப்பதற்கு மக்கள் விடுதலை முன்னணி முன்வந்திருக்குமா என்று தெரியவில்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேச்சுகள் நடத்தப்பட்டிருக்கலாம். அதுவே மாற்றுவழியாக இருந்தது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் நடுநிலையானவர்கள் இருப்பதுபோல், பிரிவினைவாதிகளும் இருக்கின்றனர். கூட்டு அரசு அமைப்பதற்கு அவர்கள் அவ்வளவு இலகுவில் வரமாட்டார்கள். நிபந்தனைகள் முன்வைக்கப்பட்டிருக்கலாம். அரசமைப்பு சபையில் அவர்கள் கேட்பவற்றைப் பார்க்கும் போது, எவ்வாறானவற்றை கேட்டிருப்பார்கள் என்பதை ஊகிக்க முடிகின்றது.

விரும்பியோ, விரும்பாமலோ இதற்கு இணக்கம் தெரிவிக்க வேண்டியநிலை ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஏற்பட்டிருக்கும். ஆட்சி அதிகாரத்தை இழக்க எவரும் விரும்பமாட்டார்கள். அப்படியொருநிலை ஏற்பட்டால் நாட்டில் உறுதிப்பாடற்ற அரசியல் நிலமையே நீடித்திருக்கும். 19ஆவது திருத்தச்சட்டத்தின் பிரகாரம் நான்கரை வருடங்களுக்கு நாடாளுமன்றத்தை அரச தலைவராலும் கலைக்க முடியாது. எனவே, இது நெருக்கடியாக அமைந்திருக்கும். நாட்டுக்கு பேராபத்தாக விளங்கியிருக்கும். இதனைக் கருத்தில் எடுத்தே கூட்டு அரசுக்கு சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஆதரவு தெரிவித்தது - என்றார்.

டிசெம்பரில் கூட்டு அரசிலிருந்து சுதந்திரக் கட்சி வெளியேறினால் கூட்டமைப்புடன் இணைந்து ஆட்சியமைக்க வேண்டிய நிலை தானே ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஏற்படும். அப்போது என்ன செய்வீர்கள், என்று கேட்கப்பட்ட கேள்விக்கு, டிசெம்பரில் உடன்படிக்கை முடிவடைகின்றது. மக்களின் விருப்பத்தின் பிரகாரம் தீர்மானங்கள் எடுக்கப்படும். கூட்டமைப்புடன் இணைந்து கூட்டரசு அமைப்பது நாட்டுக்கு ஆபத்து என்று மீண்டும் பதிலளித்தார். (த-5)

## ஐ.நா...

பெல்ட்மன் இன்று புதன்கிழமை இலங்கை வருகிறார். அவர் எதிர்வரும் வெள்ளிக்கிழமை வரை இங்கு தங்கியிருப்பார். இதன் போது கிழக்கு மாகாணத்துக்கும் அவர் பயணம் மேற்கொள்ளவுள்ளார்.

கொழும்பில் அரசின் உயர்மட்டத் தலைவர்களையும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் உள்ளிட்ட பிரதிநிதிகளையும் அவர் சந்திப்பார். அத்துடன், கொழும்பில் சமாதான அபிவிருத்தி தொடர்பான நிகழ்வுகளிலும் பங்கேற்கவுள்ளார்.

கிழக்குப் பயணத்தின்போது, மதத் தலைவர்கள் மற்றும் சிவில் சமூகத்தினரையும் அவர் சந்தித்துப் பேசுவார்.

ஜெப்ரி பெல்ட்மன் கடந்த 2015ஆம் ஆண்டு மார்ச் மாதமும் இலங்கைக்கான பயணத்தை மேற்கொண்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (த)

## டிப்பர்...

ரிழந்தார். பாடசாலை முடிந்து வீடு திரும்பிய சிறுமி பேருந்தில் இருந்து இறங்கி வீதியைக் கடக்க முற்பட்டபோது டிப்பர் வாகனம் மோதியது.

இந்த விபத்து நேற்றுப் பிற்பகல் 2.45 மணியளவில் நடந்துள்ளது. தரம் 5 இல் கற்கும் ஜிப்ரி பாத்திமா றிஸ்னா (வயது-10) என்ற சிறுமியே உயிரிழந்தார்.

விபத்தை அடுத்து அந்தப் பகுதியில் அமைதியின்மை ஏற்பட்டது. டிப்பர் வாகனச் சாரதி, உதவியாளர் மீது மக்கள் தாக்குதல் நடத்தினர் என்று கூறப்பட்டது. டிப்பர் வாகனத்தின் மீதும் கல் வீசித் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. பிரதேச மக்களின் கொந்தளிப்பான செயற்பாட்டால் தலைமன்னார் பிரதான வீதியில் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது.

சம்பவ இடத்துக்குச் சென்ற மன்னார் மற்றும் பேசாலைப் பொலிஸார் நிலமைகளைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர். டிப்பர் வாகனத்தின் சாரதியும், உதவியாளரும் பொலிஸாரால் மன்னார் மருத்துவனையில் சேர்க்கப்பட்டனர்.

சம்பவ இடத்துக்குச் சென்ற மன்னார் நீதவான் மற்றும் சட்ட வைத்திய அதிகாரி ஆகியோர் விசாரணைகளை மேற்கொண்டனர்.

# யாழ்ப்பாணத்தில் எட்டு உட்கட்டுமானத் திட்டங்கள்

## மாவட்டச் செயலரின் கண்காணிப்பில் முன்னெடுப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 17

யாழ்ப்பாணத்தில் 8 உட்கட்டுமான அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளனஎன்று தெரிவிக்கப்படுகின்றது.

மீள்குடியேற்றம் புனர்வாழ்வு அமைச்சர்டி.எம்.சுவாமிநாதனின் நிதி ஒதுக்கீட்டில் மாவட்டச்செயலரின் நேரடிக்கண்காணிப்பின்கீழ் இந்தஉட்கட்டுமானஅபிவிருத்தித் திட்டங்கள்முன்னெடுக்கப்படவுள்ளன.

ரூபா 6 மில்லியன் செலவில் ஊறணி கனிஷ்ட வித்தியாலய வகுப்பறைக் கட்டுமானம், ரூபா 5.4 மில்லியன் செலவில் அச்சுவேலிப.நோ.கூ.சங்கஅரிசிஆலை அமைத்தல், ரூபா 3.5மில்லியன் செலவில்நயினாதீவுபெருங்குளம் மற்றும் வாய்க்கால் சீரமைப்பு, ரூபா5மில்லியன்செலவில்காரைநகர் சிவன் கோயிலடி உவர்நீர் தடுப்பணை, ரூபா 5.4 மில்லியனில்அரியாலைஉப்பாறுவெள்ள நீர்தடுப்பணை, ரூபா10.9மில்லியனில் சாவகச்சேரி முள்ளி முதல் மிருசுவில் வடக்கு வரையான வடமராட்சி நீரேரியின் வெள்ள நீர்த்தடுப்பணை, ரூபா3.6மில்லியனில்மண்கும்பான்பள்ளிவாசல் உள்ளகசாலைசீரமைப்புமற்றும் ரூபா 5 மில்லியனில் அம்பன் கொட்டோடை கடற்கரை சாலை சீரமைப்புஆகியதிட்டங்களேமுன்னெடுக்கப்படவுள்ளன.

மேற்படி வேலைத்திட்டங்கள் 3 முதல் 4 மாதங்கள் வரையான காலப்பகுதிக்குள் முடிக்கப்பட வேண்டியவை எனவும் தெரிவிக்கப்பட்டது. (21-50)

# வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் அனைத்து வெற்றிடங்களும் நிரப்பப்படும்

## அமைச்சர் சத்தியலிங்கம் உறுதி

வவுனியா, ஜூலை 17

வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் அனைத்து வகை வெற்றிடங்கள் தொடர்பிலும் திறைசேரியின் மனிதவள முகாமைத்துவப் பிரிவு விவரங்களைப் பெற்றுள்ளது என்று வடக்கு மாகாணச் சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு மாகாண மருத்துவமனைகள் மற்றும் சுகாதாரத் திணைக்களங்களில் நிலவும் சகல தரப்பு ஆளணிகளையும் நிரப்புமாறு நாம் கோரிக்கை விடுத்தி ருந்தோம்.

வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் கீழ் உள்ள சகல திணைக்களங்கள் , மருத்துவ மனைகளில் உள்ள வைத்தியர்கள் , நிபுணர்கள் எனச் சகல தரப்பு ஆளணி வெற்றிடங்கள் குறித்தும் விவரங்கள் பெறப்பட்டுள்ளன.

இந்த விவரங்களை ஆய்வுக்கு உட்படுத்தி அதன் பிரகாரம் அவற்றை நிவர்த்தி செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. குறிப்பாக வடக்கு மாகாண மருத்துவமனைகளில் நிலவும் மருத்துவர்கள் வெற்றிடமும் அலுவலக ஆளணி வெற்றிடம் தொடர்பிலும் நாம் கடந்த 3 ஆண்டுகளாகத் தொடர்ச்சியாகச் சுட்டிக்காட்டி வந்துள்ளோம்.

அவ்வாறு சுட்டிக்காட்டும் வெற்றிடங்களை நிரப்புமாறும் கோரியிருந்தோம். அதன் பிரகாரம் தற்போது விவரங்கள் பெறப்பட்டுள்ளன. மாகாண ஆளணியை நிரப்புமாறு அண்மையில் சுகாதார அமைச்சிடமும் அரச தலைவரிடமும் வேண்டுகோள் விடுத்திருந்தோம். இதனடிப்படையில் குறித்தசெயற்பாடு இடம்பெற்றுள்ளது. எனவே விரைவில் மாகாண ஆளணியை நிறைவு செய்ய முடியும் என எதிர்பார்க்கப்படுகின்றது- என்றார். (21-101)

## மனிதாபிமான அடிப்படையில்

# சகலகால்நடை மருத்துவர்களும் இரவிலும் பணிபுரிய வேண்டும்

## மாகாணப் பணிப்பாளர் கோருகிறார்


கோப்புப் படம்

யாழ்ப்பாணம், ஜூலை 19

இரவு வேளைகளில் கால்நடைகள் நோய்த் தாக்கம் அல்லது விஷப் பூச்சிகளின் கடிக்கு இலக்காகியுள்ளதாகபிரதேசத்தில்உள்ளயாராவது அழைத்தால் கால்நடை மருத்துவர்கள் மனிதாபிமான அடிப்படையில் குறித்த பிரதேசங்களுக்குச் சென்று மருத் துவ சேவையை வழங்க முன்வர வேண்டும்.

இவ்வாறுவடக்குமாகாணகால்நடைசுகாதார உற்பத்திகள் திணைக்களத்தின் பணிப்பாளர் எஸ்.வசீகரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

"வடக்கு மாகாணத்தில் போரால் பாதிக்கப்பட்ட எமதுவாழ்வாதாரத்தைஉயர்த்தும்நோக்கில் அரசியல்வாதிகள், தொண்டு நிறுவனத் தினர் கால்நடைகளை கையளிக்கின்றனர்.

அவர்களின் இந்த உதவிகளால் நாம் எமது வாழ்வாதாரத்தை முன்னெடுக்கிறோம்.

இந்த நிலையில் எமக்கு வழங்கப்படுகின்ற கால்நடைகளுக்குப் பகல் வேளைகளில் ஏதாவது நோய்த் தாக்கம் ஏற்பட்டால் அருகில் இருக்கின்ற கால்நடை வைத்தியசாலைக்குக் கொண்டு சென்று சிகிச்சை பார்க்கின்றோம். சிலசந்தர்ப்பங்களில்கால்நடைமருத்துவர்கள் எமது வீடுகளுக்கு வந்து மருத்துவ சேவை செய்துவருகின்றனர். ஆனால்எமதுகால்நடைகளுக்குஇரவுவேளைகளில்எதாவதுநோய்ஏற்பட்டால் வைத்திய உதவியை பெறமுடியாத நிலமை காணப்படுகின்றது" என்று கால்நடை வளர்ப்பாளர்கள் கூறுகின்றனர்.

கால்நடை வளர்ப்பாளர்கள், தமதுகால்நடைகளுக்குஇரவு வேளைகளில் நோய்த்தாக்கம்அல்லதுவிஷப்பூச்சிகளின் கடிக்குள்ளாகும்போது கால்நடைகளுக்கு உரிய சிகிச்சையைஅளிக்கமுடியாததுர்ப்பாக்கியநிலைமைகாணப்படுகிறது. அதனால் கால்நடைகள் உயிரிழக்கின்ற நிலைமை ஏற்படுகின்றது.

> விஷப் பூச்சிகளின் கடிக்குள்ளாகும் போது கால்நடைகளுக்கு உரிய சிகிச்சையைஅளிக்கமுடியாததுர்ப் பாக்கிய நிலமை காணப்படுகிறது.

வடக்குமாகாணத்தில்கால்நடைவைத்தியசாலையில் கடமையாற்றும்மருத்துவர்கள்தங்குவதற்கானதங்குமிட விடுதிகள் இல்லை. அதனால் தூரப் பிரதேசத்தில் இருந்து கால்நடை வைத்தியசாலைக்குக் கடமைக்கு வரும் மருத்துவர்கள் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

இவ்வாறான நிலமையில் இரவு வேளைகளில் கால்நடைகளுக்குஏதாவதுநோய்த்தாக்கம்ஏற்பட்டால்வைத்தியர்கள் தத்தமது பிரதேசங்களுக்குச் சென்று கால்நடைகளுக்குவைத்தியம்பார்க்கமுடியாதநிலைகாணப்படுகின்றது. அவ்வாறிருந்தாலும் ஒரு பிரதேசத்தில் இரவு வேளைகளில் கால்நடைகள் நோய்த்தாக்கம் அல்லதுவிஷப்பூச்சிகளகடித்தால்அந்தப்பிரதேசத்துக்கு அண்மையில்இருக்கின்றகால்நடை மருத்துவர்கள் குறித்த இடத்துக்குச் சென்று வைத்திய சேவையை வழங்க முன்வர வேண்டும். மருத்துவர்கள்பகல்வேளைகளில்கால்நடை வைத்தியசாலையில் தமது கடமைகளை முழுமையாகச் செய்ய வேண்டியகட்டாயம்இருக்கின்றது. எனினும் இரவு வேளைகளில் மனிதாபிமான அடிப்படையில் கால்நடைகளின் உயிர்களைக்காக்க அருகில்இருக்கும்மருத்துவர்கள்சிகிச்சையளிக்கமுன்வரவேண்டும்.

கால்நடைகளுக்கு விசப் பூச்சிகள் கடித்தால் மருத்துவ சேவையைசெய்யவேண்டியகடமைப்பாடுஅனைத்து கால்நடைவைத்தியர்களுக்கும்உள்ளது. ஆகவேஅவ்வாறானசூழ்நிலைகளில்மனிதாபிமானஅடிப்படையில் சேவைகளை வழங்க முன்வர வேண்டும்" என்று வடக்கு மாகாண கால்நடை சுகாதார உற்பத்திகள் திணைக்களத்தின்பணிப்பாளர்எஸ்.வசீகரன்தெரிவித்தார். (4-8)

# 44 நாடுகளின் நிதி போதாதென வறட்சிக்கான நிதியும் பறிமுதல்

## கண்டாவளைக் கூட்டத்தில் மாவை சீற்றம்

கிளிநொச்சி, ஜூலை 19

வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் மற்றும் மக்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி, வெள்ள இடரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளதாகக் கண்டாவளை பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

கிளிநொச்சி கண்டாவளைப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் கண்டாவளைப் பிரதேச செயலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

அதில் வறட்சி தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டது. அதில் கலந்துகொண்டபிரதேசத்தைச் சேர்ந்த விவசாயி ஒருவர் வறட்சிக் கொடுப்பனவாக பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு 8ஆயிரத்து 650 ரூபா மாத்திரம் வழங்கப்பட்டுள்ளதாகவும் மிகுதிப்பணம் பின்னர் வழங்கு வதாகத் தெரிவித்திருந்த போதும் இதுவரை அந்தப் பணம் வழங்கப்படவில்லை என்றும் இணைத் தலைவர்களின் கவனத்துக்குக் கொண்டு வந்தார்.

இது தொடர்பாக இணைத்தலைவர்கள் கிளிநொச்சி மாவட்ட கமநல சேவை அபிவிருத்தி உதவி ஆணையாளரிடம் கேட்டனர். " வறட்சி நிவாரணம் நான்கு கட்டங்களாக வழங்கப்படுவதாக இருந்தது. அதன் முதற் கட்டம் வழங்கப்பட்டு விட்டது. மிகுதிப் பணம் தொடர்பாக விவசாய அமைச்சர் துமிந்த திஸ நாயக்க அண்மையில் இடம்பெற்ற கூட்டம் ஒன்றில் அவை வழங்கப்படாதெனத் தெரிவித்துள்ளார் என கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் பதிலளித்தார்.

இதனையடுத்து இணைத்தலைவர்கள் "வறட்சி நிவாரணத்துக்காக ஒதுக்கப்பட்ட பணம் எங்கே என கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளரிடம் வினவினர். இதற்குப் பதிலளித்த அவர் அண்மையில் ஏற்பட்ட வெள்ள இடருக்கு மாற்றப்பட்டிருக்கலாம் - என்றார்.

இதனை அடுத்து இணைத்தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா " வெள்ள இடருக்கு 44 நாடுகள் உதவி புரிந்துள்ளன. அவை போதாமல் வறட்சிக்கு என ஒதுக்கப்பட்ட இந்த நிதியும் எடுக்கப்பட்டுள்ளது என்று கண்டித்தார்.

இது தொடர்பாக அமைச்சருடன் கலந்துரையாடி தீர்வைப் பெற்றுத்தருவதாகவும் அவர் தெரிவித்தார். (21-6)

# துறைசார் கற்கைகளுக்கு இந்திய புலமைப் பரிசில்

யாழ்ப்பாணம்,ஜூலை19

வடக்கு மாகாண அரச திணைக்கள அலுவலகங்களில் பணிபுரியும் அலுவலர்களிடமிருந்து இந்தியஅரசினால் நடத்தப்படவுள்ள பல்துறை சார்பன்னாட்டுக்கற்கைநெறிகளுக்கான(2017, 2018) புலமைப்பரிசில் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

வடக்கு மாகாண மகளிர் விவகார, புனர்வாழ்வு, சமூக சேவைகள், கூட்டுறவு, உணவு வழங்கலும்விநியோகமும் மற்றும் தொழில் முனைவோர் மேம்பாட்டு அமைச்சினால் விண்ணப்பங்கள்கோரப்பட்டுள்ளன. கணக்காய்வு, வங்கியியல், நிதி தொழில்நுட்பம், தொலைத் தொடர்பும் ஆங்கிலமும், முகாமைத்துவம், கிராம அபிவிருத்தி, சிறப்பு துறைதொழில்நுட்பம், சுற்றாடல்மின்சக்திமற்றும் கொழும்புத் திட்ட தொழில்நுட்ப ஒத்துழைப்பு ஆகிய துறைகளுக்குப் புலமைப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

மேலதிக விபரங்களை 275,முதன்மைச்சாலை அரியாலை, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில்தொடர்புகொண்டு பெற்றுக் கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (4-9)



## நீண்ட கால சிறுநீரக நோய்களை (CKD) தவிர்த்தல்

* விவசாய இரசாயனப்பொருள் பாவனையை குறைத்திடல்வேண்டும்
* விவசாய இரசாயனப் பொருள்கள் பிரயோகிக்கும் போது தற்காப்பு முறைகள் உபயோகித்தல்.
* காற்றின் திசையில் இரசாயனப் பொருள்கள் விசிறுதல்.
* இரசாயனம் தெளிக்கும் உபகரணங்களை நீர் நிலைகளுக்கு அருகில் கழுவுதலை தவிர்த்தல்.
* விவசாய இரசாயன வெற்றுப் போத்தல்களைப் பாதுகாப்பான முறையில் அகற்றுதல்
* விவசாய இரசாயனப் பொருள்களை தெளித்த பின்பு, உடலை நன்கு கழுவிக் கொள்ளுதல்.

ஆரோக்கிய வாழ்க்கைக்கு சிறுநீரகங்களை பாதுகாத்திடுவோம்.



*தகவல்*
*சு.ம.அ.பணிமனை,*
*யாழ்.மாநகர சபை.*

---

# தேசியப் பாடசாலைகளிலிருந்து மாகாணத்துக்கு ஆசிரியர்களை இடமாற்றும் அறிவிப்பு இன்னுமில்லை

## விரைவில் வழங்குமாறு அரசிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 19
வடக்கிலுள்ள தேசிய பாடசாலைகளில் நீண்டகாலமாகப் பணிபுரியும் ஆசிரியர்களை மாகாணப் பாடசாலைகளுக்கு இடமாற்றம் செய்வது தொடர்பான கடிதம் எதுவும் கொழும்பு அரசிடமிருந்து இதுவரை கிடைக்கவில்லை என்று வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன் தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
"தேசியப் பாடசாலைகளில் 5 வருடம் கடமையாற்றியவர்களை மாகாணப் பாடசாலைகளுக்கு இடமாற்றம் செய்ய வேண்டும் என்று கொழும்பு அரசின் கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் அண்மையில் நிகழ்வு ஒன்றில் அறிவித்திருந்தார். ஆரம்பகாலத்தில் வடக்கு மாகாணக் கல்வி அமைச்சும், மாகாணக்கல்வித் திணைக்களமும் இணைந்து இது தொடர்பாகக் கலந்துரையாடி ஆசிரியர் இடமாற்றம் தொடர்பாகத் தீர்மானங்களை ஆராய்ந்து வந்தன. பின்னர் கொழும்பு அரசின் கல்வி அமைச்சு தாமே தேசியப் பாடசாலைகளில் கடமையாற்றிய ஆசிரியர்களை மாகாணப் பாடசாலைகளுக்கு இடமாற்றம் செய்வது தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்வதாகத் தெரிவித்திருந்தது.
ஆனால் வடக்கு மாகாணத்தில் உள்ள தேசியப் பாடசாலைகளில் நீண்டகாலம் சேவையாற்றும் ஆசிரியர்களை மாகாணப் பாடசாலைகளுக்கு இடம்மாற்றம் செய்தல் தொடர்பான எந்தவொரு கடிதமும் எமது அமைச்சுக்குக் கிடைக்கப்பெறவில்லை" என்றார்.
வடக்கில் தேசியப் பாடசாலைகளில் ஆசிரியர்கள் தேவைக்கு மேலதிகமாக உள்ளனர் என்றும் மாகாணப் பாடசாலைகளில் ஆசிரியர்களுக்குப் பற்றாக்குறை இன்னும் நிலவுகிறது என்றும் ஆசிரியர்களால் கூறப்பட்டு வருகிறது. தேசியப் பாடசாலைகளில் மேலதிகமாகவுள்ள ஆசிரியர்களை மாகாணப் பாடசாலைகளுக்கு இடமாற்றம்செய்தால் ஆசிரியர் பற்றாக்குறை சீராகும். மாணவர்களுக்கும் கல்வி கிடைப்பதை உறுதி செய்யலாம். மாணவர்களுக்குப் பயனுடையதாக இருக்கும். எனவே இடமாற்றங்களைக் கொழும்பு கல்வி அமைச்சு விரைவுபடுத்தவேண்டும் என்று ஆசிரியர்கள் அரசிடம் கோருகின்றனர். (4-ரி)

---

# மணல் கொள்ளை பொலிஸார் உடந்தை

## பச்சிலைப்பள்ளி மக்கள்குற்றச்சாட்டு

கிளிநொச்சி,ஜூலை 19
கிளிநொச்சி பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலாளர் பிரிவில் இடம்பெறும் மணல் கடத்தல்களுக்குப் பொலிஸாரும் உடந்தையாகச் செயற்படுகின்றனர் எனப் பிரதேசத்தைச் சேர்ந்த மக்கள் குற்றஞ்சாட்டினர்.
கிளிநொச்சி பச்சிலைப்பள்ளிப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் இணைத்தலைவர்களான இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன், நாடாளுமன்ற உறுப்பினர்களான, மாவை சேனாதிராசா, அங்கஜன் இராமநாதன் ஆகியோரின் தலைமையில் நேற்றுமுன்தினம் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.
இந்தக் கூட்டத்தின்போது மணல் கடத்தல் தொடர்பான விவாதம் இடம்பெற்றது.
கிராம மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகளாகக் கலந்துகொண்டவர்கள் மணல் கடத்தல் காரணமாக பல்வேறு சம்பவங்கள் இடம்பெறுவதாகவும் அண்மையில் கூட இரு தரப்பினருக்கிடையில் மோதல் இடம்பெற்று நீதிமன்றம் வரை சென்றதாகவும் தெரிவித்தனர். பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் பிரிவுக்குபட்ட பகுதிகளில் இடம்பெறுகின்ற மணல் கடத்தலுக்குப் பொலிஸாரின் உதவி உள்ளதாக இணைத்தலைவர்களின் கவனத்துக்குக் கொண்டு வந்ததோடு குறித்த செயற்பாட்டை நிறுத்த வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தனர்.
இது தொடர்பாக இணைத்தலைவர்களால் பொலிஸாரிடம் விளக்கம் கோரப்பட்டது.
எனினும் பொலிஸார் எவரும் கலந்து கொள்ளவில்லை. குறித்த பிரச்சினை தொடர்பாக ஆராய்வதாக இணைத்தலைவர்களால் பதில் வழங்கப்பட்டது. (21-6)

---

## வடக்கு மாகாணத்தின்

# நியதிச் சட்ட விதிமுறைகளின்படி 57 இல்லங்கள் பதிவாகவில்லை

## ஒரு இல்லமே பதிவு செய்யப்பட்டது நன்னடத்தைத் திணைக்களம் கூறுகிறது

யாழ்ப்பாணம், ஜூலை 19
வடக்கு மாகாண சபை நியதிச் சட்டத்தின் கீழ் கோரப்பட்ட ஆவணங்களை உரிய முறையில் சமர்ப்பித்து, இதுவரை ஒரேயொரு சிறுவர் இல்லம் மாத்திரமே பதிவு செய்துகொண்டுள்ளதாக மாகாண சிறுவர் நன்னடத்தைப் பராமரிப்புத் திணைக்களத்தினர் தெரிவித்துள்ளனர்.
கடந்தகாலங்களில் கொழும்பு அரசின்கீழ் பதியப்பட்ட வடக்கு மாகாணத்தில் உள்ள சிறுவர் இல்லங்கள் நடப்பு ஆண்டில் இருந்து வடக்கு மாகாண சபையின் நியதிச் சட்டத்தின் கீழ் பதியப்படல் வேண்டும் என்று பிரேரணை முன்வைக்கப்பட்டு மாகாண சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. அதன் அடிப்படையில் கடந்த பெப்ரவரி மாதம் 20ஆம் திகதி சிறுவர் இல்லங்களைப் பதிவு செய்வதற்கான வர்த்தமானி வெளியிடப்பட்டது.
அதன் பின்னர் ஆறு மாத காலத்துக்குள் உரிய ஆவணங்கள் அனைத்தையும் சமர்ப்பித்து வடக்கு மாகாணத்தில் உள்ள அனைத்து சிறுவர் இல்லங்களும் பதியப்படவேண்டும் என்று உரிய தரப்பினருக்குத் தெரிவித்திருந்தோம்.
பதிவுகளை மேற்கொள்ள வழங்கப்பட்ட கால எல்லை முடிவடையும் நிலையில், எம்மால் கோரப்பட்ட அனைத்து ஆவணங்களையும் உரிய முறையில் சமர்ப்பித்து வவுனியா செட்டி குளத்திலுள்ள ஒரு சிறுவர் இல்லம் மாத்திரமே பதிவு செய்துள்ளது. அதற்குப் பதிவுச் சான்றிதழ் வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. வடக்கு மாகாணத்தில் 58 சிறுவர் இல்லங்கள் உள்ளன. அவற்றில் 20 க்கும் மேற்பட்ட சிறுவர் இல்லங்கள் கொழும்பு அரசின் கீழும் பதிவு செய்யப்படவில்லை என்று புள்ளி விவரங்கள் கூறுகின்றன.
இவற்றில் சில எமக்குப் பதிவு செய்வதற்கு விண்ணப்பித்து இருந்தாலும், சிறுவர் இல்லங்களை உரிய முறையில் பதிவு செய்வதற்கான ஆவணங்களை முழுமையாக சமர்ப்பிக்கவில்லை. குறிப்பாக இல்லம் அமைந்துள்ள காணிப்பத்திரம், வரைபடம், இல்லத்தில் பணிபுரியும் நபர்களுக்கான மருத்துவச் சான்றிதழ் மற்றும் பொலிஸ் சான்றிதழ் என்பன சமர்ப்பிக்கப்படவேண்டும். இவற்றைச் சம்பந்தப்பட்ட சிறுவர் இல்லங்கள் எமக்கு சமர்ப்பிக்கவில்லை என்று திணைக்களத்தினர் மேலும் தெரிவித்தனர். (4-ரி)

---

# காரில் கஞ்சா கடத்தியதாக 6 பேர் கைதாகி விசாரணை

## யாழிலிருந்து கண்டி சென்றபோது கனகராயன் குளத்தில் சிக்கினர்

வவுனியா, ஜூலை 19
வவுனியா கனகராயன் குளத்தில் காரில் கேரளக் கஞ்சா வைத்திருந்த குற்றச்சாட்டில் சகோதரர்கள் உட்பட 6 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று கனகராயன்குளப் பொலிஸார் தெரிவித்தனர்.
நேற்றுமுன்தினம் மாலை 4.30 மணியளவில் அவர்கள் கைது செய்யப்பட்டு விசாரணையில் உள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. இது தொடர்பாக மேலும் தெரியவருகையில்:
கண்டியிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு காரில் சுற்றுலா சென்ற இளைஞர்கள் யாழ்ப் பாணத்திலிருந்து நேற்றுமுன்தினம் கண்டிக்குத் திரும்பிக் கொண்டிருக்கும்போது கனகராயன்குளத்தில் கடமையிலிருந்த போக்குவரத்துப் பொலிஸார் சந்தேகத்தில் அவர்களை மறித்துச் சோதனையிட்டனர்.
அதன்போதே மறைத்து வைக்கப்பட்டிருந்த 2 கிலோ 200கிராம் கஞ்சா போதைப் பொருள் பொதியிடப்பட்ட நிலையில் காரில் இருந்து மீட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.
விசாரணைகளின் பின்னர் அவர்கள் நீதிமன்றில் முற்படுத்தப்படுவர் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (4)

---

# வணிகக் கற்கைக்கு விண்ணப்பம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக திறந்த மற்றும் தொலைக் கல்வி நிலையத்தால் நடத்தப்படும் வணிகமாணி (வெளிவாரி) அனுமதிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.
அந்தக் கற்கைநெறி தொடர்பான கலந்துரையாடல் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை வவுனியா கேம்பிறிஜ் பட்டப்படிப்புக்கள் கல்லூரியில் காலை 8.30 மணிக்கும், மன்னார் சித்தி விநாயகர் கல்லூரியில் (தேசிய பாடசாலை) முற்பகல் 11 மணிக்கும் நடைபெறவுள்ளது.
இந்தக் கற்கை நெறியைத் தொடர விரும்பும் ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் 2015ஆம் ஆண்டில் அல்லது முற்பட்ட காலப்பகுதியில் வணிகப்பிரிவில் சித்தியடைந்தவர்கள் கலந்து கொள்ளலாம். இவ்வாறு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையப் பணிப்பாளர் பேராசிரியர் பா.நிமலதாசன் கேட்டுள்ளார். (4)

---

# காவடிச் சேவை செய்பவர்கள் பதிவு செய்திருத்தல்வேண்டும்

## தவறினால் சட்டநடவடிக்கை என்று வைத்திய அதிகாரிகள் தெரிவிப்பு

சாவகச்சேரி, ஜூலை 19
காவடிச் சேவை செய்பவர்கள் அது குறித்துத்தத்தமதுபகுதிஉள்ளூராட்சிச் சபைகளில்பதிவுசெய்து அனுமதி பெற்றிருத்தல்வேண்டும் என்று சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தினர் அறிவித்துள்ளனர்.
அண்மைக்காலமாக இந்து ஆலயங்களில் உற்சவங்கள் நடைபெற்று வருவதால் பலர் பல்வேறு வகையில் காவடிகளைஎடுத்துநேர்த்திசெய்கின்றனர். காவடி எடுக்கும்போது உடலில் பாய்ச்சப்படும் ஊசிகளால் குருதிதொடர்பான ஒவ்வாமைநோய்க்குப்பலர்இலக்காகி மருத்துவமனைகளில்சிகிச்சைபெற்று வருகின்றனர் என்று முறையிடப்பட்டுள்ளது.



செடில்காவடிகள், பறவைக்காவடிகள், தூக்குக்காவடிகள், அலகு குத்துதல் போன்றவைக்குப் பயன்படுத்தப்படும் ஊசிகள் சுகாதார முறைப்படி அவித்துப் பயன்படுத்தாததால் பலர் ஒவ்வாமைக்கு உட்படுகின்றனர் என்று கூறப்பட்டிருக்கிறது. அதனால் காவடிச் சேவையில் உள்ளவர்கள் அனைவரும் தமது பிரிவு உள்ளூராட்சி சபையில் அது தொடர்பில் பதிவு செய்து அதற்கான அனுமதியைப் பெறவேண்டும்.
இதுதொடர்பாகக்காவடிச் சேவையாளர்களில் தென்மராட்சிப் பிரதேசத்தில்உள்ளவர்களுக்கானவிழிப்புணர்வுக்கருத்தரங்கு இன்றுபுதன் கிழமை மு.ப.9 மணிக்கு சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில்இடம்பெறவுள்ளது. பிரதேசத்தில் காவடிச் சேவையை நடத்தும் அனைவரும் இதில் கலந்துகொள்ளுமாறும்சுகாதாரப் பகுதியினர் அறிவித்துள்ளனர்.
எதிர்காலத்தில்உரியஅனுமதிப்பத்திரமின்றிச்சேவையில் ஈடுபடுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது" என்று அவர்கள் அறிவித்துள்ளனர். (4-9)

# சிறுவயதுக் கர்ப்பங்கள் மாத்தளையில் அதிகம்

நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹிணி தகவல்

கொழும்பு, ஜூலை19

மாத்தளை மாவட்டத்தில் சிறுவயதில் கர்ப்பம் தரிக்கும் பெண்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

லக்கல, வில்கமுவ, நாவுல மற்றும் அம்பங்கஸ்க ஆகிய நான்கு பிரதேச செயலகப் பிரிவிலேயே இவ்வாறு கர்ப்பம் தரிக்கும் சிறுமிகள் அதிகம் உள்ளனர் என நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹிணி கவிரத்ன தெரிவித்துள்ளார்.

மாத்தளை மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத் தின்போதே அவர் மேற்படி விவரங்களை முன்வைத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சிறு வயதில் கர்ப்பம் தரிக்கும் சிறுமிகள் குறித்து அரசு கூடிய கவனம் எடுக்க வேண்டும்.

நாடளாவிய ரீதியில் சுகாதார அமைச்சு முன்னெடுத்திருந்த ஆய்வின்போதே இந்த அதிர்ச்சித் தகவல் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. குடும்பச் சூழல், கல்வி அறிவின்மை என்பவையே இதற்குக் காரணம்-என்றார்.

இது தொடர்பாக பெண்கள் மற்றும் சிறுவர் பராமரிப்பு பிரிவினருக்கு அறிவித்து அவர்கள் மூலம் குறிப்பிட்ட பிரதேசங்களில் விழிப்புணர்வு வேலைத்திட்டத்தை முன்னெடுக்க உடனடியாக நடவடிக்கை எடுப்பதென மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

(த-ய)

# பெண் சிறைக்காவலரின் காலுறைக்குள் 6 சிம் கார்ட்கள்

கொழும்பு, ஜூலை 19

தனது காலுறைக்குள் ஆறு தொலைபேசி சிம் அட்டைகளை மறைத்து வைத்து வெலிக்கடைச் சிறைச்சாலைக்குள் கடத்த முயன்ற பெண் காவலரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை இவர் வெலிக்கடைச் சிறைச்சாலைக்குப் பணிக்காக வந்திருந்தபோது சிறைச்சாலை புலனாய்வுப் பிரிவினர் முதன்மை வாயிலில் அவரைச் சோதனைக்கு உட்படுத்தியபோது இந்த சிம் அட்டைகள் கைப்பற்றப்பட்டன.

இந்தக் காவலர் விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் அவரது பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டிருப்பதாகவும், அவர் கடந்த 15 வருடங்களாகப் பணியில் இருந்தவர் எனவும் சிறைச்சாலைகள் பேச்சாளர் துஷார உபுல்தெனிய தெரிவித்துள்ளார்.

(த)

அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையம்
98ஆவது ஆண்டு நிறைவு விழா - 2017
காலம் - 22.07.2017 சனிக்கிழமை
காலை 6.00 மணி.
இடம் - நிலையமுன்றில் (A-9 வீதி, தபால்கட்டை சந்திக்கு அருகில்)
மரதன் ஓட்டம் 05 மைல் - ஆண்கள்
சைக்கிள் ஓட்டம் 50 கி.மீ. - ஆண்கள்
தொடர்புகளுக்கு:- 077 309 5745, 077 743 0910
நிர்வாகம்
அ.சரஸ்வதி. ச.ச.நி

## மாவட்டசெயலகம், முல்லைத்தீவு
## கேள்வி அறிவித்தல்

**மாவட்ட செயலக சிற்றுண்டிச்சாலையினை ஒப்பந்த அடிப்படையில் நடத்துவதற்கான விலைக்கேள்வி மனுக்கோரல்**

தலைவர், பெறுகைக்குழு மாவட்ட செயலகம், முல்லைத்தீவு சார்பாக மாவட்ட செயலரால் மாவட்ட செயலக சிற்றுண்டிச் சாலைக்கான விலைக்கேள்விகள் தகமையுடையோரிடம் இருந்து கோரப்படுகின்றன.

1. விலைக்கேள்வியானது வடமாகாணத்திற்குள் சிற்றுண்டிச்சாலை நடத்துபவர்களுக்கு வழங்கப்படுவதாக தீர்மானிக்கப்பட்டுள்ளது.
2. இவ் ஒப்பந்ததாரர்களுக்கான அடிப்படைத் தகுதியாக குறித்ததுறையில் ஒருவருடத்திற்கு குறையாத முன் அனுபவத்தினை கொண்டிருத்தல் வேண்டும்.
3. ஆர்வமுள்ள தகமையுடைய விலைக்கேள்வியாளர்கள் தலைவர் மாவட்ட பெறுகைக்குழு, மாவட்டச் செயலகம், முல்லைத்தீவு என்னும் முகவரியில் கூறுவிலை ஆவணங்களினை பெற்றுக்கொள்வதற்காக 20.07.2017முதல் 02.08.2017 வரை அலுவலகநேரத்தில் காலை 9.00 மணியிலிருந்து மாலை 3.00 மணிவரையான காலப்பகுதியில் மீளளிக்கப்படாத தொகையான ரூபா. 500.00 கட்டணமாக செலுத்திபெற்றுக் கொள்ளமுடியும்.
4. மூடிய விலைகேள்விகள் யாவும் சீரான முறையில் ஒட்டப்பட்டு தலைவர், மாவட்ட பெறுகைக்குழு, மாவட்டச் செயலகம், முல்லைத்தீவு என்ற முகவரிக்கு 04.08.2017 திகதியன்று பி.ப 2.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் நேரடியாகவோ அல்லது பதிவுத் தபால் மூலமாகவோ அனுப்பிவைக்க முடியும் என்பதுடன் நேரடியாகஒப்படைப்பவர்கள் மாவட்ட செயலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் இடுதல் வேண்டும்.
5. இக்கேள்விப் பெட்டியானது 04.08.2017 பி.ப.2.00மணிக்கு மூடப்படுவதுடன் உடனடியாகவே திறக்கப்படும்.
6. காலந்தாழ்த்தப்பட்ட விலைக்கேள்விகள்யாவும் நிராகரிக்கப்படும் என்பதுடன் கேள்விகளின் மூலப் பிரதிதனியாகவும் நகல் (Copy) தனியாகவும் இரு கடிதஉறைகளில் இடப்பட்டுபின் இரண்டும் ஒரு உறையினுள் இட்டு அனுப்பப்படல் வேண்டும்.
7. இலங்கை மத்தியவங்கியினால் அனுமதியளிக்கப்பட்ட வங்கி ஒன்றில் ரூபா.10000.00 ஐ மாவட்டசெயலாளர், மாவட்ட செயலகம்,முல்லைத்தீவு என்ற பெயரிற்கு விலைக்கேள்வி பிணை முறியாக (Bid Bond) செலுத்தி அப்பிணை முறியினை விலைக் கேள்வியுடன் இணைத்து அனுப்பிவைக்கப்படல் வேண்டும். பிணை முறிகள் இணைக்கப்படாத விலைக்கேள்விகள்யாவும் நிராகரிக்கப்படும்.
8. இக்கூறுவிலைகள் தொடர்பாக பிரதம கணக்காளர், மாவட்ட செயலகம்,முல்லைத்தீவு (தொலைபேசி இல: 0212290034) அவர்களிடமிருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
9. விலைக்கேள்விகள் தொடர்பான இறுதிமுடிவினை எடுக்கும் அதிகாரம் மாவட்ட கேள்விச்சபையை சார்ந்ததாகும்.

திருமதி.றூ.கேதீஸ்வரன்,
தலைவர்,
மாவட்டபெறுகைக்குழு,
மாவட்டசெயலகம்,
முல்லைத்தீவு.

மாபெரும் மணப்பெண் மற்றும் சிகை அலங்கார பயிற்சிப்பட்டறை
அழுகுக்கலை நிபுணர்களுக்கு இதோ ஓர் வரப்பிரசாதம்!
யாழ். மாவட்ட அழகுக்கலை நிபுணர்கள் ஒன்றியம் NAYAGARA Salon & Acadamy உடன் இணைந்து மாபெரும் மணப்பெண் மற்றும் சிகை அலங்கார பயிற்சிப் பட்டறையை நடத்த ஒழுங்கமைத்துள்ளது.

திகதி : 23.07.2017 (ஞாயிற்றுக்கிழமை)
இடம் : Green Grass Hotel
33, ஆசீர்வாதம் ஒழுங்கை,
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
நேரம் : 9.00 மணிமுதல் 2.00 மணிவரை
கட்டணம் : 450/= (அங்கத்தவர்களுக்கு)
950/= (வெளிப்பார்வையாளருக்கு)
(சான்றிதழ்கள் வழங்கப்படும்)
தொடர்புகளுக்கு :
T.அனிதா
(Vice Secretary & Event Cordinator)
077 555 0396
Dream Style Beauty Parlour.
G.அபிராமி
(Board of Member)
077 514 2040
Abi Beauty Care
அனுசரணையாளர் :
ஆனந்தி Ananthi Fancy House Jaffna.
Fashion Bug K.K.S. Rd,Chunnagam.


World Class UK Degree @ICBT Jaffna Campus
EQAA
Apply now for New Intake 2017
ICBT HND IN BUSINESS MANAGEMENT
Finance/ Marketing/ Human Resource Management
TVEC REGISTERED
Duration
• Full Time: 18 Months (Mon-Fri)
• Part Time: 2 Years (Sat & Sun Evening)
Part Time Entry qualifications:
GCE A/L + Work Experience
Cardiff Metropolitan University
BSc (Hons) BUSINESS MANAGEMENT
Offered by Cardiff Metropolitan University, UK
Duration
• 1 year
Entry Qualifications
• Higher National Diploma in Business Management or any other accepted programs.
UGC RECOGNIZED
Why Study ICBT?
• Qualified Lecturer Panel
• High Quality Learning Experience
• Cafeteria/Library/Computer Laboratory/ Recreation Area/Modern Lecture Halls.
• Easy Payment schemes
Week End Part Time Classes
0770 746 553 | 0769 289 784
ICBT CAMPUS JAFFNA
580, Hospital Rd., Jaffna
Tel: (+94)214 777 888
Fax: (+94)654 777 890
Email : jaffna@icbtcampus.edu.lk
National Business Excellence 2016 | 2015 | 2014 | 2013
Gold Award Winner Education Service Sector
www.icbt.lk

பாராட்டுகின்றோம்
Congratulation

வல்வெட்டித்துறை நெடியகாடு
சூசைப்பிள்ளை - மங்களம்,
நல்லூர் இராச வீதி
சின்னத்துரை - பெல்லா தம்பதிகளின்
பேர்த்தியும், சூ. சேவியர் குலநாயகம் -
தேவஜோதி தம்பதிகளின் ஏகபுத்திரியும்,
யாழ். சுண்டுக்குளி மகளிர் கல்லூரி
பழைய மாணவியுமான
செல்வி ஆன் சுமங்கலா
குலநாயகம் அவர்கள்
இன்று (19.07.2017) புதன்கிழமை இலங்கை
உயர் நீதிமன்ற நீதியரசர்கள் முன்னிலையில்
உயர் நீதி மன்றச் சட்டத் தரணியாகச்
சத்தியப்பிரமாணம் செய்வதையிட்டு
வாழ்த்திபாராட்டுகின்றோம்.
வல்வெட்டித்துறை மக்கள் சார்பில்
எம்.கே.சிவாஜிலிங்கம்,
வடக்கு மாகாண சபை உறுப்பினர்,
முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்,
வல்வெட்டித்துறை நகர சபையின் முன்னாள் தலைவர்
077 772 9020

# சைட்டம் பிரச்சினை மேலும் தீவிரமாகும்

## மருத்துவ பீட ஆசிரியர்கள் சம்மேளனம் கருத்து

நெவில் பெர்னாண்டோ போதனா வைத்தியசாலையை அரசு பொறுப்பேற்பதன் மூலம் சைட்டம் பிரச்சினை தீவிரமாகுமே தவிர, குறையப்போவ தில்லை என பல்கலைக்கழக மருத்துவபீட ஆசிரியர்கள் சம்மேளனம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் கராப்பிட்டிய மருத்துவ பீடத்தின் பேராசிரியர் மகிந்த கோமலகே தெரிவித்ததாவது:

தனது வைத்தியசாலையை அரசு பொறுப்பேற்கவேண்டுமென்பது மருத்துவர் நெவில் பெர்னாண்டோவின் தனிப்பட்ட கோரிக்கையாகும். அதன்மூலம் பயனடையப்போவது அவர் மட்டுமே.

அந்த வைத்தியசாலையை அரசு பொறுப்பேற்கவேண்டுமென அரச மருத்துவர்கள் சங்கமோ, மருத்துவ பீடங்களின் தலைவர்களோ, அரச பல்கலைக்கழக மாணவர்களோ வற்புறுத்தவில்லை. மருத்துவர் நெவில் பெர்னாண்டோவின் தனிப்பட்ட வேண்டுகோளை அரசு நிறைவேற்றியுள்ளதே தவிர, வேறெந்த சாதனையும் நடக்கவில்லை. அத்துடன், இந்த வைத்தியசாலையின் மருத்துவர்கள், தாதிகள் உட்பட சகலரும் அரசால் பொறுப்பேற்கப்படுகிறார்கள். அங்குள்ள மருத்துவர்களில் பெரும்பாலானோர் ஓய்வுபெறும் நிலையில் அல்லது அதைக் கடந்த நிலையில் உள்ளவர்கள். அத்துடன், அங்குள்ள தாதியர்கள் இலங்கை தாதியர் கவுன்சிலிலோ அல்லது இலங்கை மருத்துவ கவுன்சிலிலோ பதிவு பெறாதவர்கள். எனவே, இத்தகைய குறைபாடுகளுடன் அரசு பொறுப்பேற்கும் நெவில் பெர்னாண்டோ போதனா வைத்தியசாலையை தொடர்ந்து நிர்வகிப்பதில் பல்வேறு நடைமுறைச் சிக்கல்கள் நிச்சயமாக வரும் என்றார்.

(த)

7 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



இரத்தினம்
பொன்னம்பலம்
பிறப்பு 05.08.1945
இறப்பு 06.08.2010
திதி: ஏகாதசி

அன்பான அப்பாவே! பாசத்தின் திருவுருவே
ஆண்டுகள் ஏழு ஒடி மறைந்தாலும்
உம்பிரிவின் துயர் ஆறாது ஒருபோதும்
உங்கள் ஆத்மா சாந்திபெற துதிக்கின்றோம்.

குடும்பத்தினர்
கரந்தன் வீதி, நீர்வேலி தெற்கு.

கண்ணீர் அஞ்சலி

தோற்றம் 21 . 03 . 1928



மறைவு 15 . 07 . 2017

எமது ஆலய உப தலைவர் சி.திருலிங்கநாதன் அவர்களின் அன்புத் தாயாரும் ஆலய பெரு மஹோற்சவத்தின் மூன்றாம் திருவிழா உபயகாரரும் ஆலய மணிக்கோபுர திருப்பணியாளருமாகிய
12ஆம் வட்டாரம் - புங்குடுதீவைச் சேர்ந்த

சிவகுரு சிவக்கொழுந்து

எந்தநாள் காண்போமினி .... புனிதமான பொன்னுலக வாழ்வு தல்லையபற்று சங்கரமூர்த்தி முருகமூர்த்திவேல் பெருமானின் பாதக்கமலங்களில் சரணமாகட்டுமே......
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

ஆலய தர்மகர்த்தாவும், நிர்வாக சபையினரும்
புங்குடுதீவு தல்லையபற்று
சங்கரமூர்த்தி முருகமூர்த்தி வேல் தேவஸ்தானம்.

புங்குடுதீவு - 12

நன்றி நவிலலும்
31 ஆம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



திதிவெண்பா

ஆண்டு ஏவிளம்பி ஆனதிங்கள் ஆனியதில்
பூண்ட திதி அபரபட்ச துவாதசியில் - சீர்பெருகு
தொண்டன் சந்திரசேகரப் பெரியோன்
நண்ணினார் நாகம்மை நற்றாள்

கடந்த 21.06.2017 அன்று சிவபதம்
அடைந்த எங்கள் குடும்பத் தலைவர்

அமரர் செல்லையா
சந்திரசேகரம் (நயினாதீவு)

மலர்வு 16.04.1946
உதிர்வு 21.06.2017

அவர்களின் மரணச்செய்தி கேட்டு ஓடிவந்து உதவிகள் பலவும் செய்தவர்களுக்கும், எமது ஆற்றொணாத் துயரத்தில் பங்கு கொண்டு அனுதாபம் தெரிவித்தவர்களிற்கும், இறுதிக் கிரியைவரை தோள்கொடுத்து நின்ற எமதன்பு உறவுகளிற்கும் நண்பர்களுக்கும் எமது இதயம் நெகிழ்ந்த நன்றிகள்.

மேலும் அன்னாரின் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் நாளை (20.07.2017) வியாழக்கிழமை காலை 7.00 மணிக்கு நயினாதீவு புனித கங்காதரணி தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிருத்திய நிகழ்வு முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்திலும் நடைபெறும். இந்நிகழ்வுகளில் தாங்கள் குடும்பசகிதம் வருகைதந்து அவரது ஆத்மா இறைசாந்திபெறப் பிரார்த்திப்பதுடன் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

(தயவு கூர்ந்து இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தரவும்)

நயினாதீவு - 05
குடும்பத்தினர்.

நீங்கா நினைவுகளில்

இரண்டாம் ஆண்டு
10 ஆம் ஆண்டு





திருமதி
ரதிதேவி
புவனேந்திரராசா
பிறப்பு 02.03.1951
இறப்பு 10.08.2015
திதி : ஏகாதசி (19.07.2017)

அமரர்
சரவணமுத்து
சதாசிவம்
(சான்டோ மாஸ்ரர்)
பிறப்பு 06.12.1922
இறப்பு 14.08.2007
திதி : திருதியை (25.07.2017)

பாசத்தின் உறைவிடமாய்
பண்பின் சிகரமாய்
பாசத்தால் அரவணைத்து
வழிகாட்டிய எங்கள் தெய்வங்களே!
உங்கள் நினைவுகளில் வாழ்கின்றோம்.

305, A.V.றோட், அரியாலை,
யாழ்ப்பாணம்.
குடும்பத்தினர்.

31 ஆம் நாள் நினைவஞ்சலியும்
அந்தியேட்டி அழைப்பும்

அன்னை மடியில
03 . 05 . 1941



ஆண்டவன் அரவணைப்பில்
19 . 06 . 2017

அமரர் குமாரசாமி உதயகுமார்
[ஓய்வு பெற்ற பிரதிக் கல்விப் பணிப்பாளர்]

தவம் புரியாமலே கிடைத்த வரம் நீ
பூவுலகப் பணிகள் அனைத்தையும்
கச்சிதமாக நிறைவேற்றி மகிழ்ச்சியில்
மேலுலகப் பணிபுரிய விரைந்தாய்
அங்கும் உன்பணியை சிறப்பாகப் புரிந்து
சிவத்துடன் சங்கமமாகுவீர்.

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (19.07.2017) புதன்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற உள்ளது. அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அவரது ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பொன்னையா வீதி,
ஆனைக்கோட்டை.
குடும்பத்தினர்.
021 221 3258

# அரசின் பெரும்பான்மையை தகர்த்தெறிய மகிந்த வியூகம்

புதிய அரசமைப்பை தேசிய அரசு கொண்டுவருவதைத் தடுக்கும் வகையில் முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச தலைமையிலான அணியினர் இராஜதந்திர வியூகங்களை வகுத்து நாட்டில் உறுதியற்ற நிலையை உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டு வருகின்றனர். நாடாளுமன்றில் தேசிய அரசின் மூன்றிலிரண்டு பெரும்பான்மையை உடைத்தெறிவதே இவர்களின் தற்போதைய பிரதான இலக்காகவுள்ளது எனவும் அரசியல் வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.

2015ஆம் ஆண்டு பொது வேட்பாளராக அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன போட்டியிட்டபோது புதிய அரசமைப்பொன்றைக் கொண்டுவருவதும், தேர்தல் முறைமையை மறுசீரமைப்பதுமே அவரின் முதன்மை தேர்தல் வாக்குறுதிகளாகக் காணப்பட்டன. அதன் அடிப்படையில் தற்போது தேர்தல் மறுசீரமைப்பு மற்றும் புதிய அரசமைப்பொன்றைக் கொண்டுவருவதற்கான அனைத்து அடித்தளங்களும் இடப்பட்டுள்ளன.

அடுத்த மாதம் புதிய அரசமைப்புத் தொடர்பான இடைக்கால அறிக்கை நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படும் என்று தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க அண்மையில் அறிவித்திருந்தார். இந்த அறிவிப்பையடுத்தே தேசிய அரசில் அங்கம் வகிக்கும் சுதந்திரக் கட்சியின் ஒரு தரப்பு அதிருப்தியடைந்துள்ளது.

இதுவரை காலமும் அரசமைப்பு மறுசீரமைப்புக்கே சுதந்திரக் கட்சி ஆதரவளிக்கும் என்று கூறப்பட்டு வந்தது. அனால், புதிய அரசமைப்புக்குப் பச்சைகொடி காட்ட சு.கவின் மத்திய குழுவும் தயாராகும் சூழல் உருவாக்கியுள்ளதாலே கருத்து முரண்பாடுகள் தோற்றம் பெற்றுள்ளன. இதனைச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டு சு.கவின் அதிருப்திக் குழுவினரை தேசிய அரசில் இருந்து பிரித்தெடுக்க மகிந்த தரப்பு தீவிர முயற்சியில் ஈடுபட்டுள்ளது.

சு.கவின் அதிருப்திக் குழுவினரைத் தக்கவைத்துக்கொள்ள அரச தலைவரும், சு.கவின் மத்திய குழுவும் அயராது பாடுபடுகின்ற போதிலும் அவர்களிடமிருந்து இதுவரை சாதகமான சமிக்ஞை எதுவும் கிடைக்கவில்லை.

தேசிய அரசிலிருந்து வெளியேறவுள்ளதாகக் கூறப்படும் சு.கவின் அதிருப்திக் குழுவைச் சேர்ந்த18 பேரை மகிந்த அணியினர் தமது பக்கம் இழுத்துக்கொள்ளும் பட்சத்தில் தேசிய அரசுக்கு நாடாளுமன்றில் உள்ள பெரும்பான்மை கேள்விக்குறியாகிவிடும்.

அதனை அடிப்படையாகக் கொண்டு நாட்டில் ஏற்படும் உறுதியற்ற தன்மையால் உள்ளூராட்சிச் சபைத் தேர்தலில் வாக்கு வேட்டையை நடத்த இராஜதந்திரக் காய்நகர்த்தலை மகிந்த அணியினர் மேற்கொண்டு வருகின்றனர் என அறிய முடிகின்றது. (த)

## பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

மு/ மல்லாவி மத்திய கல்லூரி தேசிய பாடசாலையின் வருடாந்த பொதுக்கூட்டமும், நிர்வாகத் தெரிவும் கல்லூரி மண்டபத்தில் எதிர்வரும் 30.07.2017 அன்று முற்பகல் 10 மணிக்கு இடம்பெறவுள்ளதால் அனைத்துப் பழைய மாணவர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தலைவர் — செயலாளர்

## TOYOTA AQUA கார் உடன்விற்பனைக்கு

மிகவும் நல்ல நிலையில் உள்ள புதிய மொடல், சகல வசதிகளும் உள்ள TOYOTA AQUA HYBRID வெள்ளைநிற கார் (CAG - XXXX) உடன் விற்பனைக்குண்டு.

**T.P No:- 071 894 5692**

## அம்மா பரமேஸ்வரி ஜோதிட நிலையம் பண்டித் துளசிராம் சுவாமி

இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ளார்கள் வம்சாவளியாக அம்மா பரமேஸ்வரி அருள் கொண்டு கைரேகை முகநாடி பிறந்த தேதி நட்சத்திரம் ஜாதகம் ஆகியவற்றைக்கொண்டு துல்லியமாக நடந்தவை நடக்கின்றவை. நடக்கப்போகின்றவை இவர் பாரம்பரியமாக ஜோதிடம் சொல்பவர். ஆயுள்பூஜை, லட்சுமிகடாச்சப் பூஜைகள் எல்லா தோசங்களுக்கும் பரிகாரம் செய்யப்படும். வியாபார ஸ்தாபனங்களுக்கும் பரிகாரம் செய்யப்படும் படிப்பு தொழில், திருமணயோகம், குழந்தைப்பாக்கியம், வெளிநாட்டுப்பயணம், வீடு கட்டுதல் கணவன் மனைவி ஒற்றுமை, காதல் பிரச்சனை, பாலியல் பிரச்சனை, கல்யாணயோகம், வாஸ்திரம் மற்றும் பிரச்சனைகள் எதிரிகள் கண்திருஸ்டி கோட் வழக்குகள், வாகனப்பொருத்தம், பணப்பிரச்சினை, பிள்ளைகள் குடும்பத்துடன் ஒற்றுமையாக நிலைத்திருத்தல் லொற்றரி பாக்கியம் மற்றும் வசீகரம் செய்யப்படும் ராசிக்கற்கள் பார்த்துச் சொல்லப்படும், எண்கணிதப்படி மணமக்கள் பொருத்தம் பார்க்கப்படும் நம்பிக்கையுடன் இவரை ஒருமுறை சந்தியுங்கள். **காலை 9.00 - மாலை 7.00**

**ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் (முல்லை சந்தி)**
**077 218 6324**

## வேலையாள் தேவை

நவாலியிலுள்ள பிரபல வெதுப்பகமொன்றுக்கு வெதுப்பக வேலை தெரிந்தவர்கள் தேவை.

**077 325 3610**

## பணிப்பெண் தேவை

படுக்கையிலிருக்கும் வயோதிப தாய் ஒருவரைப் பராமரிக்கப் பணிப்பெண் தேவை.

**077 899 9917, 077 727 3879**

## விஷேட பல் வைத்திய சேவை

- பல் முக சீராக்கல் (Consultant Orthodontist)
- முக சத்திரசிகிச்சை (Consultant Facio Maxillary Surgeon)

மேற்கொள்ளுவதற்கு விசேட வைத்திய நிபுணர்கள் வருகை தருகின்றனர்

- மிதப்புப் பற்களைச் சீராக்குதல் (கிளிப் மூலம்)
- ஒழுங்கற்ற பற்களைச் சீராக்குதல்
- நிரந்தரமாக பற்களைப் பொருத்துதல் (Crown & Bridges, Implants)
- வேர்முறை சிகிச்சை (Root Canal Filling)
- நவீன முறையில் அனைத்துவிதமான பற்சிகிச்சைகள்
- பற்களை வெண்மையாக்குதல் (Vital Bleeching)

**சன்றைஸ் மெடி கிளினிக்**
388, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு:077 934 7687(லதா)

**றோயல் மெடிக்கல் சென்ரர்**
454, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 654 4731 (தர்சினி)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

" பின்பு பரலோகத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாகக் கேட்டேன். அது கர்த்தருக்குள் மரிக்கிறவர்கள் இது முதல் பாக்கியவான்கள் என்றெழுது. அவர்கள் தங்கள் பிரயாசங்களை விட்டொழிந்து இளைப்பாறுவார்கள். அவர்களுடைய கிரியைகள் அவர்களோடே கூடப்போம்: ஆவியானவரும் ஆம் என்று திருவுளம் பற்றுகிறார் என்று சொல்லிற்று"

வெளிப்படுத்தல் 14:13

ஆண்டவன் படைப்பில்
17 . 11 . 1933



ஆண்டவன் பாதத்தில்
19 . 07 . 2015

### செல்வி மேரிபூரணம் உவில்லியம்

(ஓய்வுபெற்ற ஆசிரியை)

இறைசந்நிதியில் மறுபடியும் சந்திப்போம்
அன்னாரின் தன்னலமற்ற வாழ்வுக்கு ஆண்டவருக்கு நன்றி
ஆன்ம சாந்திக்காக என்றும் பிரார்த்திக்கும் ..

39. சந்நிதி வீதி,
அச்சுவேலி.

குடும்பத்தினர்,
அச்சுவேலி,
கனடா - வினிபெக்.

## 6ஆம் மாத நினைவலைகள்

தோற்றம்
17 . 07 . 1944



மறைவு
19 . 01 . 2017

அச்செழுவைப் பிறப்பிடமாகவும், சிவன்வீதி, ஆவரங்கால் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட

### அமரர் வைத்திலிங்கம் தம்பிநாதன்

எம் குடும்பத்தின் விருட்சமாய் இருந்து அன்பாக எம்மை அரவணைத்து
வாழ்க்கைப் பாதையிலே நாம் உயர
நல் அறிவுரைகள் கூறி எம்மைப்
பக்குவமாய் வளர்த்தெடுத்த எமதருமைத் தந்தையே!
நீங்கள் எம்மைவிட்டுப் பிரிந்து ஆறு மாதங்கள் ஆகியும்
அறியவில்லை உங்கள் நினைவுகள்
இன்றும் எம்முடன் இருப்பதுபோல் மனக்கண்முன் காட்சி அளிக்கும் நீங்கள்
எத்தனை ஆண்டுகள் ஆனாலும் உங்கள் நினைவுகள்
எம் நெஞ்சை விட்டு என்றும் நீங்காது...

என்றும் நினைவில்....

சிவன்வீதி,
ஆவரங்கால் மேற்கு.

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# கூட்டு அரசின் பயணம் தொடரவேண்டும்

தற்போதைய கூட்டு அரசின் எதிர்காலம் குறித்து அச்சம் தரக்கூடிய சமிக்ஞைகளும் எதிர்வுகூறல்களும், ஊகங்களும் ஊடகங்களை ஆக்கிரமித்து வருவதைக் காணமுடிகின்றது.

அரசின் இரு பிரதான கட்சிகள் மத்தியிலான முரண்பாடுகள் தீர்க்கமடைந்துள்ளன. அரசில் அங்கம் வகிக்கும் சிறி லங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் வெளியேறி எதிரணியில் அமரத் தீர்மானித்துள்ளனர் எனத் தகவல்கள் கசிகின்றன. சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் இதனைப் பகிரங்கமாக அறிவித்துள்ளனர்.

அப்படியானஒருவாய்ப்பு உருவாகாது என்று அரசதலைவர் மைத்திரிபால சிறிசேனவும், தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவும் கூறிவந்தாலும், ஏனையவர்களின் பேச்சுக்கள் அதற்கு வலுச் சேர்ப்பதாக இல்லை. இந்தப் பிணக்கின் ஒரு வெளிப்பாடாக வடமத்திய மாகாணசபையில் நேற்று நடைபெற்றுள்ள சம்பவங்கள் உள்ளன. அங்கு ஐக்கிய தேசியக் கட்சியும் மகிந்த அணியும் இணைந்துகொண்டு சிறிலங்காசுதந்திரக்கட்சி முதலமைச்சருக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளன.

மூடிய அறைகளுக்கு வெளியே உள்ள பொதுமக்களுக்கு இந்த விடயங்கள் மனக்கலக்கத்தை அளிக்கக்கூடியவை. அதிலும் குறிப்பாகச் சிறுபான்மை இன மக்களுக்கு அச்சத்தை அளிக்கக்கூடியவை. அவர்கள் பெரும் எதிர்பார்ப்புக்களுடன் இந்த அரசை அரியணையில் அமர்த்தினர். பல முக்கியமான விடயங்களுக்கான ஆணையை வழங்கினர். அரசமைப்புச் சீர்திருத்தங்கள், புதிய அரசமைப்பு, நீதி, மனித உரிமைகள், வாழ்க்கைச் செலவு கட்டுப்படுத்தப்படுதல், பொருளாதார வளர்ச்சி என அந்தப் பட்டியல் மிக நீளமானது.

இவற்றில் ஒரு சில விடயங்கள் தவிர ஏனையவற்றை இந்த அரசு இன்னமும் நிறைவேற்றவில்லை. அது பாதிக் கிணற்றைக்கூடத் தாண்டாத நிலையில், தற்போது உருவாகிவரும் சூழல் இந்த விடயங்களிலிருந்து அரசின் கவனத்தைத் திசைதிருப்பிவிட்டுவிடும் என மக்கள் கவலையடைந்துள்ளனர்.

அவர்களின் கவலை நியாயமானது. தனது உறுதிப்பாட்டை, பலத்தை இழக்கும் அரசு, தன்னைக் காப்பாற்றுவதற்கான முயற்சிகளில், நடவடிக்கைகளில் ஈடுபடும்போது இயல்பாகவே ஏனைய அனைத்து விடயங்களும் மறக்கப்படும், கைவிடப்படும் நிலை உருவாகலாம்.

உலக நாடுகளின் அனுபவமும் இதுவாகவே உள்ளது.

அரசு தனது உறுதிப்பாட்டைக் காப்பாற்றுவது குறித்து மாத்திரம் சிந்திக்கவேண்டிய அரசியல் சூழ்நிலை ஏற்படுமானால், இலங்கை பல வழிகளில் பாதிக்கப்படும்.


முன்னைய அரசின் கடன்பழுவைச் சுமக்கமுடியாமல் சுமந்துகொண்டு நிற்கின்ற அரசு, பொருளாதார அபிவிருத்தி குறித்துக் கவனம் செலுத்தமுடியாத நிலை ஏற்படலாம்.

சிறுபான்மை இனத்தவர்களுக்கு அளிக்கப்பட்ட வாக்குறுதிகளைக் கைவிடுவதற்கு அல்லது அவற்றைக் கிடப்பில் போடுவதற்கு அரசு அரசியல் சூழலைக் காரணம் காட்டலாம்.

இந்த அரசின் பயணம் மக்கள் வாக்களித்த காலம்வரை தடைகளின்றித் தொடர்வது இந்தத் தேசத்தின் ஒட்டுமொத்த நலனுடன் தொடர்புபட்ட விடயம்.

அரசின் பயணம் தொடரும் என்று தலைமை அமைச்சரும் அரச தலைவரும் வெறும் மேடைகளில் முழங்குவதைவிட , அவசரமாக ஏதாவது காரியங்களை அது தொடர்பில் ஆற்றுவது மிக முக்கியமானது.





# மாற்றுத் தலைமைக் கோரிக்கை மாயவலை போன்றதே

இந்துமதி


மாற்றுத் தலைமை தொடர்பாகக் கருத்து வெளியிட்ட ஈ.பி.ஆர்.எல்.எப் இன் தலைவரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஸ் பிரேமச்சந்திரன் இப்போதும் கூட்டமைப்பில்தான் உள்ளாரா? என்ற சந்தேகம் எழுகின்றது. ஏனென்றால் ஒரு தலைமையை ஏற்றுக் கொண்டு அதன்கீழ் செயற்படுகின்ற ஒருவர் மாற்றுத் தலைமை தொடர்பாகப் பேசுவது விசித்திரமான ஒன்று. சி.வி.விக்னேஸ்வரன் மறுத்தால் இன்னொரு மாற்றுத் தலைமை உருவாக்கப்படும் என்று சுரேஸ் பிரேமச் சந்திரன் கூறியுள்ளமை இங்கு கவனிக்கத்தக்கது.

## மாற்றுத் தலைமையை வலியுறுத்தும் ஈ.பி.ஆர்.எல்.எப்.

இவரது தலைமையிலான ஈ.பி.ஆர்.எல்.எப்கட்சி இன்னமும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிப்பதாகத்தான் கூறப்படுகின்றது.

ஆனால் அந்தக் கட்சியின் தலைமையும், ஏனைய முக்கியஸ்தர்களும் கூட்டமைப்பின் தலைமைக்கு எதிரான கருத்துக்களை வெளியிடுவதையே காண முடிகின்றது.

அண்மையில் அந்தக் கட்சியைச் சேர்ந்த வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் கூட்டமைப்பின் தலைமை சர்வாதிகாரப் போக்கில் செயற்படுகிறது என கடுமையாகச் சாடியிருந்தார். இதற்கு கூட்டமைப்பின் தரப்பிலிருந்து பதிலும் வழங்கப்பட்டிருந்தது. ஆனால் பங்காளிக் கட்சியொன்று கூட்டமைப்பின் தலைமையை விமர்சிப்பது கூட்டமைப்புத் தத்துவத்துக்கே நேர்முரணானது. தலைமையைப் பிடிக்காது விட்டால் கூட்டமைப்பிலிருந்து ஒதுங்கி விடுவதே நாகரிகமானது. ஒரு தலைமையின் கீழ் இருந்து கொண்டு அந்தத் தலைமையை விமர்சிப்பது நாகரீகமானதல்ல.



இதேவேளை, தற்போது கூட்டமைப்பையே வடக்குக் கிழக்கில் வாழ்கின்ற தமிழர்கள் தமது தலைமையாக ஏற்றுக் கொண்டிருக்கின்றனர். தேர்தல்களில் அதற்கே வாக்களித்து வெற்றிபெறச் செய்துள்ளனர். சம்பந்தனின் தலைமையை ஏற்று அரசியலுக்குள் நுழைந்தவர்தான் தற்போதைய வடக்கு முதலமைச்சர். சம்பந்தன் ஆதரவு தராது விட்டிருந்தால் சி.வி.விக்னேஸ்வரன் முதலமைச்சரின் கதிரையில் அமர்ந்திருக்க முடியாது. சம்பநதன் கேட்டுக் கொண்டதால்தான் மக்கள் விக்னேஸ்வரனுக்கு வாக்களித்து அவரைஏற்றுக்கொண்டனர். ஆனால் சிலர் அவரை மாற்றுத் தலைவராக உருவாக்குவதற்கு முயற்சி செய்கின்றனர்.

## மாற்றுத் தலைமை குறித்த முதலமைச்சரது நிலைப்பாடு

இதேவேளை, முதலமைச்சர் விக்னேஸ்வரன் மிக அண்மையில் தனது நிலைப்பாட்டை உறுதியாகத் தெரிவித்துவிட்டார்.

மாற்றுத் தலைமை என்ற பேச்சுக்கே இடமில்லை. கூட்டமைப்பின் ஒற்றுமையை நான் ஒருபோதுமே குழப்பமாட்டேன். கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் மற்றும் மாவை சேனாதிராசா மீது முழு நம்பிக்கையுடன் உள்ளேன் என்று தம்மைச் சந்தித்த மூத்த அரசியல் ஆய்வாளர்களிடம் அவர் மனம் திறந்து கூறியுள்ளார். இதனைப் பார்க்கும்போது மாற்றுத் தலைமை என்கின்ற மாய வலைக்குள் அவரைச் சிக்க வைப்பதற்குச் சிலர் முயற்சிக்கின்றனர். எனவே எம்மால் ஊகிக்க முடிகின்றது. ஆனால் வடக்கு முதலமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் ஆளுநரிடம் சமர்ப்பிக்கப்பட்ட போது, இதே சி.வி.விக்னேஸ்வரன் நடந்து கொண்டவிதம் தற்போது அவர் கூறியதற்கு நேர்விரோதமாகக் காணப்பட்டது. மக்கள் பலமே எனது பலம், இனிமேல் நான் எவருக்குமே அஞ்சமாட்டேன் என்றெல்லாம் அவர் வார்த்தைகளால் ஜாலம் புரிந்தார். அன்று அவர் நினைத்திருந்தால் எத்தனையோ பிரச்சினைகள் இடம்பெறாமல் தடுத்திருக்க முடியும். ஆனால் கண்கெட்டதன் பின்னர் சூரிய நமஸ்காரம் என்ற விதத்தில் அவரது தற்போதைய நிலைப்பாடு அமைந்துள்ளது.

கூட்டமைப்புக்கு எதிரான சக்தியொன்று இங்கு உருவாகி வருவதை எவருமே மறுக்க முடியாது. கூட்டமைப்பை ஒழித்துவிட்டு அதன் இடத்தில் அமர்ந்து அரசியல் இலாபம் ஈட்டிக் கொள்வதே அந்தச் சக்தியின் முக்கிய நோக்கமாகும்.

இதற்குவடக்குமுதலமைச்சரைஒரு கருவியாகப் பயன்படுத்துவதற்கு அந்தத் தரப்பினர் முனைகின்றனர். அவரை மக்கள் முன் நிறுத்தித் தாம் பயன்பெறுவதற்கு நினைக்கின்ற இவர்களது கபடநோக்கத்தை வடக்கு முதலமைச்சர்கள் புரிந்து கொள்ளாதது ஆச்சரியமான விடயமல்ல. ஆனால் மக்கள்தான் குழம்பிப் போய் விட்டனர். இப்போது அவர்களுக்குத் தெளிவு பிறந்திருக்கும்.

## மக்கள் சேவையால் மக்களது ஆதரவு பெற்றவர்களே தலைவர்கள்

மாற்றுத் தலைமை என்பது உருவாக்கப் படக்கூடியதல்ல. அது தானாகவே உருவாக வேண்டிய ஒன்று. தியாகத்தாலும் தன்னலமற்ற மக்கள் சேவையாலும் மக்கள் மனங்களில் இடம்பிடித்து தலைவர்களாக உயர்ந்தவர்கள்தான் உண்மையான தலைவர்கள். இவர்களின் பின்னால் அணிவகுத்துச் செல்வதற்கு மக்கள் எப்போதும் தயாராக இருப்பார்கள். இதைவிடுத்து தமது சந்தர்ப்பத்துக்குத் தகுந்தவாறு மாற்றுத் தலைமை, புதிய அரசியல் சக்தி என்றெல்லாம் கூறிக்கொண்டு புலம்பித்திரிபவர்களால் எதையுமே சாதித்துவிட முடியாது.

குறிப்பாகக் கூட்டமைப்புக்குள் இருந்துகொண்டு மாற்றுத்தலைமை தொடர்பாகக் கூறுபவர்கள் முதலில் கூட்டமைப்புடனான உறவைத்துண்டித்து விடுவதே நேர்மையான செயலாகும்.

இந்தநிலையில் வடக்கு முதலமைச்சர் தமது பிடிவாதப் போக்கைக் கைவிட்டு தாம் சார்ந்துள்ள கூட்டமைப்பின் வழிகாட்டல்களுக்கு அமைவாக நடந்து கொள்ள வேண்டும். கூட்டமைப்பை உடைக்கத் தம்மையொரு கருவியாகப் பயன்படுத்துவதற்குச் சிலர் முனைகின்றனர் என்ற உண்மையை அவர் புரிந்து கொள்ள வேண்டும்.

போரினால் மோசமாகப் பாதிக்கப்பட்ட மக்கள் தமது பிரசசினைகள் தீர்க்கப்படுவதையே எதிர்பார்த்துக் களைத்துநிற்கின்றனர். சிலர் அவர்களைக் குழப்புவதையே வேலையாகக் கொண்டு செயற்பட்டு வருகின்றனர். மாற்றுத்தலைமை என்ற மாயையை அவர்கள் காட்டி வருகின்றனர். ஆனால் இதெல்லாம் அதிக காலம் நீடிக்கப் போவதில்லை. மழைக் குமிழிகள் போன்று விரைவிலேயே மறைந்து போய்விடும்.

# 3 நிபந்தனைகளில் புதிய அரசமைப்பின் எதிர்காலம்

நாட்டில் எந்தக் கட்சி ஆட்சி அமைத்தாலும் சிங்களத்துக்கும், பௌத்தத்துக்கும் முன்னுரிமை வழங்கவேண்டும் என்ற நிலைதான் காணப்படுகின்றது. இங்கு வாழ்கின்ற சிறுபான்மையின மக்கள் ஒற்றையாட்சியின் கீழ் தமது பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைக்காதென நாடுசுதந்திரமடைந்தநாளில் இருந்தே கூறி வருகின்றனர்.

சேரலாதன்

புதிய அரசமைப்பை அரசால் எளிதில் நிறைவேற்றி விடமுடியுமென எதிர்பார்க்க இயலாததொரு சூழ்நிலை தற்போது உருவாகியுள்ளது.

புதிய அரசமைப்புக்கு ஆரம்பத்திலிருந்தே சிங்கள இனவாதிகள் தமது எதிர்ப்பை வெளியிட்டு வருகின்றனர். இது நிறைவேற்றி வைக்கப்படுமாயின், அது தனி நாடு உருவாகுவதற்கு வழி அமைத்து விடுமென்பதே அவர்களின் முக்கிய பரப்புரையாகவுள்ளது. தற்போது பௌத்த பீடங்களும்கூட, புதிய அரசமைப்புக்கு எதிராக கடுமையான கருத்துக்களை வெளியிட்டு வருகின்றன. புதிய அரசமைப்புக்குத் தமது ஆதரவைப் பெற வேண்டுமானால் மூன்று முக்கிய விடயங்கள் கவனத்தில் கொள்ளப்பட வேண்டுமென அவை உறுதியாகக் கூறியுள்ளன.

ஒற்றையாட்சி முறைமை நீக்கப்படக் கூடாது, பௌத்த மதத்துக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும்,

மாகாணங்களுக்குப் பொலிஸ், காணி அதிகாரங்கள் வழங்கக் கூடாது என்பவையே அந்த மூன்று விடயங்களுமாகும். இனவாதிகளின் ஆலோசனையின் பிரகாரம் பௌத்த பீடங்களும் புதிய அரசமைப்புக்கு எதிராகப் போர்க்கொடி தூக்கி யுள்ளன.

நாட்டில் எந்தக் கட்சி ஆட்சி அமைத்தாலும் சிங்களத்துக்கும், பௌத்தத்துக்கும் முன்னுரிமை வழங்கவேண்டும்என்றநிலைதான்காணப்படுகின்றது. இங்கு வாழ்கின்ற சிறுபான்மையின மக்கள் ஒற்றையாட்சியின் கீழ் தமது பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைக்காதென நாடுசுதந்திரமடைந்தநாளில் இருந்தே கூறி வருகின்றனர்.

அதிகாரப் பகிர்வுக்கு ஒற்றையாட்சியில் இடமில்லைஎன்பது இவர்களது வாதமாகும் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின்நிறுவுனரானதலைவரான தந்தை செல்வா இதை எப்போதோ கூறிவிட்டார். இனப் பிரச்சினைக்குத் தீர்வுகாணவேண்டுமானால் சமஷ்டிஎனப்படும்கூட்டாட்சி முறையே ஒரே தீர்வு என்பது இறுதிவரை அவரது கொள்கையாகக் காணப்பட்டது. ஏனென்றால் நெகிழ்வுத் தன்மையில்லாத ஒற்றையாட்சியினால் சிறுபான்மையினரின் அபிலாசைகளைத் தீர்க்க முடியாதென்பதை அவர் தீர்க்கதரிசனத்துடன் உணர்ந்திருந்தார்.

### தமிழர் தரப்பினரின் கோரிக்கை கூட்டாட்சி முறைமையே


இன்றும் கூடத் தமிழர் தலைமை ஒற்றையாட்சி இல்லாதொழிக்கப்பட வேண்டும் என்பதில் உறுதியாகவுள்ளது. அடுத்ததாகப் பௌத்த மதத்துக்கு எப்போதோ முன்னுரிமை வழங்கப்பட்டுவிட்டது. இதை எவராலும் இல்லாமற்செய்ய முடியாது. ஏனென்றால் நாட்டில் பௌத்த மதத்தைப் பின்பற்றுபவர்களே பெரும்பான்மையினராக உள்ளனர். இவர்களது விருப்பத்துக்கு மாறாகஎவராலும்எதையும் செய்ய முடியாது.

அதைவிட மாகாணங்களுக்குப் பொலிஸ், காணி அதிகாரங்களை வழங்கக் கூடாது என்பதில் பௌத்த மகா சங்கங்கள் விடாப்பிடியான நிலைப்பாட்டில் உள்ளன. இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் பிரகாரம் உருவாக்கப்பட்ட மாகாணசபைகள் பெருமளவுநிதியைவீணாக விரயம்செய்கின்றஅமைப்புக்களாக மாறிவிட்டன.

### முக்கிய அதிகாரங்கள் இல்லாத மாகாண சபைகள்

பொலிஸ்மற்றும்காணிஅதிகாரங்கள் இல்லாத மாகாண சபைகள் உயிரற்ற உடல்கள் போன்றே காட்சி தருகின்றன. காணி அதிகாரங்கள் வழங்கப்படாமையால் சட்ட விரோதக் காணி ஆக்கிரமிப்புக்களும்,குடியேற்றங்களும் வடக்குக் கிழக்கில் இடம்பெற்று வருகின்றன. கண்முன்னே இடம்பெறுகின்ற சட்டவிரோதக் குடியேற்றங்களைப் பார்த்துக் கொண்டிருக்கவே வடக்குக் கிழக்கு மாகாணசபைகளால் முடிகின்றது. பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப்படாமையால் வடக்கிலும், கிழக்கிலும் அமைதியைப் பேணுவதில்சிக்கல்நிலைதோன்றியுள்ளது.

யாழ். குடாநாட்டில் இடம்பெறுகின்ற வன்முறைச் சம்பவங்களைக் கட்டுப்படுத்த முடியாத நிலையில் வடக்கு மாகாணசபை காணப்படுகின்றது. தமக்குப்பாதுகாப்பு வழங்கமுடியாத மாகாண சபை இருப்பதில் பயனென்ன? என மக்கள் விசனத்துடன் கேள்வி எழுப்பி வருகின்றனர். இந்த நிலையில்பொலிஸ், காணிஅதிகாரங்களை மாகாணசபைகளுக்கு வழங்கக் கூடாதென இனவாதிகளும், பௌத்த மதபீடங்களும் கூறி வருகின்றமை சிறுபான்மையின மக்கள் மத்தியில் எரிச்சலை ஏற்படுத்தியுள்ளது.



### தீர்வு முயற்சிகள் குழப்பப்பட்டமை வரலாற்றுப் பதிவுகள்

கடந்த காலங்களில்கூட இனப் பிரச்சினைக்கான தீர்வு கைக்கெட்டும் தூரத்தில் வரும்போது, அதைத் தட்டிப் பறித்துவிடுகின்ற செயற்பாடுகளில் பௌத்த குருமார் ஈடுபட்டிருந்தமை இந்த நாட்டின் வரலாற்றுப் பதிவுகள் ஆகும். கொடிய நீண்டபோர் ஒன்று நிகழ்ந்து பேரழிவுகளும் இடம்பெற்ற நிலையில் தற்போதுதான். மக்கள் ஓரளவு அமைதியான வாழ்வுக்குத் திரும்பியுள்ளனர். இதைக் கூடச்சிலர்விரும்பவில்லையென்பது தற்போது தெரிகின்றது. இவர்கள் நாட்டில் இன நல்லிணக்கம் ஏற்படுவதையும் அறவே விரும்பாதவர்களாகக் காணப்படுகின்றனர்.

அரசு வேறு வழியில்லாததால் பௌத்த பீடங்களின் கோரிக்கைக்குச்செவிசாய்த்துவிடுமென்பது தெளிவாகத் தெரிகின்றது. தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவும், அமைச்சர் அர்ச்சுண ரணதுங்கவும் பௌத்த பீடங்களின் கோரிக்கைக்கு ஆதரவாகக் கருத்துக்களை வெளியிட்டுள்ளமை இங்கு குறிப்பிடத் தக்கது. புதிய அரசமைப்பின் உருவாக்கம் தொடர்பாகப் பன்னாட்டு அழுத்தங்களையும் அரசு எதிர்கொண்டு வருகின்றது. அண்மையில் இலங்கைக்கு வந்த இந்தியாவின் ஆளும் பாரதீய ஜனதாக் கட்சியின் தமிழ் மாநிலத் தலைவி திருமதி தமிழிசை சௌந்தரராசன் தமிழர்களுக்கு அதிகாரப் பகிர்வு வழங்கப்பட வேண்டுமென வலியுறுத்திக் கூறியுள்ளார். ஒற்றையாட்சி தவிர்ந்த புதிய அரசமைப்பின் மூலமாகவே அதிகாரப் பகிர்வு சாத்தியமாகும். ஆனால் ஒற்றையாட்சி நீக்கப்படுமா? என்பது தான் இன்றைய முக்கிய கேள்வியாகும்.

ஆனால் பௌத்த பீடங்கள் தமது மூன்று கோரிக்கைகள் தொடர்பாக விட்டுக் கொடுக்காது வற்புறுத்தி வருமாயின், புதிய அரசமைப்பின் உருவாக்கம் கருவிலேயே கரைந்துவிடும். ஏனென்றால், நல்லாட்சி அரசு பௌத்த பீடங்களுக்கு மாறான வகையில் எதையுமே செய்ய முடியாத நிலையில் உள்ளமை தெளிவாகத் தெரிகின்றது.



## ஆசிரியருக்கான கடிதம்

### வன்னிப் பகுதி விவசாயிகளுக்கு உரிய உதவிகள் கிட்டுமா?

பனையால் விழுந்தவனை மாடு முட்டிக் காயப்படுத்தியதாம்; பட்டகாலிலேபடும், கெட்ட குடியே கெடும் என்பவையெல்லாம் இழப்புக்களால் துன்பத்துக்கு உள்ளாவோர் தொடர்ந்தும் மென்மேலும் துன்பங்களைச்சந்திக்க நேர்வது குறித்து தன்னிரக்கத்தை வெளிப்படுத்த அமைந்த முதுமொழிகளாகும்.

ஒருபுறம் போர்ப் பாதிப்புக்களால் துவண்டு போய் இழப்புக்கள் மத்தியிலும் தம்மைத் தேற்றிக் கொண்டு எத்தனையோ கஷ்டங்களுக்கும் சவால்களுக்கும் முகம் கொடுத்து தமது வழமையான தொழிலான விவசாய முயற்சிகளில் ஆர்வம் காட்டிச்செயற்பட்டவர்கள்; செயற்படுபவர்கள் வன்னிப் பகுதி விவசாயிகள்.

நாம் எமது விவசாய முயற்சிகளை மேற்கொள்ள இயலாது பாதிப்புஏற்படுத்திய, ஏற்படுத்தும் முக்கிய காரணிகளில் ஒன்று காலநிலை மாற்றத்தால் ஏற்பட்ட கடும் வறட்சி நிலை. இயற்கையோடு எந்த விதத்திலும் மல்லுக்கட்ட முடியாதென்பதை உணர்ந்துமாற்றுவழிமுறைகளைக் கையாண்டு, பெரிய இயந்திரங்களைப் பயன்படுத்தி நீர் நிலைகளிலிருந்து நீர் இறைத்து விவசாயத்தை முன்னெடுத்தாலும், பயிர் அறுவடை செய்யும் தறுவாயில் காட்டு யானைகள் நெற்பயிர்களை நாசம்செய்வதனால் முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான் பேராறுப்பகுதியைச் சேர்ந்த நாம் கடும் விரக்தி அடைந்து வருகிறோம். கடும் வறட்சி காரணமாக தாகத்தோடு நீர்தேடி மக்கள் குடியிருப்புகளுக்குள் காட்டு யானைகள் பிரவேசிப்பதால் எந்நேரமும் அவற்றுக்கு அஞ்சி வாழ வேண்டிய துர்ப்பாக்கிய நிலையையும் நாம் எதிர் கொள்ள நேர்ந்துள்ளது.

பாதிக்கப்படும்
விவசாயிகள் சார்பில்
கே.ரவி,
ஒட்டுசுட்டான்.

# ஐ.எஸ். தலைவர் பக்தாதி உயிருடனேயே உள்ளார்

## குர்தீஸ் படை திட்டவட்டம்



பக்தாத், ஜூலை 19
ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் தலைவர் அபுபக்கர் அல் பக்தாதி கொல்லப்படவில்லை. அவர் உயிருடனேயே உள்ளார் என்று குர்தீஸ் படை அறிவித்துள்ளது.


ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பிடம் இருந்த ஈராக்கின் முக்கிய நகரான மோசூல் கைப்பற்றப்பட்ட பின்னர் அபுபக்கர் அல் பக்தாதியின் நிலை தொடர்பில் முன் பின் முரணான தகவல்களே வெளிவந்துகொண்டிருந்தன. ரஷ்யா, தமது தாக்குதலில் பக்தாதி கொல்லப்பட்டார் என்று தெரிவித்தது. துருக்கி மற்றும் ஈரான் உள்ளிட்ட நாடுகளும் பக்தாதி கொல்லப்பட்டமையை உறுதிப்படுத்தின. ஆனால் அமெரிக்கா அதை மறுத்தது. தற்போது, ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்புக்கு எதிராகப் போரிட்டுவரும் குர்தீஸ் அமைப்பும் பக்தாதி கொல்லப்படவில்லை என்று தெரிவித்தது.

"ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் தலைவர் அபுபக்கர் அல் பக்தாதி உயிரோடு இருக்கிறார். எங்களுக்கு அவர் குறித்த தகவல் கிடைத்துள்ளது. அவர் மறைந்து இருக்கிறார். அவர் என்ன செய்து கொண்டிருக்கிறார் என்று எமக்கு நன்கு தெரியும். விரைவில் அவர் கொல்லப்படுவார்" என குர்தீஸ் படை மேலும் குறிப்பிட்டது. (ம)



### கொரிய நாடுகளிடையே இணக்கத்தை ஏற்படுத்த செஞ்சிலுவைச் சங்கம் கடும் முயற்சி

பியாங்யாங், ஜூலை 19
கொரிய நாடுகளான வடகொரியா மற்றும் தென்கொரியா இடையே இணக்கத்தை ஏற்படுத்துவதற்கு பன்னாட்டு செஞ்சிலுவைச் சங்கம் கடும் முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது என்று அறியவருகிறது.
வடகொரியாவின் ஏவுகணைச் சோதனைகள் காரணமாக கொரியத் தீபகற்பத்தில் பதற்றநிலை ஏற்பட்டுள்ளது.
வடகொரியாவின் அயல்நாடும் பகை நாடுமான தென்கொரியா வடகொரியா மீது ஏகப்பட்ட தடைகளை விதித்துள்ளது.
வடகொரியாவின் ஏவுகணைச் சோதனைகள் தனது பாதுகாப்புக்கு பங்கம் ஏற்படுத்தக்கூடியவை என்று தென்கொரியா ஐக்கிய நாடுகள் சபையிடம் அவ்வப்போது வலியுறுத்தி வருகிறது. இது தொடர்பான வாக்குவாதங்கள் தொடர்ந்து நடைபெற்றுவரும் நிலையில் இந்த இரு நாடுகளுக்கும் இடையில் இணைக்கத்தை ஏற்படுத்த பன்னாட்டு செஞ்சிலுவைச் சங்கம் களமிறங்கியுள்ளது. ஐக்கிய நாடுகள் சபையின் முயற்சிகள் தோல்வியில் முடிந்துள்ள நிலையில் செஞ்சிலுவைச் சங்கத்தின் முயற்சி எந்தளவுக்கு சாத்தியமாகும் என்பது மட்டில் எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது. (ம)



கம்போடியாவின் காம்போங் மாகாணத்தில் உள்ள நூற்றாண்டுப் பழமை வாய்ந்த 'சரபோ பரி குக்' என்ற கோவில் யுனெஸ்கோ அமைப்பின் புராதனச் சின்னமாக அடையாளமிடப்பட்டுள்ளது. வனங்களுக்கு இடையில் இந்தக் கோவில் அமைந்துள்ளதால் இது 'வனங்களின் கோவில்' என்றும் குறிப்பிடப்படுகிறது. (ம)



### மரபணு மாற்றத்தால் மிகப்பெரிய நாய்கள்

*சீன விஞ்ஞானிகள் உருவாக்கினர்.*

மரபணு மாற்றத்தின் மூலம் மிகப் பெரிய நாய்களை சீன விஞ்ஞானிகள் உருவாக்கியுள்ளனர்.
சோதனைக் குழாய் மூலம் உருவாக்கப்பட்டுள்ள இந்த நாய்கள் ஏனைய நாய்களை விட பலமடங்கு எடை கொண்டவை. இவை அதிக பலம் வாய்ந்தனவாகவும், மிக வேகமாகப் பாய்ந்துசென்று எதிரிகளை வேட்டையாடும் தன்மை கொண்டவையாகவும் உள்ளன. இராணுவ மற்றும் பொலிஸ் உதவிக்கு என்று இந்த நாய்கள் உருவாக்கப்பட்டுள்ளன.
இந்தத் தொழில் நுட்பத்தில் நாய்களை உருவாக்கிய இரண்டாவது நாடு என்ற பெருமையை சீனா பெற்றுள்ளது. முதலிடத்தில் தென்கொரியா உள்ளது. (ம)

### ரஷ்யாவில் சுனாமி எச்சரிக்கை

மொஸ்கோ, ஜூலை 19
ரஷ்யாவுக்கு அருகாக வடக்கு பசிபிக் பெருங்கடலில் 7.8 ரிச்டர் அளவுக்கு நேற்றுக் காலை நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. இதையடுத்து ரஷ்யாவின் சில இடங்களுக்கு சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டது.
கடற்கரையில் இருந்து 300 கிலோ மீற்றர் தொலைவுக்குள் இந்த சுனாமி ஏற்பட வாய்ப்புள்ளதாக கூறப்படுகிறது. சுனாமி எச்சரிகையை அடுத்து ரஷ்யாவில் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டுள்ளன. (ம)

## சசிகலாவுக்குச் சிறப்புச் சலுகையைக் கண்டித்து கைதிகள் உணவொறுப்பு



சென்னை, ஜூலை 19
பெங்களூர் பரப்பன அக்ரகார சிறையில் சசிகலாவுக்கு வழங்கப்பட்டுள்ள சிறப்புச் சலுகையைக் கண்டித்து ஏனைய கைதிகள் நேற்றுக் காலை உணவு ஒறுப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.
சொத்துக் குவிப்பு வழக்கில் அ.தி.மு.க. (அம்மா) அணியின் பொதுச் செயலாளர் சசிகலா, இளவரசி, சுதாகரன் ஆகியோருக்கு தலா 4 ஆண்டுகள் சிறை தண்டனை விதிக்கப்பட்டு பெங்களூர் பரப்பன அக்ரகார சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். சிறைவாசம் அனுபவித்து வரும் சசிகலாவுக்கு சிறப்பு வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளது என அவ்வப்போது தகவல்கள் வெளியாகி வந்தன. ஆனால் அவருக்கு சிறையில் எந்தவொரு சிறப்பு சலுகையும் வழங்கப்படவில்லை என்றும், சாதாரண கைதி போலவே அவர் நடத்தப்படுகிறார் என்றும் சிறைத்துறை அதிகாரிகள் கூறி வந்தனர்.
இந்த நிலையில், பரப்பன அக்ரகாரா சிறையில் கடந்த 10ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட திடீர் ஆய்வின் அடிப்படையில் சசிகலாவுக்கு சிறப்புச் சலுகை செய்து கொடுக்கப்பட்டிருப்பது தெரியவந்தது. இது பல அதிர்வலைகளை ஏற்படுத்தியிருந்த நிலையில், இந்தப் பாரபட்ச நடவடிக்கையைக் கண்டித்து சுமார் 200 கைதிகள் நேற்றுக்காலை உணவு ஒறுப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். (ம)

24ஆம் ஆண்டு நினைவலைகள் 20ஆம் ஆண்டு நினைவலைகள் 3ஆம் ஆண்டு நினைவலைகள்



மலர்வு 13 . 02 . 1929
உதிர்வு 20 . 12 . 1993
திதி: ஸப்தமி
இளையதம்பி கந்தசாமி



மலர்வு 19 . 11 . 1961
உதிர்வு 30 . 07 . 1997
திதி: ஏகாதசி
19.07.2017
செல்வி மைதிலி கந்தசாமி



மலர்வு 15 . 01 . 1930
உதிர்வு 09 . 03 . 2014
திதி: நவமி
திருமதி மங்கையர்க்கரசி கந்தசாமி

ஆண்டுகள் பல சென்றும் ஆறவில்லை எங்கள் துயரம். நீண்டு செல்லும் நினைவுகள் நிதமும் நெஞ்சை வாட்டுகின்றன
பாதிவழிதனில் பரிதவிக்கவிட்டுச் சென்றதேனோ? மீண்டும் உங்கள் வரவுகாண நிதம் ஏங்கித் தவிக்கின்றோம்

உங்கள் பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.

ஞானபண்டித பாடசாலை அருகில், கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

**பொன் மொழி**

ஒவ்வொரு மனிதரும் இந்த உலகத்தையே மாற்ற வேண்டும் என்று நினைக்கிறார்கள்.ஆனால் ஒருவர் கூட தங்களை மாற்றிக்கொள்ள வேண்டுமென நினைப்பது இல்லை

- லியோ டால்ஸ்டாய்

**பொது அறிவு:** உலகின் முதல் கோடீஸ்வரர் பெட்ரோலிய பொருள் சந்தையில் புரட்சியை ஏற்படுத்திய அமெரிக்கரான ஜான் டி ராக்பெல்லர். 1916ஆம் ஆண்டு செப்டம்பர் 29ஆம் திகதி உலகின் முதல் கோடீஸ்வரர் என்று அவர் அறிவிக்கப்பட்டார்.

**வலைப்பதிவு:** சிறுதுளி பெருவெள்ளம் என்பது சேமிப்புக்கு மட்டுமல்ல கடனுக்கும் பொருந்தும்.

-ஸ்ரீ

19 ஜூலை 2017 புதன்கிழமை

பக்கங்கள் 06

# புதன் பொய்கை

‘சிறுகதை’ வாசகர்களுக்கு உணர்வூட்டல் அவசியம் 21



மரபுத் தொடரா? கிள்ளை மொழியா? 16




வாயு புத்திரனும் விரைந்து வந்திட்டான் 19

# இயக்குநர் சபா

## நாடகக் கலை மொழியாளன்

வந்தியத்தேவர்



“டைரக்டர்சபாஎன்றசெல்லப்பெயருடன்நாடகஉலகில்பவனிவந்த சபாரத்தினம் வெறும் நாடகக் கலைஞர் மட்டுமல்ல. சிறந்த விளை யாட்டு வீரரும் கூட. கரப் பந்தாட்டம் இவருக்கு மிகவும் பிடித்தமான விளையாட்டாகும். கரப்பந்தாட்டமைதானத்தின்ஒரு பகுதியில்ஒன்பதுவீரர்கள்விளையாடமறுபகுதியில்தனியொருவராக நின்று விளையாடி வெற்றி பெறும் திறமையும் சாதுரியமும் கொண்டவர் அவர்.”

மூன்று தசாப்த காலங்களுக்கு முன்பான கால வெளியில் அனைவராலும் நன்கு அறியப்பட்ட இயக்குநராக திகழ்ந்தவரே ‘சபா’ என்று அழைக்கப்பட்ட வே.சபாரத்தினம். பண்பு நலன் சார்ந்து எல்லோருக்குமே நன்கு பரீட்சயமானவராக இருந்தார்.கலையின் வழி சிறந்திரந் தார் எனலாம். ஆரம்ப காலங்களில் நல்ல பெயருடைய நடிகர்களில் முக்கியத்து வம் கொடுத்துப் பேசப்பட்டவராகவும் இவர் விளங்கு கிறார்.

பிரபல வர்த்தகரான வேலுப்பிள்ளைதம்பதிகளின்இளைய புதல்வனாகப் பிறந்த சபாரத்தினம் சிறந்த நடிகர் மட்டுமல்லாது நல்ல நாடக இயக்குநராகவும், பாடகராகவும் திகழ்ந்தார். மாணவப்பருவத்திலேயே நாடகத்துறையில் ஆர்வ மேலீட்டோடு கால்பதித்துத் தன்னுடைய திறமைகளை வெளிக்காட்டினார். நாடகத் துறையில் ‘ரிக்சாக்காரன்’ நாடகம் அவருக்கான ஆரம்பங்களைக் கொடுத்திருந்தது. நெடுந்தீவில் திரைப்படங்களைப் பார்ப்பதற்கான வாய்ப்புக்கள் இல்லாத காலங்களிலும் தன்னார்வம் கொண்டு தனது திறமைகளை வளம் படுத்திக்கொண்டார். குறிப்பாக நாட்டுக் கூத்து மற்றும் கலை நிகழ்வுகளைப் பார்த்து தான் இரசித்த காட்சிகளைத் வீட்டிலே ஆற்றுகையும் ஒப்பனையும் செய்து நடிப்புத் திறமையை வளர்த்துக் கொண்டார். அவரது குடும்ப உறுப்பினர்களும் சிறந்த கலைஞர்களாக செயற்பட்டு வந்தமை இவரது வளர்ச்சிக்கு மேலும் உறுதுணையாக இருந்துள்ளது.

அமரலிங்கன், வேல் ஆனந்தன், இராசலிங்கம்,பேரம்பலம் போன்ற சிறந்த நாடக ஆளுமைக் கலைஞர்களோடு பல்வேறு நாடகங்களில் நடித்தார். தான் பெற்ற அனுபவங்களை ஏனையோருடன் பகிர்ந்து கொள்வதில் ஆர்வம் காட்டினர். சிறந்த நாடகக் கலைஞர்களான சாமி திருநாவுக்கரசு, புலவர் அரியநாயகம், சவிரிமுத்து, திசைராஜா, ஜெயராசா, மகேஸ், குணரட்ணம் போன்ற கலைஞர்களுடனும் பலதரப்பட்ட மேடைநாடகங்களை அரங்கேற்றம் செய்தார். நாட்டுக் கூத்தின் வளர்ச்சியில் பெரும் பங்காற்றியுள்ளார்.

நாடகங்கள் மீதான ஆர்வம் காரணமாக அரச உத்தியோகத்தை உதாசீனம் செய்தார்.பொலிஸ் அதிகாரி பதவியைத் துறந்தார். அதன் தொடர்ச்சியாக நெடுந்தீவில் ‘வெடியரசன்’ நாடகமன்றத்தை ஆரம்பித்தார்.மன்றத்தின் முதல் அரங்கேற்றமாக ‘வெடியரசன்’ நாடகத்தை மேடையேற்றி வெற்றி கண்டார். தொடர்ந்து ‘சுதுமலைச் சுப்பன்’, ‘பாசமலர் வெளிக்கிடடி’, ‘விசுவமடுவுக்கு விடிவெள்ளி’, ‘வாழத் தெரியாதவன்’ போன்ற ஜனரஞ்சகச் சுவையுடைய நாடகங்களை மேடையேற்றினர். இதனூடே ரசிகர்களின் வரவேற்பை தன்வசப்படுத்தி தன்னை ஒரு சிறந்த நாடகக் கலைஞராகவும், சிறந்த இயக்கநராகவும் மக்களுக்கு வெளிப்படுத்திக்கொண்டார்.

இவருடைய நாடகத் தயாரிப்புகளுள் ‘சுதுமலைச் சுப்பன்’ தரமான முழுநீள நகைச்சுவை நாடகம். ரசிகர்களின் அதீத வரவேற்பை பெற்றுக்கொண்ட நாடகமாக திகழ்ந்தது. காணப்பட்டது. இயக்குநர் ‘சபா’ என்ற செல்லப் புனை பெயருடன் நாடக உலகில் வலம் வந்த சபாரத்தினம் தனித்து ஒரு நாடகக் கலைஞர் மட்டுமல்ல. பல் துறைக் கலைஞராகவும் விளங்கினார். கரப்பந்தாட்டம் இவருக்கு மிகவும் பிடித்தமான விளையாட்டாகும். கரப்பந்தாட்ட மைதானத்தின் ஒரு பகுதியில் ஒன்பது வீரர்கள் விளையாட மறுபகுதியில் தனியொருவராக நின்று விளையாடி வெற்றிபெறும் திறமையும் சாதுரியமும் கொண்டவர். போட்டியிட்டு வெற்றி காண்பது அவருக்கே உரித்தான பண்பு. சிறந்த நடிகர் என்பதுடன், சிறந்த கரப்பந்தாட்ட வீரர் என்பதிலும் தனக்கான ரசிகர் வட்டத்தைக் கொண்டிருந்தார்.


கலை நளினங்கள் பயின்ற சிறந்த ஒரு கலைஞராக அரச கௌரவங்களையும், விருதுகளையும் பெற்றிடாத போதும் ரசிகர்களின் மன அரங்கில் தனித்துவ அங்கத்தை பெற்றுள்ளார்.

நாடகத்துறையிலும் கரப்பந்தாட்டத்திலும் தேர்ச்சியுடையவராக பலரசிகர்களைக் கொண்டவராக தன்னுடன் நடித்த நாடகக் கலைஞர்களை முதுமையின் பரிவோடு இன்றும் ஞாபகம் கொள்கிறார். அவர்கள் வழங்கிய ஒத்துழைப்பை பணிவு கொள்கிறார். அமரரான சாமி திருநாவுக்கரசையும், ஆதரவு காட்டிய ரசிகர்களையும் நினைவில் கரம் பற்றுகிறார். நாடகத்துறையில் முழுக் கவனத்தையும் செலுத்த வேண்டும் என்ற கொள்கையுடன் அரச பதவியையும் துறந்து நாடகக் கலை பேண முழுமூச்சுடன் செயற்பட்ட காலங்களை மகிழ்வோடு கொண்டாடுகிறார். வாழ்நாளில் மறந்திருந்திட முடியாத நிகழ்வாக அனுபவ வார்த்தைகள் கொண்டு தனது எண்ணங்களாக சமூகத் தரிப்பிடங்களிடையே கலை ஆவலாகக் காவல் கொள்ளச் செய்கிறார். மூத்த கலைஞர்களில் ஒருவராக கலை நிலைகளைப் பேணிக் காத்திடப் பணிக்கிறார்.

# விபுலானந்தர் குறித்த ஆவணப்படம் மட்டக்களப்பில் நாளை வெளியீடு

இலங்கையின் மிகப்பெரிய ஆளுமைகளில் ஒருவரான சுவாமி விபுலானந்த அடிகளின் வாழ்வு மற்றும் பணிகள் பற்றிய ஆவணப் படம் ஒன்று மட்டக்களப்பு மாமாங்க பிள்ளையார் ஆலயத்தில் நாளை வெளியிடப்படவுள்ளது.

'அரங்கம்' நிறுவனத்தால் 'முத்தமிழ் வித்தகர் விபுலானந்தர்' என்ற பெயரில் இந்த ஆவணப்படம் தயாரிக்கப்பட்டுள்ளது. தமிழ் இசை ஆய்வில் ஈடுபட்டவர்களில் மிகவும் மகத்தானவராக போற்றப்படும் விபுலானந்த அடிகளார், தமிழரின் பாரம்பரிய வாத்திய கருவியான யாழை மீளுருவாக் கம் செய்யும் முயற்சியிலும் ஈடுபட்டார். தவிர இயல், இசை, நாடகம் குறித்து பல ஆய்வுகளை மேற்கொண்டிருக்கிறார்.



தமிழகத்தின் சிதம்பரம் அண்ணாமலை பல்கலைக்கழகம் மற்றும் இலங்கையின் கொழும்பு பல்கலைக்கழகம் ஆகியவற்றின் தமிழ்த் துறைகளின் முதலாவது தலைவராக திகழ்ந்தார். இலங்கையில் பல இடங்களிலும் இராமகிருஷ்ண மிஷனின் உதவியுடன் பள்ளிக்கூடங்களை அமைத்து அங்கு தமிழ், முஸ்லிம் மக்களின் கல்விக்கு வழி காட்டினார். பன்மொழி ஆற்றலும், பல துறைப் புலமையும் கொண்டு, விஞ்ஞான ரீதியில் தமிழை ஆய்வு செய்தவர்களில் முதன்மையானவராக தமிழறிஞர்கள் போற்றுகின்றார்கள். இலங்கை மற்றும் இந்தியாவில் ஆற்றிய தமிழ் மற்றும் சமூகப் பணி அவரது வாழ்க்கை பற்றி இந்த ஆவணப்படம் விவரிக்கிறது. தமிழ் ஆய்வாளர்கள் மற்றும் அடுத்த தலைமுறையினரை நோக்காகக் கொண்டு தயாரிக்கப்பட்ட இந்த ஆவணப்படத்தை கனடாவைச் சேர்ந்த பாபு வசந்தகுமார் தயாரித்துள்ளார். ரகுலன் சீவகன் இயக்கம் தந்துள்ளார்.

# வவு. தேசிய கல்வியியற் கல்லூரி மாணவர்களின் 'சமகால சர்வதேசம்', 'நுண்ணறிவு' நூல் வெளியீடு



வவுனியாவில் தேசிய கல்வியியற்கல்லூரி ஆசிரிய மாணவர்களின் சமகால சர்வதேசம், நுண்ணறிவு ஆகிய இரு நூல்கள் அண்மையில் வெளியிடப்பட்டுள்ளன.

வவுனியா பூந்தோட்டம் தேசிய கல்வியியற்கல்லூரி மண்டபத்தில் பீடாதிபதி கு.சிதம்பரநாதன் தலைமையில் கல்வியியற்கல்லூரி ஆசிரிய மாணவர்களான செல்வி செ.வாசுகி, செல்வன். ஏ.எல்.எம்.அஸீம் ஆகிய இருவரின் நூல்களான நுண்ணறிவு மற்றும் சமகால சர்வதேசம், ஆகிய இரு நூல்களும் அறிமுகம் செய்யும் நிகழ்வு இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக மாவட்ட சமூக சேவைகள் உத்தியோகத்தர் எஸ்.எஸ்.ஸ்ரீனிவாசன், சிறப்பு விருந்தினர்களாக உப பீடாதிபதி க.சுவர்ணராஜா, சிரேஸ்ட விரிவுரையாளர் ந.பார்த்தீபன், விரிவுரையாளர் க.குலரதன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

தமிழ் மன்றத்தின் தலைவர் சு.டிலக்சன் வரவேற்புரையை நிகழ்த்தினார். ஏற்புரையை நூலாசிரியர்களான ஏ.எல். எம்.அஸீம், செ.வாசுகி, ஆகியோரும் நன்றி உரையை தமிழ் மன்றத்தின் செயலாளர் த.தர்சினியும் நிகழ்த்தினர். நிகழ்வில் தேசிய கல்வியியற் கல்லூரி மாணவர்கள், நூலாசிரியர்களின் பெற்றோர்கள், உறவினர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.





# மரபுத் தொடரா...? கிள்ளை மொழியா?

புலவர் வள்ளுவதாசன்

தமிழ் மொழியிலுள்ள மரபுத் தொடர்களெல்லாம் மாறுபட்டு, தலைகீழாக மாறி மொழி வழக்கிலுள்ள நல்ல சிறப்புக்கள் சிதைவுண்டு போயுள்ளன என்பதற்குச் சில உதாரணங்களைச் சொல்லலாம். அதில் ஒன்றுதான் முருகன் ஔவைக்கு நாவற்கனி கொடுத்த கதை. ஊர் ஊராகச் சென்று தன் தமிழ்பணியைத் தொடர்கின்ற ஔவைப்பிராட்டி ஒரு நாள் மதியவேளை வெய்யிலின் கொடுமை தாங்காமல் மரநிழலைத் தேடிச் சென்று இறுதியில் ஒரு நாவல் மரத்து நிழலைச் சேர்கிறார். சேர்ந்தவர் மரத்தை அண்ணாந்து பார்க்கிறார் அந்த மரம் நன்றாகப் பழுத்திருந்தது. அது மட்டுமல்ல நாவல் மரத்தின்மேல் ஒரு சிறுவனும் இருக்கிறான். அந்த வேளையில் ஔவைக்கு நாவற்பழம் உண்ண வேண்டும் என்ற ஆசை தோன்றுகிறது. அப்பொழுது மரத்திலிருக்கும் சிறுவனைப் பார்த்து 'தம்பி எனக்கும் கொஞ்சம் பழம் போடுகிறாயா?' என்று கேட்கிறார். அதற்கு அந்தச் சிறுவன்

## ஔவையார்

> ஔவையின் வரலாறாகச் சித்தரிக்கப்பட்டி ருக்கும் இந்தக் கதையில் இலக்கண வழு வந்திருப்பது வரவேர்க்கக் கூடியதல்ல அதாவது மரத்திலிருக்கும் சிறுவனிடம் ஔவை நாவற் கனி போடும்படி கேட்டபொழுது சிறுவன் சுட்டபழம் வேண்டுமா சுடாத பழம் வேண்டுமா' என வினவுகின்றான்.

பாட்டி, 'உனக்கு சுட்ட பழம் வேண்டுமா? சுடாத பழம் வேண்டுமா?' என்று கேட்கிறான். இதைக் கேட்டவுடன் ஔவைக்குச் சிரிப்பு வந்தது. அதை அடக்கிக் கொண்டு என்ன இவன் சுட்ட பழம் வேண்டுமா?என்று கேட்கிறானே புத்தி இல்லாத பையன் என்று நினைத்துக் கொண்டு சுட்டபழமும் இருக்கிறதா? அப்படியானால் சுட்டபழமேபோடு என்று கூறுகிறார்.

அந்தச் சந்தர்ப்பத்தில் மரத்திலிருந்த பையன் நாவல் மரக்கிளையை உலுப்பி விட பழங்கள் மணலில் விழுகின்றன. ஔவையே அதில் ஒருபழத்தை எடுத்துக் கொள்கிறார். அதில் ஒட்டி இருக்கும் மணலைப் போக்குவதற்காக ஊதுகிறார். இதைப் பார்த்த சிறுவனும் என்ன பாட்டி பழம் சுடுகிறதா? என்று கேட்கிறான். ஔவையோ இதைக் கேட்டுத் திகைத்தார். நான் பழத்தில் ஒட்டியிருக்கும் மணலைப் போக்குவதற்கு ஊதியதை இவன் பழம் சுடுகிறதாக அர்த்தம் கொள்கிறானே. சுட்ட பழம் வேண்டுமா சுடாதபழம் வேண்டுமா? என்று கேட்டபோது இவன் புத்தி கெட்ட பையன் என்றல்லவா இவனை ஏளனமாக நினைத்தேன். எத்தனையோ சபைகளைக் கண்டு வெற்றி கண்ட நான் இந்தச் சிறுவனிடம் தோற்று விட்டேனே என்று வியந்து நின்றார் என்பது கதை.

ஆனால் இந்தக் கதைக்குச் சந்தர்ப்பம் கூறுவதாய் இருந்தால் கதையோடு சம்பந்தப்பட்டிருக்கும் சொல் வழக்கில் அர்த்தமற்ற சில பதங்களும் இடம்பெற்றிருப்பது கவனிக்கப்பட வேண்டியது. இதுபோன்ற புனைகதைகள், நாடோடிக் கதைகள் ஏராளம் இருந்த போதிலும் தமிழ்கூறும் நல்லுலகம் போற்றுகின்ற ஔவையின் வரலாறாகச் சித்தரிக்கப்பட்டிருக்கும் இந்தக் கதையில் இலக்கண வழு வந்திருப்பது வரவேற்க்கக்கூடியதல்ல. அதாவது மரத்திலிருக்கும் சிறுவனிடம் ஔவை நாவற்கனி போடும்படி கேட்டபொழுது. சிறுவன் 'சுட்டபழம் வேண்டுமா சுடாத பழம் வேண்டுமா' என வினவுகின்றான். அப்பொழுது ஔவை சிறுவனை ஏளனமாகப் பார்த்தாள். இது ஏன் என்ற கேள்வி எழுமாயின் யாரும் பனம் பழத்தைத்தவிர வேறு எந்தப்பழத்தையும் சுட்டுச் சாப்பிடும் பழக்கம் கிடையாது ஆனால் நாவற் பழத்தைக் கேட்டால் சுட்டபழம் வேண்டுமா? என்று கேட்கிறானே! என்ற எண்ணம் தோன்றியிருக்க வேண்டும். அல்லது இவன் புத்தியில்லாதவன் என்று எண்ணியதால் அந்த ஏளனப் பார்வை தோன்றி இருக்க வேண்டும். ஆனால் மணலில் விழுந்த பழத்தை எடுத்து ஔவை ஊதும் போது மரத்திலிருந்த சிறுவன் என்ன பாட்டி சுடுகிறதா என்று கேட்டபின் தான் ஔவைக்கு தான் முன்பு ஏளனம் செய்தது தவறு என்று புலப்பட்டது என்பது கதையின் சிறப்பம்சம். இருந்தபோதிலும் சந்தர்ப்பம் கூறுமிடத் தில் சிறுவன் 'சுட்டபழம் வேண்டுமா சுடாத பழம் வேண்டுமா?' என்று கேட்டது காலத்துக்குப் பொருந்தாத வசன அமைப்பு என்று கொள்ள வேண்டியுள்ளது. நிகழ் காலத்தில் நடந்த சம்பவத்தைக் கூறுவது கதை. ஆனால் சுட்டபழம் என்பது கடந்தகால வினை எச்சம். ஆதலால் காலத்துக்கும் பொருந்தாத சொல் இங்கு தொனிப்புறுகிறது. நாவல் மரத்தில் இருந்த சிறுவன் சுடும்பழம் வேண்டுமா சுடாதபழம் வேண்டுமா என்று கேட்டிருக்க வேண்டும். அதுதான் காலத்துக்குப் பொருத்தமானது. இத்தகைய கதைகளில் மட்டுமல்ல சில பாடல்களின் கூட சுட்டபழம் தந்தலனே என்று கேட்கக் கூடியதாகவுள்ளது. தமிழ் மொழியில் மரபு வழக்குகள் உண்டு. இலக்கண வழக்கில் பிழைகள் கவனிக்கப்படாவிடின் தமிழ் மொழியின் சிறப்பம்சம் சிதைவதற்கு வழிவகுக்கலாம் என்பதே எமது தாழ்மையான கருத்து.

தமிழ் மொழி வல்லுநர்கள் கூட கவனயீனம்காரணமாகதவறுவதுமுண்டு. ஆனாலும்நாடோடிக் கதைகளில் வரும் கிள்ளை மொழியாக இலக்கண வழுத் தோன்றுமாயின் மொழி வழக்கில் சிதைவுகள் வளர்வதற்கு ஏதுவாக அவை அமைந்துவிடும்.





# பழந்தமிழ் இலக்கியத்தில் ஊழ்–05

எஸ்.மல்லிகா

நம்பிக்கையின் அடிப்படையில்தான் மனித வாழ்க்கை ஓடிக்கொண்டிருக்கிறது. அந்த நம்பிக்கையில், ஊழ் ஆழமான இடத்தைப் பிடித்திருப்பதனையும் பழந்தமிழ் இலக்கியங்கள் வாயிலாக அறிந்து கொள்ள முடிகிறது. இதிலும் சிறப்பாக, சங்ககாலக் கடைக்கூற்றில் இயற்றப்பட்டது எனக் கூறப்படும் சிலப்பதிகாரம் ஊழ் பற்றி விரிவாகப் பேசுகின்றது. அதன் தொடர்ச்சியாக எழுந்த மணிமேகலையும் இதுபற்றி எடுத்தியம்புகிறது. அந்தவகையில், சிலப்பதிகாரத்தில் ஊழ் பற்றி இளங்கோவடிகள் கூறியிருப்பதனை இங்கு பார்க்கலாம்.

அரசியல், கற்பு, ஊழ் என்கிற மூன்று பொருள்களை மையமாகக் கொண்ட காப்பியம் சிலப்பதிகாரம். அவற்றுள் ஊழ், கற்பு ஆகிய சொற்கள் காப்பியத்தின் உள்ளே இடம்பெற்றுள்ளன. அரசியல் என்ற சொல் பாயிரத்தில் மட்டும்தான் வந்துள்ளது. ஆனால், அரசு என்பதன் செயற்பாடுகள் குறித்த செய்திகள் நூலில் பல இடங்களில் வந்துள்ளன. அதிலும் குறிப்பாக, 'கொலைக் களக்காதை, வழக்குரைக் காதை, காட்சிக் காதை, கால்கோள் காதை, நீர்படைக் காதை, நடுகற்காதை முதலிய காதைகள் அரசனை மையமாகக் கொண்டுள்ளன. அந்தவகையில், இந்த நூலில் அரசியல் பற்றிப் பேசப்பட்டிருப்பதனை அறியமுடிகிறது. இங்கு இடம்பெற்றுள்ள அரசாட்சி, அறம் குறித்துப் பேசுகின்றது. பொதுவாகவே அரசன் நல்லவனாக இருந்தால், அறக் குணம் உடையவனாக இருந்தால், அந்த நாடு நலம்பெறும். அறம் தவறிய அரசனின் நாடு வளம் பெறுவது கடினம் என்பதைப் பல பாடல்களும் நூல்களும் சுட்டிக்காட்டியுள்ளன. அந்தவகையில், பழங்கால மன்னர்கள் தமது அறச்சிந்தனையை எவ்வாறு வெளிக்காட்டியுள்ளனர், அதனால் ஏற்பட்ட மாற்றங்கள் எவை என்பன பற்றிச் சிலப்பதிகாரத்தில் காணமுடிகின்றது

**சிலம்பில் அரசன்**

சிலப்பதிகாரத்தில், முப்பொருள் சிறப்பிடம் பெறுகிறது. இதில் இடம்பெற்றுள்ள நகரங்கள் மூன்று, பேசு பொருள் மூன்று, முக்கிய பாத்திரங்கள் மூன்று என்பன போன்றே அரசர்களும் மூவராவார். சேர, சோழ, பாண்டியரே அந்த மூன்று அரசர்களும் ஆவர். இந்த மன்னர்களின் அறம் குறித்த சிந்தனைகளை சிலப்பதிகாரத்தின் வழி காணமுடிகிறது. இந்த மூவேந்தர்களும் தமிழ் நாட்டைச் சிறப்புற ஆண்டு வந்தனர் என்னும் செய்தியை இளங்கோவடிகள் வேனிற்காதையில்,

*'நெடியோன் குன்றமும் தொடியோள் பௌவமும்*
*தமிழ் வரம்பு அறுத்த தன்புணல் நன்னாட்டு*
*மாடமதுரையும் பீடார் உறந்தையும்*
*கலிகெழு வஞ்சியும் ஒலிபுனற் புகாரும்*
*அரசு வீற்றிருந்த உரைசால் சிறப்பின்' (8.15)*

என்று பதிவுசெய்கிறார். இங்கு முடியுடை மூவேந்தர்களும் வடக்கே திருவேங்கடமலையையும், தெற்கே குமரிக்கடலையும் எல்லையாகக் கொண்டு மதுரை, உறையூர், வஞ்சி மாநகரங்களைத் தலைநகராகக் கொண்டு அறம் தவறாத ஆட்சியைச் செய்து வந்தார்கள் என்று உரைக்கின்றார்.

**பாண்டியனின் நல்லாட்சி**

பாண்டிய மன்னன் அறநெறி தவறாமல் நல்லாட்சி செய்தவன். தன் நாட்டு மக்களுக்கு எந்தவிதமான துன்பமும் கொடுக்காது செங்கோலாட்சியைத் தந்தவன் என்பதைச் சிலப்பதிகாரம் வாய்ப்புக் கிடைக்கும் இடங்களில் எல்லாம் எடுத்துரைக்கிறது. கட்டுரைக்காதையில் பாண்டிய மன்னனின் செங்கோலாட்சியை மதுராபுரி என்னும் குலதெய்வமானது கண்ணகிக்கு எடுத்துக்கூறும் செய்தி பாண்டியனின் அறநெறியைத் தெளிவாக விளக்குகிறது. கோவலன் இறந்த துயரில் இருக்கின்ற கண்ணகியை நோக்கி,

*'மறைநா ஓசை யல்லாது யாவதும்*
*மணிநா வோசை கேட்டது மிலனே*
*அடி தொழு திறைஞ்சா மன்ன ரல்லது*
*குடிபழி தூற்றும் கோலனும் அல்லன்'*
*(23.3034)*

என்று கூறுகிறது. அதாவது, எம் வேந்தர் அந்தணர் ஓதும் மறையொலி அல்லது ஒருபோதும் ஆராய்ச்சி மணியின் 'நா' அசைவைக் கேட்டறியாதவன். பகை மன்னர்கள் பொறாமையால் பழி தூற்றுவார்களே அன்றி, தன் குடிமக்கள் பழி தூற்றும் கொடுங்கோலன் அல்லன் என்கிறது மதுராபுரித் தெய்வம். இதன்மூலம்அறநெறி தவறாத மன்னன் பாண்டியன் என்பதை அறியமுடிகிறது.


மேலும், பாண்டியன் அறநெறியில் நின்ற செய்தியை மதுராபுரித் தெய்வம் கதையாகக் கூறுகிறது. கீரந்தை என்னும் அந்தணன் பொருள் தேட தனது மனைவியை வீட்டில் விட்டுச் சென்றுவிட்டான். பாண்டிய மன்னன் இரவில் நகர்வலம் வரும்போது கீரந்தை வீட்டில் சத்தம் கேட்கவும் மன்னன் கதவைத் தட்டிவிட்டான். அப்போது அச்சம் கொண்ட அந்தணன் மனைவி, 'குடிமக்களுக்கு அரசனுடைய செங்கோலாட்சி காவலாக அமையும். அதனைவிட காவல் வேறு எதுவும் இல்லை என்று கூறி என்னை இல்லத்தில் விட்டு அகன்றீர். இப்பொழுது அந்த அரச வேலி காவலாக இல்லையோ?' எனக் கூறினாள். இதனைக் கேட்ட பாண்டிய மன்னன் வருத்தமுற்று, சக்கரப்படையையே உடைத்த தனது கையினை உடைவாளால் வெட்டினான். இத்தகைய அறநெறியை உடையவன் பாண்டிய மன்னன் என்கிறது. இதனைக் கட்டுரைக் காதையில் வருகின்ற

*'நெஞ்சம் சுடுதலின் அஞ்சி நடுக்குற்று*
*வச்சிரத் தடக்கை அமரர் கோமான்*
*உச்சிப் பொன்முடி ஒளிவளை உடைத்தகை*
*குறைத்த செங்கோல் குறையாக் கொற்றத்து*
*இறைக்குடிப் பிறந்தோர்க் கழுக்கம் இன்மை'*

என்ற செய்யுளில் காணலாம்.

இப்படிப்பட்ட அறநெறி தவறாத ஆட்சிபுரிந்த பாண்டிய மன்னனுக்கு, மாபெரும் துயர் வருகிறது. அரசுக்கட்டில் சாய்கிறது. மன்னன் உயிர் மாய்கிறது. கூடவே அரசியின் உயிரும் போகிறது. மதுரை மாநகர் எரிகிறது. நாட்டில் நடக்கக்கூடாதனவெல்லாம் நடக்கின்றன. இவையெல்லாம் எதனால் ஏற்பட்டன?

(தொடரும்........)



> அறநெறி தவறாத ஆட்சி புரிந்த பாண்டிய மன்னனுக்கு, மிகப் பெரிய துயர் வருகிறது. அரசுக் கட்டில் சாய்கிறது. மன்னன் உயிர் மாய்கிறது. கூடவே அரசியின் உயிரும் போகிறது. மதுரை மாநகர் எரிகிறது. நாட்டில் நடக்கக்கூடாதனவெல்லாம் நடக்கின்றன. இவையெல்லாம் எதனால் ஏற்பட்டன?

---

# பந்திக்கு முந்து

## திசைமாறிப்போகும் செய்யுள் வழக்குகள்

புலவர் வள்ளுவதாசன்

வாழ்வியலின் பாடங்களே பழமொழிகளாக உள்ளன என்பது பொதுக்கருத்து. இருந்தபோதிலும் பழமொழிகளில் கூறப்பட்ட கருத்தைப் புறந்தள்ளி விட்டு மேலெழுந்த வாரியாக ஒரு கருத்தைப் புகுத்தி, அதற்கு விளக்கம் கூறுவதும் உண்டு.

ஆனால் அந்த விளக்கம் சரியானதா? என்று கேட்பதற்கு யாரும் முனைவதில்லை. அத்தகையதொரு பழமொழி தான் "பந்திக்கு முந்து படைக்குப்பிந்து" இந்தப் பழமொழி அனேக இடங்களில் பேசப்படுவதுண்டு ஆனால் அது பேசப்படும் சந்தர்ப்பங்களும், இடங்களும் தான் பொருத்தமானவைகளாக இருப்பதில்லை.



உதாரணத்துக்கு ஒரு விருந்துபசார நிகழவு நடைபெறுகிறது என்று வைத்துக் கொள்வோம் அந்த நிகழ்வு ஆரம்பிக்கும் முன்பே அங்குகூடி இருப்பவர்கள் தங்கள் அவசரத்தைக் காட்டுவதற்காக "படைக்குப்பிந்தினாலும் பந்திக்கு முந்த வேண்டும்" என்று கூறுவதைக் கேட்டிருக்கிறோம். இதிலுள்ள வேடிக்கை என்னவென்றால் இந்தப் பழமொழி கூறப்பட்டதன் நோக்கத்தைப் புரிந்து கொள்ளாதது தான் காரணமாகும் "பந்திக்கு முந்து படைக்குப்பிந்து என்பதற்கான பொருளை வேறுவிதமாகவும் கூறுவதுண்டு இந்தப் பழமொழி வலதுகைக்குக் கூறப்பட்டதாகவும் விளக்கங்கொடுப்பவரும் உள்ளனர்.

உண்மையாக கருத்தைச் சொல்வதாயின் பந்திக்கு முந்து என்பது பந்திக்கு முந்துவதற்கான தகுதியோடிரு என்று கொள்வதுதான் பொருத்தம். ஒரு பெருமகனாக இருந்தால் தான் நீ பந்திக்கு முந்தும் தகுதியைப்பெறமுடியும். அதே நேரம் படைக்குப் பிந்து" படைக்குப்பிந்த வேண்டுமாயின் ஒரு கட்டளை அதிகாரியாக இருந்தால்தான் படை நடத்தும் பொழுது பிந்திச் செல்ல முடியும் அதாவது சாதாரண சிப்பாய்கள் முன் நடக்க பின்னால் நின்று அவர்களை வழிநடத்தும் தகுதியுடையவனாக இருப்பதற்கு படை நடத்தும் அனுபவம் கொண்டிருக்க வேண்டும். எனவே அதிலும் பெருமகனாயிரு என்னும் கருத்து கூறப்பட்டிருப்பது புலனாகிறது.

மேலும் முந்து, பிந்து என்னும் பதங்கள் திருக்குறளில் கூட சில இடங்களில் கையாளப்பட்டிருப்பது கருத்தின் ஆழம் புரிந்து நோக்கத்தக்கது. "தந்தை மகற்கு ஆற்றும் நன்றி அவையத்து முந்தி இருப்பச் செயல்"

ஆக.பழமொழிகள் மாத்திரமல்ல நீதி நூல்களிலுள்ள பாடல்களிலும் பாட்டிற் பொருள் சிதைக்கப்பட்டிருக்கும் தன்மைகளை உற்று நோக்க வேண்டியுள்ளது" அவைகளை அடுத்த தொடரில் பார்ப்போம்.

கவிதைகளின் போக்கிடை ஒரு புரட்சிப் பெண்ணாகவும், துணிச்சல்காரியாகவும் தென்படுகின்றார் மிஷாந்தி செல்வராஜா. குறிப்பாக கூறுமிடத்து 'வாளேந்தும் வாலிபர்கள்' என்ற கவிக் கோர்வை இன்றைய காலத்துக்குப் பொருத்தமானதே.

# 'காகிதங்கள் பேசுதடி'




## கருத்துக்களின் காற்றாடி

ப்ரியா

கவிதை என்பது எளிமையாகவும், பொருள்படவும் எழுதப்பட வேண்டும். கவி நயமாக பேசப்பட வேண்டும். அவையே கவிதை அமைப்பினுள் தனித்துவம் பெறுகின்றன. மரபுக்கவிதைகள் உடைவு கொண்டு தற்கால்த்தில் வசனக் கவிதைகளாக மருவி மாற்றங் கொண்டுள்ளன. கவிதை என்ற புனைவினுள் நூலுருவாகக் கொட்டிக் கிடக்கின்றன.

இந்தநிலையிலே தற்காலத்தின் இலக்கியப் பரம்பல் தனிமங்களிடை பலர் தனித்துவம் பெறுகின்றனர். அரியாலையூர் செல்வி மிஷாந்தி செல்வராஜாவையும் அவர்களின் சுவடாகக் கருதலாம். அவருடைய கவிதைகள்பலதும்சுவைபகருகின்றன. குழந்தைகள் முதல் பெரியோர்கள் வரை எளிதில் உணர்வு கொள்ள பொருள் உரைக்கின்றன.

பெண்ணியவாதியாக, குழந்தை மனப்பாங்கினை உடையவராக இருக்கிறார். குழந்தைகள் காகிதக் கப்பல் கட்டி மகிழ்வுறும் காட்சிகளை அட்டைப் படத்தில் காட்சிப்படுத்தி இருப்பது குழந்தைகளையும் அந்த நூலுருவினுள் அழைத்துச் செல்லும் விதமாக அமைந்துள்ளது. இயற்கை ததும்பும் காட்சிகள் மனதுக்கு இதம் தருகின்றன. கவிதைகளை வாசிக்கத் தூண்டுகின்றன.

**நூல் தலைப்பு**

கவிதை நூல் தலைப்பு சிந்தனையில் இனிக்கிறது. 'காகிதங்கள் பேசுதடி' பலதை பேசத் தூண்டுகிறது படைப்பாளிகள் நூலை வார்த்தைகளின் பூரணத்துவம் கொண்டு பிரசவிக்கின்ற போது மக்களிடையே ஆர்வம் மழலையுற வேண்டும். அதிக விருப்பினையும், அரவணைப்பினையும் பெற வேண்டும். காலத்தின் தேவையறிந்து கவிதைத் தலைப்பிடல் மக்களிடையே ஆர்வத்தை தந்துள்ளது. கற்பனை கலந்த உண்மைகளை ஒப்பனை கொண்டு அற்புதமாகக் காட்சியுறுத்துகிறது. 'அம்மா' என்பதில் இருந்து ஆரம்பித்து 'இத்தனையும் கிடைத்திடுமோ' என்று கவித்தலைப்புக்கள் தொகுப்பாகி வார்த்தைகளை அலங்கரிக்கின்றன.

உயிரினங்களின் முதல் மொழி 'அம்மா' என்ற கனிவை தித் திக்கச் செய்கிறார். பல தலைப்புக்கள் ஊடாக 'தாயின் கருவறை' உண்மையிலேயே அற்புதமான வார்ப்பு. 'குழந்தையாய் வாழ்ந்த அறை' எனும் வரிகள் உயிரோட்டம் தருகின்றன. தாயின் கருவறைக்கு ஈடு இணையில்லை என்பதைக் காட்டியிருக்கின்றார் மிஷாந்தி.

இளம் பெண் படைப்பாளியாக வாழ்க்கையின் முதிர்நிலைகளை, ஏக்கங்களை, தவிர்ப்புக்களை கவிதைகளாகப் படைத்திருப்பது பெண்ணியத்தின் தனித்துவங்களை சிறப்பிடம் பெறச் செய்கிறது. அவரது படைப்புக்கள் அதனை அற்புதமாக ஊடாடுகின்றன.

**பசுவின் ஏக்கம்**

மனிதர்களின் வாழ்க்கையை, ஏக்கங்களை தனித்து முன்னிலைப்படுத்தாமல் ஏனைய உயிரினங்களின் தவிப்புக்களையும் தன் கவிதைகளினூடாகபடைத்துள்ளார் மிஷாந்தி. குறிப்பாக 'ஒரு பசுவின் ஏக்கம்', 'மீனின் ஏக்கம்' என்பன சுட்டிக்காட்டப்பட வேண்டியவையே.

"மடிப்பால் தானே நாளும் தருகின்றேன்
பசுப்பால் என நீங்களும் அருந்தவே
சாதுவான பிராணி நானெனத் தெரிந்தும்
தீக்காயம் ஏன் என் மேனிதனில் வைக்கிறீர்கள்...?

என்ற வரிகள் மிக ஆழமானவை. ஐந்தறிவு ஜீவன்களின் ஆத்மார்த்தம் தனை கூறுபவை.

**மீனின் அபசுரம்**

'மீனின் ஏக்கம்' என்ற கோர்வைகளில்,
'கொக்கும் இரையாக வேண்டும் உங்கள்
நாவிற்கும் இரையாக வேண்டும் தித்திக்கும்
நாவிற்கு நாமா இனமானோம்?

எனும் வரிகள் கடலின் சுதந்திரம் பற்றிப் பேசுகிறது. கடலுயிரிகளின் அழிவின்றிய அமைதியை நாடுகிறது.

**சமூக விழிப்பு**

கவிதைகளின் போக்கிடை ஒரு புரட்சிப் பெண்ணாகவும், துணிச்சல்காரியாகவும் தென்படுகின்றார் மிஷாந்தி செல்வராஜா. குறிப்பாக கூறுமிடத்து 'வாளேந்தும் வாலிபர்கள்' என்ற கவிக் கோர்வை இன்றைய காலத்துக்குப் பொருத்தமானதே. ஒரு பெண்படைப்பாளியாக கருத்தை ஆழமுறச் செய்தது அற்புதம்.

'முற்கால மன்னர்கள் வாள்வீச்சினால்
மங்கையர்கள் திருமாங்கல்ய திருமதியதியானார்கள்
இந்தக் கால வாலிபர்கள்
வாள்வீச்சினால்
மங்கையர்கள் மாங்கல்யம் இழந்து விதவைகள்
ஆகின்றார்கள்...!"

உண்மைதான். இன்றைய காலத்தின் வாள்வீச்சு, வாள்வெட்டு சூட்சு மங்களிடை விழிப்புணர்வின் வார்த்தை வாள் வீச்சாக அன்றாட வாழ்வியலோடு இவை பொருத்தமுறுகின்றன.

## விமர்சனப் பார்வை

**உணவின் உவப்பு**

'தீயிற்கு ஒரு வேண்டுகோள்'

வறுமையான சூழலில் வாழும் ஒரு குடும்பத் தாயின் அங்கலாய்ப்பை எடுத்தியம்புகிறது. பள்ளி சென்ற தன் மகன் பாடசாலையை விட்டு வரப் போகின்றான். பிள்ளை பசியால் துடிதுடித்துப் போவான். அவன் வருவதற்கு இடையில் தீயே நீ மூண்டு விடு என்று ஒரு தாய் அனலோடு பேசும் சொற்களை கவிதைகளாகத் தந்துள்ளார் மிஷாந்தி.

உண்மையில், 'தீயாக நீ இருக்காது தாயாக மாறிவிடு என் நிலைமை புரியும்...!' என்ற வார்த்தைகள் தீயின் கனலோடு சமர்ப்பணம். ஆக, அனைத்துக் கவிதைகளும் ஒவ்வொரு காகிதத்திலும் பக்கம் பக்கமாக தித்திப்பாகக் கதை பேசுகின்றது. எம்முடன் உலவுகின்றது. இவரது முதற்பதிப்பான 'மூன்றாம் முத்தம்' என்னும் குறுநாவல் நூலும் சமூகவியலுக்கும் வாழ்வியலுக்கும் ஏற்றதான நூலருவாக அமைந்துள்ளது. இவரது படைப்புக்களில் அதீதமான யதார்த்தங்களே தொக்கி நிற்கின்றன. பொய்யுரைக்காமல் கற்பனை கலந்த உண்மைகளை யாவருமே ஏற்றுக்கொள்ளக் கூடிய சொற்பொழிவாக தந்துள்ளார். 'காகிதங்கள் பேசுதடி' அனைவருமே படித்துச் சுவைக்கக் கூடிய எளிமையான நூல் என்பதில் ஐயமில்லை. இவரது படைப்புக்கள் மேலும் கருத்துரைகள் தர வேண்டும்.

"மடிப்பால் தானே
நாளும் தருகின்றேன்
பசுப்பால் என
நீங்களும் அருந்தவே
சாதுவான பிராணி
நானெனத் தெரிந்தும்
தீக்காயம் ஏன் என்
மேனிதனில்
வைக்கிறீர்கள்?"



இளம் பெண் படைப்பாளியாக வாழ்க்கையின் முதிர்நிலைகளை, ஏக்கங்களை, தவிர்ப்புக்களை கவிதைகளாகப் படைத்திருப்பது பெண்ணியத்தின் தனித்துவங்களை சிறப்பிடம் பெறச் செய்கிறது. அவரது படைப்புக்கள் அதனை அற்புதமாக ஊடாடுகின்றன.









# வாயு புத்திரனும் விரைந்து வந்திட்டான்

## அவதார இராமனே ஆரத்தழுவிய பக்தியின் அருள் வடிவம்

**கே.எஸ்.சிவஞானராஜா**

"உயிரணைய தமிழமுதம் பருக
நல்லையில் உணர்வுடைய இராம
னும் வந்திடவே
வியனுலகு உம்பரும் வருவரே
யென நம்பி வாயு புத்திரனும்
விரைந்து வந்திட்டார் போலும்
நியம அதி பக்த ஹனுமானைக்
கண்டதும் நெஞ்சோடு ஆரத்தழு
வினான் ஸ்ரீ இராமனும்
உயர்வான இந்நிலை கண்டதும்
மக்கள் ஒப்பற்ற அனுமனை
உச்சிமேல் கரம் குவித்தனர்."

உலகெங்கிலும் திருவருள் நிறைந்த ஆஞ்சநேயப் பெருமான் அடியவர்களுக்குக் கேட்டவரங்களையெல்லாம் அள்ளிக்கொடுத்துத் திருவருள் பாலிக்கின்றார். அனுமனை மூலமூர்த்தியாகக் கருப்பக் கிரகத்தில் வைத்து தெய்வாம்சாம்சமாக உன்னதம் செய்து, மந்திரங்கள் சொரிந்து இராமனின் அவதாரமாக்கியுள்ளோம். இலங்கையிலும் சரி இந்தியாவிலும் சரி ஆலயங்கள் அமைத்து அபிஷேகிக்கின்றோம்.

கொழும்பில் நடைபெற்ற கம்பன் விழாவில் நீதி ஆயம் குற்றவாளிக் கூண்டில் சீதையை விசாரணைக்கு எடுத்த போது யாருமே நோதல்படவில்லை. சீதை தெளிவாக்கப்பட்டாள். புனிதமாக்கப்பட்டாள். சுயம்வரம் நிர்ணயித்த பின் காதலித்தமை. காட்டுக்கு வரப் பிடிவாதம் பிடித்தமை என்பன வழக்காடு மன்றத்தின் இரு தரப்பினரிடையேயும் குறிப்பாக, தொடுப்போர் மனதில் கடினமாக இருந்த போதும் மறுப்போர் மன்றத்தைக் கையாண்ட விதம் சபையோரை வியக்க வைத்தது. சீதையின் கற்புக்குக் கடவுளரே தலைவணங்கினர் எனலாம். எங்களுடைய அம்மாக்களும் கற்புக்கரசிகளே என்று நாம் பெருமிதம் அடையும் போது சீதா எலிய



ஆனந்த ரிஷிமலையின் மருத்துவர் இராமபிரானின் நம்பிக்கையான தூதுவர். தக்கதோர் அமைச்சர், இலங்கைக்கே நன்னெறி புகட்டிய தீர்ப்பாளர், நெடிதுயர்ந்து முடி காட்டும் திருவடியாளர் என்றெல்லாம் புகழ்ந்து போற்றப்படும் ஸ்ரீ ஹனுமன் தனது இதயத்தில் ஸ்ரீ ராமன் இருப்பதை பக்தியின் வெளியாகத் திறந்து காட்டினான்.

சனாக அனுமனும் இருந்து மகாபாரத. இராமயணக் காப்பியங்களை வழிநடத்தும் பேறினை இந்த உலகம் பெற்றிருக்கிறது. அவ்வாறெனில் நாம் பயணிக்கக் கூடிய குற்றமற்ற பாத்திரமாக அனுமனும் கண்ணனும் திருப் பொலிவுறுகின்றனர். அதனிடை இராமன் அருள் பெருக்க வருகின்றான். மானிடம் மருவிய அனுமனும் கருணை தரவே அவதாரமாக்கப்படுகின்றான்.

கம்பனின் ஆசி கொண்டு இம்மூன்று மூர்த்தங்களும் இணைவுகொண்டு இராமாயணம் வரமாக்கப்படுகிறது. ஆம், அறிவின் சுடர் சொல்லின் செல்வர். ஆனந்த ரிஷிமலையின் மருத்துவர் இராமபிரானின் நம்பிக்கையான தூதுவர். தக்கதோர் அமைச்சர், இலங்கைக்கே நன்னெறி புகட்டிய தீர்ப்பாளர், நெடிதுயர்ந்து முகம் காட்டும் திருவடியாளர் என்றெல்லாம் புகழ்ந்து போற்றப்படும் ஸ்ரீ ஹனுமன் தனது இதயத்தில் ஸ்ரீ ராமன் இருப்பதை பக்தியின் வெளியாகத் திறந்து காட்டினான்.

"உந்தன் பெருமையை உணர்ந்த
இராமன்
உன்னைத் தழுவிக் கொண்டானே
செஞ்சொற்செல்வன் என்றுனை
வாழ்த்தி
சோதரனாகக் கொண்டானே சரணம்....!" என்றுரைதல் அற்புதம்.



கோயில் கூட எம்மை வணங்கப் பணிக்கின்றன. வணங்க வைப்பவை எவையுமே தெய்வங்கள் என்ற நிலைத்திருப்பையே மொழிகின்றன. எல்லாம் நன்மைக்கே என்ற விதமாய் குற்றங்கள் யாவும் நன்மைக்குரித்தானவையாகவே கதை கூறுகின்றன. நிற்க. நாடக அரங்கிலே கதா பாத்திரங்களாக தனித்துவம் செய்யும் பின்வருவோர் தெய்வ நிலையை அலங்கரிக்கின்றனர்.

கூனி சகுனி
தசரதன் திருதராட்டினம்
கும்பகர்ணன் கர்ணன்
இராமன் தர்மன்
இராவணன் துரியோதனன்
அனுமன் கண்ணன்

மேற்போந்த இந்த அமைப்பை நோக்கும் போது ஏனையவர்களை விடவும் அனுமனும் கண்ணனும் தெய்வ நிலையில் வணங்க வைக்கப்படுகிறார்கள். வீட்டுக்குள்ளும் தெய்வமாக்கப்படுகிறார்கள். அல்லாமலும் அருச்சுணனுக்குத் தேரோட்டியாகக் கண்ணனும், சுக்கிரீவனுக்கு அமைச்

இலங்கையைத் தீயிலிட்ட அனுமனுக்கு அருளின் பொருள் உபகாரமாக நின்ற ஸ்ரீ ராமன் தீமைகளை அழிப்பதற்காய் அனுமனே இந்த மண்ணுக்கு அவதாரமாக வருவான் என்று வழிமொழிந்தமை சிறப்பு. அத்தகு சிறப்புடைய திருவருள் நிலையை குற்றவாளிக் கூண்டில் ஏற்றியதன் மூலம் தீமைகளின் அழிவு சாத்தியமாகுமா..? என்ற வினாவுக்கு விடைகள் வார்த்தைகளிடையே தூரமாய் மருவி நின்றது. வழக்காடு மன்றத்தின் தொடுப்போரும், மறுப்போரும் சரியான சான்றுகளை முன்வைக்கத் தவறினர் என்றே கூற வேண்டும். இதன்வழியே அனுமான் அறிவின் சிகரமாய், அருளின் நகரமாய் இந்த மண்ணை அற்புதமாக்கப் புறப்பட்டான். கம்பன் கழகம் அதற்காய் மன்றில்கூடி விவாதமுற்று நல்வழிசமைத்துள்ளது. எதிர்வரும் ஆண்டுகளிலும் ஓர் அற்புதம் நிகழும். ஏனெனில் கழகம் பரிணாமமும், படிமானமும் பெற்று விட்டது.







சித்தங்கேணி மகா கணபதிப் பிள்ளையார் ஆலய கும்பாபிஷேகத்தை முன்னிட்டு இலங்கையில் முதன்முறையாக திரு.நா.சிவசுந்தரசர்மாவின் ஒழுங்கமைப்பில் மிருதங்க பேராசான் கலாபூஷணம் க.ப.சின்னராசாவின் மாணவப் பரம்பரையினர் இசையை லய ஞானமாக ஒருங்கிணைவு பெறச் செய்த '108 மிருதங்க லயப்ரம்ம' நிகழ்ச்சியின் ஒளிப்படப்பதிவுகள்.

# பென்ஜமின் சுந்தரராஜன் குணரட்ணம்

பிறப்பு இறப்பு மூலமாக இவ்வுலகிலும், மறுவுலகிலும்
என்னை நீ எங்கழைத்துச் சென்றாலும்
நீ ஒருவன் மட்டுமே
முடிவற்ற என் வாழ்வின் ஒரே துணைவன்
முன்னறியா ஆனந்தக் கயிற்றால்
என் இதயத்தை பிணைப்பவனும் நீதான்'

கீதாஞ்சலி 63

பென்யமின் குணரட்ணம் ஐயா! (பெ(டி) ன் அங்கில்:)!
முப்பத்தி மூன்று ஆடி பதினேழில் அவதரித்தார்
மழலையாய்
அன்பும் அறிவும் அடர்ந்த அருள் மகனாய்
அல்வாயில் ஆரம்பக்கல்விக்காய் அடியெடுத்து
வைத்தார் கொட்டாஞ் சேனை பெனடிக் கல்லூரியில்

இரண்டாம் உலகப் போர் நெருங்கியதால்
இடம்பெயர்ந்தார்
தலைநகரிலிருந்து தாயகம் நோக்கித் தொடர்ந்தார்
ஆரம்பக்கல்வியை ஹாட்லிக் கல்லூரியில்
போர் தணிந்து போகத் தொடர்ந்தார் யாழ்ப்பாணக்
கல்லூரியில்

களம் அமைத்துக் கொடுத்தது சென்னை கிறிஸ்தவ
கல்லூரி
விஞ்ஞான இளமாணிப்படிப்பை மூன்றாண்டுகள்
தொடர,
ஐம்பத்தியாறில் தொடங்கியதைப் பூர்த்தியாக்கினார்
ஐம்பத்தொன்பதில்
காலி றிச்மன்ட் கல்லூரியில் பணிக்கமர்ந்ததோ
அறுபதாம் வருடமதில்

எழுபத்தொன்று மார்கழி முப்பத்தொன்று வரை
நீடித்தாரங்கே
றோயல் கல்லூரியில் எழுபத்திரண்டு தை முதல்
மார்கழி வரை
எழுபத்தி மூன்று தை முதல் எழுபத்தி நாலு மார்கழி
வரை
ஈராண்டுகள் இரத்மலான இந்துக் கல்லூரியில் பணி
செய்து பின்

ஆறாண்டுகள் நீடித்தார் மடவலபஸார் மத்திய
கல்லூரியில்
எழுபத்தைந்து தை மட்டுமே உடத்தாலவல ஐம்மயில்
அஸ்கார் கல்லூரியில்
இருபத்திரண்டு ஆண்டுகள் நீடிததார்
ஆசிரியப்பணியில்
நீங்கினார் சமூகத்தின் தேவைக்காய்

இளைப்பாறிய பின்னும் அவருக்கங்கே ஓய்வில்லை
ஊர்ப்பணியாற்ற உதவியை நாடினர் உலக தரிசனம்
இயக்கத்தினர்
எண்பத்தேழிலிருந்து தொண்ணூற்றைந்து வரை
வேல்ட் விஷனில்
தொண்ணூற்றைந்திலிருந்து பன்னிரு ஆண்டுகள்
லீட்ஸ் அமைப்பில்

உலகப் பணியுடன் நின்று விடாமல் இறைபணியிலும்
நீடித்தார்
மேடைப் பிரசங்கியாய் ஒரு தசாப்தம் பணி செய்தார்
இலங்கை மெதடிஸ்த திரு அவையில் பல
வட்டாரங்களுக்கும்
வடகிழக்கு சபாசங்கம் என்றும் நினைவு கூரும் அவர்
பணியை

கைபிடித்தார் வசந்தி சத்தியதேவி பேரின்பநாயகத்தை
அவரை அன்பு மனைவியாய் ஏற்றிட்டார்
அறுபத்தியெட்டில்
ஒலிமரக்கன்றுகளாய் டினேஸ் உடன், சோபனா,
மேனகாவும்
இறைவன் அவருக்களித்திட்ட அருட்கொடைகள்

வாழையடி வாழையாக வாழ வைப்பார் இறைவன்
இவ் வையகத்தில் அவரின்றி வாழ்வேது
அன்னாரின் ஆன்மா ஈடேற்றம் பெற
நாடுவோம் அருள்நாதரின் திருப்பாதத்தில்

நீத்தார் நயப்புரை

வண.ஜெ.தேவ அருட்செல்வம்,
விரிவுரையாளர்,
இறையியற் கல்லூரி,
சுன்னாகம்

# வரலாற்றில் இன்றைய தினம் 19.07.2017



1870 - புருஷியா மீது பிரான்ஸ் போர் அறிவிப்பு

1821-பிரிட்டன் அரசராக நான்காம்ஜோர்ஜ் முடிசூடினார்.

1832-பிரிட்டிஷ் மருத்துவர் சங்கம், சேர் சாள்ஸ் ஹஸ்ரிங்ஸ் ஸால் வேசெஸ்ரர் மருத்துவமனையின் மாநாட்டு அறையில் இடம் பெற்றகூட்டத்தில் உருவாக்கப்பட்டது.

1848-நியூயோர்க் செனாகாவில் இரண்டு நாள் பெண்கள் உரிமைப்பட்டயம் தொடர்பான மாநாடு தொடங்கியது.

1870-புருஷியாமீது பிரான்ஸ் போர் அறிவிப்பு.

1943-கூட்டுப்படையின் ஐநூறுக்கு மேற்பட்ட வானூர்திகள் உரோம் மீது தீவிர குண்டுத் தாக்குதலை மேற்கொண்டன. இதனால் ஆயிரக்கணக்கானோர் காயமடைந்தும் உயிரிழந்தும் போயினர்.

1947-பர்மா அரசின் தலைமை அமைச்சர் பொக்யோக் ஆங்சான் மற்றும் எண்மர் படுகொலை செய்யப்பட்டனர்.

1947-கொரிய அரசியல்வாதி லியூ வூன் ஹைங் படுகொலை செய்யப்பட்டார்.

1952-பின்லாந்தின் ஹெல்சின்கிரில் கோடைகால ஒலிம்பி தொடர் தொடங்கியது.

1964-சைகோன் பேரணியில் தென் வியட்னமிய தலைமை அமைச்சர் நுயன் காங் வடவியட்னாமில் போரை விரிவாக்க அறைகூவல் விடுத்தார்.

1976-நேபாளத்தில் சகர்மாதா தேசியப் பூங்கா உருவாக்கப்பட்டது.

1979-நிக்கரா குவாவில் சோமோஷா குடும்ப அரசு சாண்டினிஸ்டா எதிர்ப்பாளர்களால் வீழ்த்தப்பட்டது.

1981-அமெரிக்க அரச தலைவர் றொனால்ட் றீகனுடனான பிரான்ஸ் தலைமை அமைச்சர் தனிப்பட்ட சந்திப்பின் போது சோவியத் யூனியனால் திருடப்பட்ட ஆவணங்கள் வெளியிடப்பட்டன.

1980-சோவியத் யூனியனில் 22 ஆவது ஒலிம்பியாட் தொடங்கியது.

1983-மனிதத் தலையின் முப்பரிமாண எக்ஸ் கதிர் படம் முதன்முதலாக வெளியிடப்பட்டது.

1985-இத்தாலியில் வால்டி ஸ்ராரஷ் அணை உடைத்ததில் 111 பேர் உயிரிழந்தனர்.

1992-சிலியில் நிகழ்ந்த கார்க் குண்டு வெடிப்பில் நீதவான் பாலோ போர்செல்லிங்கும் அவரது பாதுகாப்பாளர்கள் ஐந்துபேரும் உயிரிழந்தார்.

1986-இலங்கைத் தமிழரைக் காக்க செயலில் இறங்குமாறு ராஜீவுக்கு எம். ஜி. ஆர். கடிதம்.

2002-பெற்றோல் டிப்பர்- பஸ் மோதலால் உகண்டாவில் 70 பேர் உடல் கருகிச் சாவு.

2005- சேது கால்வாய் திட்டத்தை எதிர்த்து மன்னாரில் ஆர்ப்பாட்டம்.

# ஆடி மாத பலன்



## மிருகசீரிடம் 3, 4 பாதங்கள் திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3 பாதங்கள்




எளிதில் எதிரியுடனும் நண்பராகும் திறமை பெற்ற மிதுன ராசியினரே இந்த மாதம் ராசிநாதன் புதன் விரைய ஸ்தானத்தில் மறைந்திருந்தாலும் மற்ற கிரகங்களின் சஞ்சாரம் உங்களுக்கு நன்மை செய்யும் வகையில் அமைந்துள்ளது. நீண்ட நாள்களாக இருந்து வந்த வீண் மனக் கவலை நீங்கும். எந்த ஒரு காரியத்திலும் எதிர்பார்த்த வெற்றி தாமதமாகக் கிடைக்கும். ஒதுங்கி இருந்தால் கூட வலுக்கட்டாயமாக எதிலாவது ஈடுபட சுற்றமும், நட்பும் தூண்டுவார்கள். கவனமாக அதைத் தவிர்ப்பது நல்லது. வீண் அலைச்சல் செலவு ஏற்படலாம். பயணங்களின் போது எச்சரிக்கை தேவை.

தொழில் ஸ்தானாதிபதி குரு தொழில் ராசியைப் பார்ப்பதால் தொழில், வியாபாரத்தில் இருந்து வந்த மந்த நிலை மாறும். வருமானம் வந்து சேரும். புதிய முயற்சிகள் காலதாமதமாக முடியும். வாடிக்கையாளர்களிடம் வாக்கு வாதத்தைத் தவிர்த்து அனுசரித்துப் பேசுவது நல்லது. உத்தியோகத்தில் இருப்பவர்கள் கூடுதல் பணியைக் கவனிக்க வேண்டி இருக்கும். மேல் அதிகாரிகளிடமும்சக பணியாளர்களிட மும் அனுசரித்துச் செல்வது நல்லது.

குடும்பத்தில் அமைதி ஏற்பட குடும்ப உறுப்பினர்களிடம் நிதானமாகப் பேசுவதும் வாக்குவாதத்தை தவிர்ப்பதும் நல்லது. விருந்தினர்கள் வருகையும் அதனால் செலவும் உண்டாகலாம். வழக்குகளைத் தள்ளிப் போடுவதும் பேசி தீர்த்துக் கொள்வதும் நல்லது. ஆயுதம், தீ ஆகியவற்றில் கவனம் தேவை.

**பெண்களுக்கு:** அடுத்தவர்கள் பேச்சைக் கேட்டு எதிலும் ஈடுபடாமல் இருப்பது நன்மை தரும். வீண் அலைச்சலும், செலவும் உண்டாகலாம். கவனம் தேவை.

கலைத்துறையினர் எதிலும் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது. எதிர்பாராமல் பயணங்களில் தடங்கல் ஏற்படலாம். அதனால் வெளியூர்ப் பயணங்களைத் தள்ளிப்போடுவது நல்லது. உடல்நலத்தில் கவனம் தேவை. அரசியல்துறையினருக்கு புத்திக்கூர்மை வெற்றியைத் தேடித் தரும். போட்டிகளையும், பொறாமைகளையும் சந்தித்தாலும் பொறுமையுடன் செயற்பட்டு அவற்றைச் சமாளிப்பீர்கள். உங்களின் சமயோஜித புத்தியால் பிரச்சினைகளிலிருந்து தப்பித்துக்கொள்வீர்கள்.

**மாணவர்களுக்கு:** உயர் கல்வி பற்றிய எண்ணம் அதிகரிக்கும். கூடுதல் மதிப்பெண் பெற படிப்பில் வேகம் காட்டுவீர்கள்.

**பரிகாரம்:** சனிக்கிழமைகளில் பெருமாளை வணங்கி வர கடன் பிரச்சினை தீரும். குடும்பத்தில் மகிழ்ச்சி உண்டாகும்.

**மிருகசீரிடம் 3, 4 பாதங்கள்:**
இந்த மாதம் குடும்பத்தில் உறவு பலப்படும். தொலைபேசித் தொடர்பு மூலமாக சிலர் புதிய தொழில் ஒப்பந்தங்களை ஏற்படுத்தி இலாபம் தேடும் முயற்சியில் ஈடுபடலாம். குடும்பத்தில் மகிழ்ச்சிக்கு குறை இருக்காது. சுபநிகழ்ச்சிகள் இடம்பெறும்.

**திருவாதிரை:**
இந்த மாதம் சில அத்தியாவசிய தேவைகளுக்கு செலவுகள் அதிகமாகலாம். பணப்பற்றாக் குறையைச் சந்திக்கலாம். ஒரு பிரச்சினை முடிந்ததும் இன்னொரு பிரச்சினை உருவாகலாம். ஆனாலும் மகிழ்ச்சியாக இருப்பீர்கள். உங்கள் பிரச்சினைகள் எவ்வளவு இருந்தாலும் தோல்வியும் தொய்வும் இல்லாமல் சமாளித்து வெற்றிகாணலாம்.

**புனர்பூசம் 1, 2, 3 பாதங்கள்:**
இந்த மாதம் எடுத்த காரியங்களில் உடனே வெற்றி ஏற்படும். சில காரியங்களில் தாமதமாக வெற்றி ஏற்படும். உங்கள் விடாமுயற்சிதான் உங்களுக்கு வெற்றியைத் தேடித்தரும். பழகும் நண்பர்களை எடைபோட முடியாது. வெளுத்தது எல்லாம் பால் என்று நம்பும் உங்கள் பெருந்தன்மையை ஒதுக்கி வைக்கவும்.

## நாளை

ஆடி - 04
வியாழக்கிழமை
-20.07.2017
திதி:துவாதசி
மு.இ.11.34 வரை
நட்சத்திரம்: ரோகிணி
பி.ப.04.30 வரை
சுபநேரம்:
07.31–09.01 வரை
ராகுகாலம்:
01.31–03.01 வரை

# ‘சிறுகதைகள்’

## வாசகர்களுக்கு உணர்வூட்டல் அவசியமானது

அ.அஜந்தன்

வாசகர்கள் எப்பொழுதும் மனதைத் தொடும் உணர்வூட்டமான கதையோடு நகர்வதையே விரும்புவர். அவர்கள் தாமாகக் கற்பனை செய்துகொள்ளச் சவாலாக அமையும் சொற்பதங்கள், காட்சிகள், சூழ்நிலைகள் சம்பவங்களை கதைக்குள் எதிர்பார்ப்பர். அவை அவர்களது நாளாந்த வாழ்வைவிட வேறுபட்ட விடயங்களை சிந்திக்கவும், செயற்படுத்தவும் தூண்டும் வகையில் வியப்பைக் கொடுக்கவேண்டும். கதையின் சொற்பிரயோகங்கள் வாசகர்களை அதனுள் அடியெடுத்துவைக்க மட்டுமன்றி அதனை அனுபவிக்கவும் உதவுவதாக அமைவது அவசியம். எமது எழுத்தாற்றல் அவர்களின் சாதாரண வாழ்வியல் அனுபவங்களையும் தாண்டி உயிரோட்டமாக பயணிக்கத் தூண்டுதல் அளிக்க வேண்டும். வாசகர்களை வேறு உலகினுள்ளும் வேறு உயிருக்குள்ளும் அசைத்திருக்கப் பணிக்கும் முனைப்புள்ள எழுத்துக்கள் கோர்க்கப்படல் அவசியமானது.

கதையில் உள்ளடக்கப்பட்டுள்ள கற்பனை உலகம் சில மணிநேரம் உண்மையானதாக வாசகர்களால் உணரப்படவேண்டும். வாசகர்களின் உணர்வலைகளை உருவாக்கல் ஒருகாட்சியை வர்ணித்து எழுதுவது அக்காட்சியைப்பற்றி சொல்வதைவிடவும் மேலானது.கதையில் வரும் கதாபாத்திரத்திரங்களின் உணர்வுகள் அவற்றின் செயற்பாட்டினூடாக தெளிவுபடுத்தப்படுத்துகின்றன. கதாபாத்திரத்திரங்களின் செயற்பாடுகளும், பொறுப்புக்களும் பிரதிபலிப்புக்களும் கவனம் செலுத்தப்படவேண்டிய பரப்புக்களாகும். அவை வாசகர்களின் உணர்வைத் தூண்டும் விதத்தில் அமையும் அதே சந்தர்ப்பத்தில் எந்த வாசகனும் வெறும் எழுத்துக்களின்மீது உணர்ச்சிவசப்படுவதில்லை மாறாக மற்றவர்களின் அனுபவத்தினுள்ளும், உணர்வினுள்ளும் அடியெடுத்து வைக்கும்பொழுதே அவர்களின் உணர்வுகள் தூண்டப்பட்டு கதையினுள் ஆழமாக அடியெடுத்துவைப்பர்.

**அனுதாபத்துக்குள்ளாகும் கதாபாத்திரம் ஒன்றை உருவாக்குதல்**

இந்தக் கதாபாத்திரத்தினூடாக வாசகர்கள் தம்மையும், தங்கள் நிலையையும், சந்தர்ப்பங்களையும் தமது கனவுகளையும், பழக்கவழக்கங்களையும், தெரிவுகளையும் அடையாளம் கண்டுகொள்வர். அத்துடன் வாசகர்கள் தமது உணர்வுகளையும், வலிகளையும் இன்ப துன்பங்களையும் உணர்ந்துகொள்வர். சில சமயங்களில் சில குறிப்பிட்ட சம்பவங்கள் தமது வாழ்வின் கடந்தகால அனுபவத்தைப் பிரதிபலிப்பதாக உணர்வர். இது ஒரு பொதுவான மனித வாழ்வியல் நிலை என்பதையும் உள்ளுணர்த்தும். வாசகர்கள் தாமும் அனுதாபத்திற்குரிய பாத்திரத்தோடு இணைந்து கதைக்குள் பயணிப்பதற்குமுன் அக்கதாபாத்திரத்தையும், அதைப்பற்றிய புரிந்துணர்வையும், அடையாளங்களையும் உணர்ந்துகொண்டுள்ளனரா என்பதை உறுதிப்படுத்திக் கொள்வது அவசியம். ஆனால் வாசகர்கள் முன்பக்கத்தின் எழுத்துக்களில் உணர்வுகளால் மூழ்கடிக்கப்படா மல் பார்த்துக்கொள்வது அவர்களின் வாசித்தலின் நீட்சியைக் கூட்டும்.

**அனுதாபப்படமுடியாத கதாபாத்திரம் ஒன்றை உருவாக்குதல்**

அனுதாபப்படமுடியாத கதாபாத்திரம் ஒன்றை உருவாக்குவதன் மூலம் வாசகர்கள் வாசிக்க ஆரம்பித்தபின் பல்வேறுபட்ட உணர்வுகளுக்குள் பயணிக்கவைப்பது அவசியம். அதன் அடிப்படையில் உருவாக்கப்படும் ஒரு கதாபாத்திரமும், அதன் செயற்பாடுகளும் வாசகரைக் கோபப்படுத்துவதாகவும் அதனூடாக பிரதான பாத்திரத்தின்மீது அனுதாபத்தையும் ஆதரவையும் வழங்கும் மனவோட்டத்தில் கதையினுள் நகரவைக்கும். ஆனால் இவ்வாறான கதாபாத்திரம் ஒன்றிற்குமேல் இருப்பது பொருத்தமாக அமையாது. அந்தப்பாத்திரம் அக்கதையின் நாயகனையோ அல்லது நாயகியையோ அல்லது அவர்களுக்கு நெருக்கமான கதாபாத்திரத்தையோ துன்பத்தில் தள்ளிவிடும் கதாபாத்திரமாக அமையும்.

வாசகரின் உணர்வுகளை தூண்டக்கூடிய சம்பவங்களை சித்தரித்தல் சிறுவர்கள், பெண்கள், செல்லப் பிராணிகளின் சோகமான காட்சிகள், இழப்புக்கள், துன்பவியல் சம்பவங்கள் உள்ளடக்கப்படுமேயானால் அக்கதாபாத்திரங்களின் நிலையை அறியும் ஆவலினால் வாசகர்கள் உந்தப்படுவர். பொறுப்புள்ள பிரதிபலிப்புக்களுடன் அந்தக் கதையினை அசைபோட அது உதவும். வாசகர்களின் உணர்வுகளை தீண்டும் சொற்களை கையாளவேண்டும். குறிப்பாக எதிர்மறையான கதாபாத்தரத்தின் சொற்பிரயோகங்கள் எப்படி மற்றவர்களைப் பாதிக்கின்றது என்பதை காட்சிப்படுத்த வேண்டும். இதனூடாக அந்தச் சொற்கள் தவறானது, சமூகத்தினால் ஏற்கமுடியாதது என்பதை வாசகர்கள் புரிந்து கொள்ளும் ஒரு சமிக்ஞையாக அது அமையும். ஆனாலும் வாசகர்களின் உணர்வை ஆசுவாசப்படுத்தும் வகையில் சில நகைச்சுவையான சொற்களையும், சிந்தனையைத் தூண்டும் சொற்தொடர்களையும் ஆங்காங்கே பயன்படுத்தவேண்டும்.

**திருப்புமுனைகளை ஏற்படுத்தல்**

கதையில் சில முக்கிய இடங்களில் எதிர்பார்க்காத திருப்புமுனைகளைக் கொண்ட சம்பவங்களை உருவாக்குதல். கதைமீதான நம்பிக்கையை அது உருவாக்கும். அத்தோடுசில சமயம் அவர்களது வாழ்விலும் அது திருப்புமுனைகளை ஏற்படுத்தும். கதாபாத்திரங்களின் பங்கினை ஒரு நேர எல்லைக்குள் வரையறுத்தல் மூலமாக வாசகர்களின் ஆர்வத்தையும் சங்கடத்தையும் அதிகப்படுத்த முடியும். கதையின் இறுதிப் பாகம்வரை வாசகர்களால் முடிவைத் தீர்மானிக்க முடியாத வகையில் விறுவிறுப்பான கதைப் பாங்கைக் கொண்டிருத்தல் அவசியமாகும்.

**பிரதான கதாபாத்திரம் ஆளுமையுள்ளதாக இருத்தல்**

கதையில் இடம்பெறும் பாதகமான சூழ்நிலைகளிலும் தவறான தெரிவுகளின் பின்பும் அவற்றைத் தாண்டி ஆக்கபூர்வமான முடிவுகளின் மூலமாக அக்கதாபாத்திரத்தை வலுச்சேர்தல் வாசகர்களைச் சிந்திக்கத் தூண்டும். பொறுமையும் பொறுப்பும் பிறரைப் பாதிக்காமல் பிரச்சினைகளை கையாளும் முறையும் இக்கதாபாத்திரத்தின் பண்புகளாக அமையுமிடத்தில் அப்பாத்திரம் வசகனிடம் ஒரு முன்மாதிரியான கதாபாத்திரமாகவும் அமைய வாய்ப்புண்டு.

**ஆர்வம் குறையாத வகையில் கதையமைத்தல்**

கதைக்குத் தேவையான சொற்கள் கதாபாத்திரங்கள், சம்பவங்கள் காட்சிகளை உள்ளடக்கி அனாவசியமான தகவல்களைத் தவிர்ப்பதனால் வாசகர்களை சோர்வுடையவிடாது ஆர்வத்தை தூண்டும் விதத்தில் அமைவது சிறந்தது.

**யதார்த்தமான பிரச்சினைகளையும், தீர்வுகளையும் அமைத்தல்**

இந்த உலக வாழ்வின் யதார்த்தத்துடன் கதை நகர்ந்தால் வாசகர்கள் மத்தியில் யதார்த்தமான கதைக்குள் தடம்பதிப்பதாக உணர்வர். எதிர்பாராத வகையில் கதையை வேறுதிசையில்திருப்புதல் என்பது வாசகர்களை மேற்கொண்டு கதைக்குள் நகர்வதற்கு ஊக்கப்படுத்தும். முடிவைப் பற்றிய தேடலும் அதிகரிக்கும்.

**முரண்பாடுகளைக் கதையின் சில இடங்களில் ஏற்படுத்துதல்**

இரு வேறு கதாபாத்திரங்களுக்குள் அல்லது ஒரு முக்கிய கதாபாத்திரத்தின் மனதில் சில முரண்பாடுகளை உருவாக்கி அதனைத் தீர்ப்பதற்கான போராட்டத்தை உள்ளடக்குதல் வாசகர்களின் முரண்பாடுகளையும் சில சமயத்தில் தீர்வுகளையும் அது பிரதிபலிக்கும்

சிறுகதையின் கருப்பொருள் எழுதுபவரின் வாழ்வில் அல்லது சமூகத்தில் நிகழ்ந்த ஒரு சம்பவத்தின் ஒரு தாக்கமாக அமையுமிடத்தில் அதில் இடம்பெறும் பாத்திரங்களும் கற்பனைகளும் யதார்த்தமானதாகவும் ஏற்புடையதாகவும் அமையும். அது விரைவில் வாசகர்களைச் சென்றடையும். அவர்களின் மனக்கதவைத் தட்டி அவர்களுக்கு உணர்வூட்டும்.

Dialog
Mega அதிஷ்டம்
சனிக்கிழமை இரவு 9.55 க்கு வசந்தம் TV ஊடாக
120 வது வாரத்தின் வெற்றி இலக்கங்கள்
29 45 54 33 41 C
இந்த வாரத்தின் சுப்பர் பரிசு ரூ. 11,153,846/-
உங்கள் இலக்கங்களை அறிந்திட,
பரிசுகளைப் பெற்றிட
121 க்கு அழையுங்கள்.
Dialog




தன்னம்பிக்கையுடன் தலைநிமிர.
உலகின் முன்னணி ஆங்கில வல்லுனர்களிடம் இணைந்து பயிலுங்கள்.
கற்கை நெறி கட்டணங்கள்
ரூ.19,000 முதல் விலையிடப்படுகின்றன
ஜூலை மாதம் ஆரம்பமாகும் அடுத்த கற்கை நெறிக்காக அழையுங்கள் : 0117 521 521.
பிரிட்டிஷ் கவுன்சில் | 70 ரக்கா வீதி, கண்டிக்குளி, யாழ்ப்பாணம்.



என்ன, உங்க மனைவி அந்த பிச்சைக்காரனோட ரொம்ப நேரம் பேசிக்கிட்டு இருந்தாங்க?
சமையல் குறிப்பெல்லாம் அங்க இருந்துதான் வாங்கிறாங்க!

# மாரி - 2 விரைவில்

தனுஷின் நடிப்பில் கடந்த 2015ஆம் ஆண்டு வெளியாகிய மாரி படத்தின் அடுத்த பாகத்துக்கான வேலைகள் தொடங்கியிருக்கின்றன.

சவுந்தர்யா ராஜேஷ் இயக்கத்தில் தனுஷ் நடித்துள்ள வேலையில்லா பட்டதாரி படம் எதிர்வரும் 28ஆம் திகதி திரைக்கு வருகிறது. தனுஷ் தற்போது வெற்றிமாறன் இயக்கத்தில் 'வட சென்னை' படத்தில் நடித்து வருகிறார்.

கவுதம் மேனன் இயக்கத்தில் தனுஷ் நடித்திருக்கும் 'எனை நோக்கி பாயும் தோட்டா' படம் இறுதி கட்டத்தை எட்டியிருப்பதால் விரைவில் திரைக்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிலையில், பாலாஜி மோகன் இயக்கத்தில் தனுஷ் நடிக்கவிருக்கும் 'மாரி2' படத்துக்கான வேலைகளை தொடங்கிவிட்டேன் என படத்தின் இயக்குநர் பாலாஜி மோகன் அவரது கீச்சகப் பக்கத்தில் அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளார்.

கொஞ்சம் இடைவெளி விட்டு தொடருங்கள்... வாகனங்களை மட்டுமல்ல உறவுகளையும் தான். வாழ்க்கையில் எல்லா உறவுகளும் நல்லபடியாக கடைசி வரை நீடிக்க வேண்டுமெனில், சிறு இடைவெளி அவசியம்...!



ஐ.சி.யுவில கொஞ்ச நேரம் ஒக்சிஜன் கொடுத்து காப்பாற்றிய டாக்டருக்கு நன்றி சொல்லும் நாம்...



வாழ்நாள் முழுவதும் ஒக்சிஜன் கொடுக்கும் மரத்தை வெட்டி வீழ்த்துகிறோம்.



பள்ளி முடிந்து நண்பர்களுடன் சைக்கிளில் வீட்டுக்குச் சென்ற மகிழ்ச்சி... இப்போது கார்களில் சென்றாலும் கிடைப்பதில்லை...

பேட்டரி இல்லா செல்போன்கள்; அமெரிக்க ஆய்வாளர்கள் அசத்தல்...



அட சீக்கிரம் கொண்டு வாங்கப்பா சார்ஜ் போட்டு மாளல...

## கோழியின் கிறுக்கல்!! twitter



தோல்வியின் போது தேற்ற ஆள் இல்லை என்பதை விட, வெற்றியை பகிர்ந்து கொண்டாட ஆளில்லை என்பதே பெரும் தோல்வி...!

4 96 87

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** மனதில் குழப்பம் ஏற்பட்டு விலகும். தொழில், வியாபாரத்தில் வருமானம் சீராக இருக்கும். பணியாளர்கள் விரும்பிய சலுகை கிடைப்பதில் தாமதம் ஏற்படும். பெண்கள், பிள்ளைகளின் நலனுக்காக பாடுபடுவர்.

**இடபம்:** திட்டமிட்டபடி பணிகளை நிறைவேற்றுவீர்கள். எதிர்பார்ப்பு இனிதே நிறைவேறும். தொழில், வியாபாரத்தில் வியத்தகு முன்னேற்றம் ஏற்படும். வருமானம் உயரும்.

**மிதுனம்:** பணிகளை முடிப்பதில் தாமதம் உண்டாகலாம். தொழில், வியாபாரம் வளர்ச்சி பெற அதிக உழைப்பு தேவைப்படும். வருமானம் மிதமாக இருக்கும். வெளியூர் பயணத்திட்டத்தில் திடீர் மாற்றம் உண்டாகும்.

**கடகம்:** உற்சாக மனதுடன் பணிபுரிவீர்கள். உங்களின் திறமையை நண்பர் பாராட்டுவார். தொழில் வளர்ச்சியால் பணவரவும், நன்மையும் அதிகரிக்கும். குடும்பத்துடன் விருந்து, விழாவில் கலந்து கொள்வீர்கள்.

**சிங்கம்:** செயல் நிறைவேற விடாமுயற்சி தேவைப்படும். தொழிலில் உற்பத்தி, விற்பனை சுமாராக இருக்கும். பெண்களுக்கு வீட்டுச் செலவில் சிக்கனம் தேவை. வாகனத்தில் பராமரிப்புச் செலவு ஏற்படும்.

**கன்னி:** தன்னம்பிக்கையுடன் பணிகளில் ஈடுபடுவீர்கள். தொழிலில் உற்பத்தி, விற்பனை அதிகரித்து புதிய சாதனை படைப்பீர்கள். ஆதாயம் அதிகரிக்கும். மாணவர்கள் ஆர்வமுடன் படிப்பர்.

**துலாம்:** எளிமையை வாழ்வில் பின்பற்றுவீர்கள். நண்பரிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் வருமானம் திருப்தியளிக்கும். பணியாளர்கள் சலுகைகள் கிடைக்க பெறுவர்.

**விருச்சிகம்:** மாறுபட்ட சூழ்நிலையால் சிரமம் உருவாகலாம். தொழில், வியாபாரத்தில் சீர்திருத்தப் பணியில் ஈடுபடுவீர்கள். இலாபம் சீராக இருக்கும். உடல்நிலை மேம்படும். பெண்கள் குடும்ப நலனுக்காக பாடுபடுவர்.

**தனுசு:** கவனக்குறைவால் சிரமத்திற்கு ஆளாவீர்கள். நண்பரிடம் விவாதத்தில் ஈடுபட வேண்டாம். தொழில், வியாபாரம் மந்த கதியில் இயங்கும். மாணவர்கள் பாதுகாப்பற்ற இடங்களுக்கு செல்ல வேண்டாம்.

**மகரம்:** கடந்த கால உழைப்பின் பலன் தேடி வரும். நல்லவர்களின் நட்பு கிடைக்கும். தொழிலில் உற்பத்தி, விற்பனை வியத்தகு வளர்ச்சி பெறும். பெண்கள் வீட்டு உபயோகப் பொருள் வாங்குவீர்கள்.

**கும்பம்:** புதியவர்களின் அறிமுகத்தால் நன்மை பெறுவீர்கள். தொழிலில் உற்பத்தி, விற்பனை அதிகரிப்பால் இலாபம் உயரும். விரும்பிய உணவுகளை உண்டு மகிழ்வீர்கள். சுற்றுலா சென்று வர திட்டமிடுவீர்கள்.

**மீனம்:** குடும்ப விடயத்தைப் பிறரிடம் பேச வேண்டாம். கடின உழைப்பால் தொழிலில் சீரான வளர்ச்சி உருவாகும். இலாபம் அதிகரிக்கும். பணியாளர்கள் பணிச்சுமையை திறம்பட சமாளிப்பர்.

## சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 4 | | 6 | | | 3 | |
| | | 1 | | 3 | 8 | 4 | 5 | |
| | | | | | 2 | | | 7 |
| 2 | | | 7 | | 5 | | 1 | |
| | | | | 9 | | | | |
| | 3 | | 1 | | 6 | | | 9 |
| 9 | | | 3 | | | | | |
| | 8 | 7 | 6 | 5 | | 2 | | |
| | 4 | | | 7 | | 5 | | |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 7 | 4 | 6 | 9 | 8 | 2 | 1 | 5 |
| 9 | 6 | 1 | 3 | 2 | 5 | 8 | 7 | 4 |
| 2 | 8 | 5 | 7 | 1 | 4 | 9 | 6 | 3 |
| 6 | 5 | 3 | 9 | 4 | 1 | 7 | 8 | 2 |
| 8 | 4 | 9 | 2 | 3 | 7 | 6 | 5 | 1 |
| 7 | 1 | 2 | 8 | 5 | 6 | 3 | 4 | 9 |
| 5 | 3 | 6 | 4 | 8 | 9 | 1 | 2 | 7 |
| 1 | 2 | 7 | 5 | 6 | 3 | 4 | 9 | 8 |
| 4 | 9 | 8 | 1 | 7 | 2 | 5 | 3 | 6 |

நேற்றைய சுடோக்கின் விடை

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளே 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படு கையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

## மழை...

மனுக்கு அபிசேகமும் செய்யப்பட்டது. தற்போது கடும் வறட்சியான கால நிலை நிலவுகின் றது. கிளிநொச்சி மாவட்டமும் அதனால் பாதிப்புகளை எதிர்கொண்டுள்ளது. குடி தண்ணீர் உட்பட நீர் தட்டுப்பாட்டால் மக்கள் கடும் நெருக் கடிகளை எதிர்கொண்டுள்ளனர். விவசாயச் செய்கைகளும் அழியும் நிலை ஏற்பட்டுள்ளது. இரணைமடுக் குளத்தை நம்பி மேற் கொள்ளப்பட்ட குறைந்தளவு ஏக்கர் சிறுபோக நெற்செய்கையும் நீர் பற்றாக்குறையால் ஆபத்தை எதிர்கொண்டுள்ளது. (ற-101.35)

### பெயர் மாற்றம்

No.51,கேணியடி லேன்,கொக்குவில் மேற்கு, கொக்குவிலை வசிப்பிடமாகக் கொண்ட **சிந்துஉஷா சிவனேஸ்வரன்** ஆகிய நான் இன்று முதல் எனது பெயரை **சிந்துஜா சிவனேஸ்வரன்** என்று என் சார்ந்த சகல ஆவணங்களிலும் பயன்படுத்து வேன் என இத்தால் அனைவருக்கும் அறியத்தருகின்றேன்.

S.Sinthuja

### வேலையாள்கள் தேவை

U. S. Hotel நிறுவனத்திற்கு பின்வரும் பதவி வெற்றிடங்களுக்கு ஆள்கள் தேவைப்படுகின்றனர்.

**1. சமையல் உதவியாளர்.** **2. வாகன சாரதி (கனரகவாகனம்)**
**3. உணவு பரிமாறுபவர் (Waiters)** **4. சுத்திகரிப்பாளர்**

விண்ணப்பிக்க விரும்புவோர் பின்வரும் முகவரியில் 20 .07.2017 இல் நேரில் சமுகமளிக்கவும். **தொடர்புக்கு. 0770083000**

**U.S Hotel (Pvt) Ltd, No.855, Hospital Road, Jaffna.**
**0212221017, 0212212627**
**ushoteljaffna@gmail.com, www.ushoteljaffna.com**










### மரண அறிவித்தல்

## சின்னத்துரை ஆறுமுகம்

**(ஓய்வுபெற்ற கிராம அலுவலர், உடுவில் பிரதேச செயலகம்)**



இணுவில் மஞ்சத்தடியைப் பிறப் பிடமாகவும் இணுவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத் துரை ஆறுமுகம் நேற்று (18.07.2017) செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் மஞ்சத்தடியைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - சின்னமேணை தம்பதியரின் அன்புமக னும் இணுவில் மேற்கு காலஞ்சென்ற வர்களான கந்தையா - அன்னமுத்து தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ் சென்ற சிவனேசமணி, சிவேஸ்வரி ஆகியோரின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான ராசையா, கனகசபாபதி மற்றும் இலட்சுமிப்பிள்ளை, ராசலட்சுமி, நாகையா (லண்டன்), காலஞ்சென்ற சின்னம்மா, சரோசினி தேவி, விசஜகுமார், ஜெகதாம்பாள் (கனடா) ஆகியோரின் பாசமிகு சகோதர னும் காலஞ்சென்றவர்களான தங்கம்மா, சிவகாமிப்பிள்ளை கணேஸ் வரன், மகாதேவன் மற்றும் கார்த்திகேசு ஆகியோரின் அன்பு மைத்துனரும் பிறேமினி (கனடா), சிவானந்தகௌரி (வாசுகி - ஜேர்மனி), பிறேமதர்சினி (கனடா), பிறேம்மானந்தா, காலஞ்சென்ற நிர்மலானந்தன், சர்வானந்தன் (பிரான்ஸ்), பாமினி, ஜெயானந்தன் (பிரான்ஸ்), சதானந்தன் (கனடா), லோஜினி (டாக்டர் - ஆஸ்திரேலியா), விமலானந்தன், கிருஷ்ணாநந்தன் ஆகி யோரின் அன்புத் தந்தையும் சிறீஸ்கந்தராசா (கனடா), கனகலிங்கம் (ஜேர் மனி), சந்திரகுமார் (முன்னாள் பிரதேச சபை உறுப்பினர்), தவலோகநாயகி (பிரான்ஸ்), அருளினி (பிரான்ஸ்), சிவானந்தபவானி (கனடா), ரவீந்திரன் (இஞ்சினியர், ஆஸ்திரேலியா), லோகாயினி ஆகியோரின் நேசமிகு மாம னும் மயூரன், சதீஸ், ராகுல், பிரவீன் (கனடா), கஜானன், கபிலன், சிவானி (ஜேர்மனி), கீர்த்தன், ஹரிசன் (கனடா), மாலவன், ஜனகன், கிரிசன் (பிரான்ஸ்), சிவசேகர், குணசேகர், சிவனேசினி, நர்த்தனன் (கனடா), கிருஷ் ணதுளசி, கிஷ்ணவேதா, அபிரா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (18.07.2017) செவ்வாய்க் கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் இணுவில் பூவோடை இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**இணுவில் மேற்கு, இணுவில்.** **தகவல்: குடும்பத்தினர்.**

### வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம். கொழும்புத்துறை வீதி. பாண்டியந்தாழ்வில் 1½ பரப்புக் காணியுடன் வீடு விற்பனைக்கு உண்டு.

077 614 6434

### தவறிவிட்டது

சிவகுரு அருட்செல்வமாகிய எனது அடையாள அட்டை (693604249V) ரக்ஸ், இன்சூரன்ஸ், லைஸ்சன்ஸ் ஆகியவை அடங்கிய பேர்ஸ் திருநெல்வேலி சந்தைப் பகுதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தந்துதவவும்.

**0212217241**

### கண்ணீர் அஞ்சலி



யாழ்ப்பாணப் பல்கலைக்கழக உயர் பட்டப்படிப்புகள் பீடத்தின் முதுகல்விமாணி அணி (2016/17 XII "A") மாணவனும் எமது மதிப்புக்குரிய ஆசிரிய நண்பருமான **யோசவ் யோண்சன்ராக்குமார்** அவர்களின் பாசமிகு தாயார்

**திருமதி யோசவ் ஞானப்பூ**

அவர்கள் காலமாகிவிட்டார்.

அன்னாரின் பிரிவால் துயருறும் அவரின் குடும்பத்தினர் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

**கல்வியியல் முதுமாணி மாணவர்கள்,**
**கல்வியாண்டு 2016/17 அணி XII**

## கேள்வி அறிவித்தல், மீள்கேள்வி அறிவித்தல்
## வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய்
### மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை (PSDG – I, II)
### வேலைத்திட்டம் - 2017

1) தலைவர், உள்ளூராட்சி மன்றப் பெறுகைக்குழு, வலி தென்மேற்கு பிரதேச சபையினால் கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட கட்டுமான வேலைகளிற்கு தகுதிவாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.
2) கேள்வி பெற தகுதியுடையவராவதற்கு வெற்றிபெறும் கேள்விதாரர் கறுப்புப்பட்டியலில் சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அட்டவணையிற் காட்டியபடி பொருத்தமான தரத்தில் சீடா (CIDA) பதிவு மேற்கொள்ளப்பட்டவராகவும் இருத்தல் வேண்டும்.
3) தேசிய போட்டி கேள்விகோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது. ஆயினும் பொதுநிதிச்சுற்றறிக்கை இல 04/2016(1) இற்கமைவாக இவ் விலைமனுக்கோரலானது தகுந்த வியாபார அல்லது கம்பனிப்பதிவுகளை வடக்கு மாகாணத்திற்குள் கொண்டுள்ள கேள்வியாளருக்கு வழங்கப்படு வதற்கு உரித்துடையதாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.
4) தேவையான தகைமைகள்,கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule ) பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.
5) ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் செயலாளர், வலிகாமம் தென்மேற்குப் பிரதேசசபை, மானிப்பாய் (தொலைபேசி இல - 021-2255381) இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம்.
6) ஆங்கில மொழியிலான பூரணமான கேள்வி ஆவணமொன்றை தலைவர், உள்ளூராட்சி மன்றப் பெறுகைக்குழு, வலி தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய் எனும் இடத்தில் 19 யூலை 2017 ஆம் திகதியிலிருந்து 09 ஆகஸ்ட் 2017ஆம் திகதி வரை காலை 09.00 மணிக்கும் 14.00 மணிக்கும் இடை யில் பார்வையிடவும், மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 2000/- மற்றும் வரி செலுத்தி பெற்றுக் கொள்ளவும் முடியும்.
7) கேள்வி இரு பிரதிகளில் சமர்ப்பிக்கப்படவேண்டும். **தலைவர், உள்ளூராட்சி மன்றப் பெறுகைக்குழு, வலி தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்** எனும் முகவரிக்கு 10 ஆகஸ்ட் 2017 திகதி பி.ப 14.30 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்படவேண்டும். பிந்தியகேள்விகள் நிராகரிக்கப்படும்.
8) கேள்வியானது. கேள்வி நேரம் முடிவடைந்தவுடன் வருகைதரும் கேள்விதாரர்/அவரது பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
9) கேள்வியாளர்களுக்கான முன் கலந்துரையாடல் 03 ஆகஸ்ட் 2017ஆம் திகதி பி.ப 14.30 மணிக்கு வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை மண்டபத்தில் நடைபெறும்.
10) மீள்கேள்வி அட்டவணையிற் குறிப்பிடப்படும் வேலைகளுக்கு பொருத்தமான தரத்திலுள்ளோர் விண்ணப்பிக்காதவிடத்து அதற்கு மேலுள்ள தரமுடைய கேள்விகள் கருத்திலெடுக்கப்படும்
11) கேள்விப் பிணைவைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

| இல | வேலை விவரம் | மதிப்பீட்டு தொகை (மில்லியன்) | ஒப்பந்த காலம் | வேண்டப் படும் தரம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | பிணை வைப்பு (ரூபா) | செல்லுபடி யாகும் காலம் |
| மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை வேலைத்திட்டம் - 2017 | | | | | | |
| 1. | மதவடி வீதி புனரமைத்தல் | 1.10 | 02 மாதம் | C9 (வீதி வேலை) | 11,000.00 | 26.10.2017 |
| 2. | லீலா வெதுப்பக வீதி புனரமைத்தல் | 0.58 | 02 மாதம் | C9 (வீதி வேலை) | 6,000.00 | 26.10.2017 |
| 3. | லூர்த்தம்மா வீதி புனரமைத்தல் | 0.92 | 02 மாதம் | C9 (வீதி வேலை) | 9,500.00 | 26.10.2017 |
| 4. | கேலன்காமம் குள வீதி புனரமைத்தல் | 1.52 | 02 மாதம் | C9 (வீதி வேலை) | 15,500.00 | 26.10.2017 |
| 5. | புளியடிச்சந்தை தெற்கு வீதி புனரமைத்தல் | 1.50 | 02 மாதம் | C9 (வீதி வேலை) | 15,000.00 | 26.10.2017 |
| 6. | பதிவாளர் ஒழுங்கை புனரமைத்தல் - சுதுமலை | 0.70 | 02 மாதம் | C9 (வீதி வேலை) | 7,000.00 | 26.10.2017 |
| 7. | கொத்துக்கட்டி மாயனம் புனரமைத்தல் | 1.0 | 02 மாதம் | C9 கட்டட வேலை) | 10,000.00 | 26.10.2017 |
| 8. | மாதகல் மாயனம் புனரமைத்தல் | 1.40 | 02 மாதம் | C9 கட்டட வேலை) | 14,000.00 | 26.10.2017 |
| 9. | மாதகல் உப அலுவலக சுற்று மதில் மற்றும் வாகன தரிப்பிடம் என்பன புனரமைத்தல் | 1.72 | 02 மாதம் | C9 கட்டட வேலை) | 17,500.00 | 26.10.2017 |
| 10. | முள்ளானை சிறுவிளான் வீதி புனரமைத்தல் | 3.24 | 02 மாதம் | C8 (வீதி வேலை) | 33,000.00 | 09.11.2017 |
| 11. | விவசாய வீதி புனரமைத்தல் | 3.28 | 02 மாதம் | C8 (வீதி வேலை) | 35,000.00 | 09.11.2017 |
| 12. | ராசாத்தி வீதி புனரமைத்தல் | 2.58 | 02 மாதம் | C8 (வீதி வேலை) | 26,000.00. | 09.11.2017 |
| 13. | மாதகல் விக்னேஸ்வரா வீதி புனரமைத்தல் | 3.24 | 02 மாதம் | C8 (வீதி வேலை) | 32,500.00 | 09.11.2017 |
| 14. | பிப்பிலி மாயனம் புனரமைத்தல் | 2.90 | 02 மாதம் | C8 கட்டட வேலை) | 29,000.00 | 09.11.2017 |
| 15. | பெரியவிளான் உப அலுவலக சுற்று மதில் மற்றும் வாகன தரிப்பிடம் என்பன புனரமைத்தல் | 2.0 | 02 மாதம் | C8 கட்டட வேலை) | 20,000.00 | 09.11.2017 |


## மீள்கேள்வி அட்டவணை

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 16. | வடலியடைப்பு இந்துக்கல்லூரி வீதி புனரமைத்தல் | 1.85 | 02 மாதம் | C9 அல்லது அதற்கு மேல் (வீதி வேலை) | 18,500.00 | 26.10.2017 |
| 17. | முருகாநந்தா பிரசாத் வீதி புனரமைத்தல் | 1.22 | 02 மாதம் | C9 அல்லது அதற்கு மேல் (வீதி வேலை) | 12,500.00 | 26.10.2017 |
| 18. | அரசடி வீதி புனரமைத்தல் | 2.25 | 02 மாதம் | C8 அல்லது அதற்கு மேல் (வீதி வேலை) | 22,500.00 | 09.11.2017 |

**தலைவர்,**
**உள்ளூராட்சிமன்றப் பெறுகைக்குழு,**
**வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய்**
**வடக்குமாகாணம்**

**18.07.2017**

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில் 15 . 06 . 1949

விண்ணில் 29 . 07 . 2016

அமரர்

## வசந்தராணி கமலநாதன்

(கிளி)

[முன்னாள் யாழ். மாநகரசபை ஊழியரும்,
பாசையூர் மகப்பேற்று நிலைய பொறுப்பு தாதியும்]

ஓராண்டு ஆனாலும் அழியாத உங்கள்
நினைவுகள் எங்களோடு வாழும்
எங்கள் அன்புத் தாயே உங்கள் ஆத்மா
சாந்தி அடைய இறைவனை பிரார்த்திக்கிறோம்.

அம்பலவாணர் வீதி,
உடுவில்.

கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

**வீடுகள் வாடகைக்கு**

யாழ்.பிறவுண் வீதியில் சகல வசதிகளும் கொண்ட 2 வீடுகள் வாடகைக்கு உண்டு.

தொடர்பு.0777232535

**வீட்டுடன் காணி விற்பனைக்கு**

கைதடி கோப்பாய் சந்தியிலிருந்து 150 M தூரத்தில் A 9 பாதைக்கு அருகில் பொன்னம்பலம் எரிபொருள் நிலையத்துக்கு அருகில் 8.5 பரப்பு காணியுடன் வீடு விற்பனைக்கு உண்டு.

தொடர்பு.0714765998

மஹா சக்தியுள்ள

**வசிய மாந்திரிகம்**

எதையும் எதையும் அறியாத மாந்திரிகர்களிடம் ஏமாறாதீர்கள். என்னுடைய வசிய மாந்திரிகத்தினால் நான் அவர்களுக்கு சவால் விடுகிறேன்.

- காதலால் நீங்கள் வேதனைப்படுகிறீர்களா ?
- காதலனால் - காதலியால் கைவிடப்பட்டவரா ?
- பெற்றோர் விருப்பமின்மையா ?
- கணவன் மனைவிக்கிடையில் முரண்பாடா ?
- வேலைத்தளத்தில் பிரச்சினையா ?
- காணி. சொத்து தொடர்பான பிரச்சினையா ?

வரமுடியாத வர்களுக்கு பதிவுத் தபால் மூலம் செய்து தரப்படும். உத்தரவு.

இரகசியம் பேணப்படும்.
நம்பிக்கை - உத்தரவாதம் கடைப்பிடிக்கப்படும்.
உங்களின் உள்ளங்களில் எழும் பிரச்சினைகளை என்னிடம் தெரிவியுங்கள்.
ஒரு தாய் ஸ்தானத்தில் இருந்து உதவிகள் செய்வேன்.

அனைத்து வசிய மாந்திரிகங்கள் மூலம் மக்களின் மனம் கவர்ந்த

**சீதா குணவதீ குரு மேனியோ**

மெனிக்ஹின்ன - திகன 0766 282 874, 077 392 9989
என்னைத் தொடர்பு கொண்டவர்களுக்கு ஒரு நாளும் தோல்வியில்லை.
வெளிநாட்டில் உள்ளவர்களுக்கு : 0094 766 282 874

**பதவி வெற்றிடம்**

1) சாரதி
2) சுத்திகரிப்பாளர். ஆண்/பெண்

இடம். யாழ். வைத்தியசாலை.
315, பலாலி வீதி,
பரமேஸ்வராசந்தி,
திருநெல்வேலி.

காலம் : 20.07.2017 வியாழன்
நேரம் : மு.ப 11.00 மணி

### நாவற்குழி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாதிகளை நாவற்குழியில் உள்ள சிறீ சமிதி சுமண விகாரையின் அபிவிருத்திக்குத் தடையாக இருப்பதாக, அதன் விகாராதிபதி யான ஹன்வெல்ல ரத்னசிறி தேரர் குற்றம் சுமத்தி யுள்ளார்.

கொழும்பு ஆங்கில ஊடகத்துக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார். விகாரை அமைப்பதற்கு அனுமதி பெறப்படவில்லை எனத் தெரிவித்து, சாவகச்சேரிப் பிரதேச சபையினால் சாவகச்சேரி நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப் பட்டது.

இவ்வாறானதொரு நிலையில் கருத்து வெளியிட்டுள்ள விகாராதிபதி, 60 அடி உயரத்தில் 10 இலட்சம் ரூபா செலவில் இந்தத் தாதுகோபம் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. வடக்கில் உள்ள சில தீவிரப் போக்குடைய அரசியல்வாதிகளே நாவற்குழியில் உள்ள சிறீசமிதிசுமண விகாரையின் அபிவிருத்திக்குத் தடையாக இருக்கின்றனர், என்று கூறியுள்ளார்.

(த-5)

**தேவை**

ஸ்நாக்ஸ் விற்பனை செய்ய பெண்கள் தேவை. நிரந்தர வருமானம் ஆர்வமுள்ளவர்கள் தொடர்புகளுக்கு .0763551855

**உடன் தேவை**

யாழ். நகரில் இயங்கும் பிரபல பூட் சிற்றிக்கு பின்வரும் பணியாளர்கள் உடன் தேவை. கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.

1) வாகன சாரதி (இலகு வாகனம்)
2) பகுதிநேர சமையல் வேலை
3) பொதி செய்தல்
4) மிக்சர்மற்றும் உணவுப் பண்டங்கள் தயாரிக்க தெரிந்தவர்கள்.


தொடர்பு.0774773483

# ஆறாம் மாத நினைவலைகள்

அமரர்

## E.S.பேரம்பலம் கணேசலிங்கம்

*(Proprietor E.S.P.& Company - Jaffna,*
*E.S.P. Trading Company - Colombo)*



மூவிரண்டு திங்கள் கண்டொழிந்து போனாலும்
மூர்ச்சையற்றுக் கிடக்கின்றோம். வாட்டுதய்யா உம் பிரிவு
மறக்க முயன்றபோதெல்லாம் மறைக்க முடியவில்லை - உம்
மரணம் கண்டு தினமும் ஊனுருகி வாடுகின்றோம்

தினம் காணும் ஆசைமுகம் கண்முன்னே நிறைந்து நிற்க
திக்கெட்டும் தேடுகிறோம் உம் வரவெண்ணித் துயரோடு
பார்புகழும் உத்தமனாய் திகழ்ந்த எம் அப்பா - ஏன்
பேச்சின்றி மூச்சின்றிப் போயினையே எமை விட்டு?

உங்கள் பிரிவு தந்த வேதனையால் நெஞ்சு கனக்கின்றதே
உயரிய உம் எண்ணமொடு நிமிர்ந்த நன்நடையும் புன்சிரிப்பும்
எத்தனை பிறவி எடுத்தாலும் கிடைக்காத உங்களன்பும்
எப்போது இனி எமக்குக் கிடைக்குமென ஏங்கியே தவிக்கின்றோம்

ஐயா வாழ்வினிலே ஒளிவிளக்காய் நாம் ஒளிர
மெய்யாக நீ உழைத்த விதம் இந்த மாநிலமே நன்கறியும்
பொய்யான உறவுகளால் பேதைகள் நாம் ஏமாற
நையாது பார்த்திருத்தல் அழகாகுமோ சொல்லிவிடு

அப்பாவென அழைத்துப் பிள்ளைகள் நாம் ஏங்குகின்ற
குரல்தானும் கேட்டிலையோ குணக்குன்றே எம் அப்பா?
நின்று நிலைதடுமாற வைத்துக் கன்றைப் பிரிந்த பசுவைப்போல
என்றும் உமைத் தேடி ஏங்குகிறது எம் நெஞ்சம்

நீ பாசமுடன் பெற்றெடுத்த பரிதவிக்கும் பிள்ளைகளொடு
பற்றுமிக்க வாழ்வு வாழ்ந்த பங்காள் எம் அன்னையும்
சற்றும் நினையாது சார்ந்தனையோ யமனுலகு?
ஐயா நீ கற்றுத் தந்த விடயங்கள் எம் கருத்திலே நிலைத்திருந்தும்
உற்றவரும் உறவுகளும் உம்போல அன்பு செய்யர் அறியாயோ,



அன்னை மடியில் 18.06.1964

இறைவன் அடியில் 23.01.2017

கணேசபவனம்,
வாரிவளவு, காரைநகர்.
11, Bethesda Place.
Off Dickmans Road, Colombo

உங்கள் பிரிவால் துயருறும்
மனைவி,
மக்கள்.

## சுவிஸ்குமாரை...

பாண முன்னாள் மூத்த பொலிஸ் அத்தியட்சகர் லக்ஸ்மன் வீரசேகர தீர்ப்பாயத்திடம் நேற்றுச் சாட்சியமளித்தார்.

"சுவிஸ்குமாருக்கு எதிராக சாட்சியங்கள் இல்லை என்று உப பொலிஸ் பரிசோதகர் சிறிகஜன் என்னிடம் கூறினார். எனினும் சந்தேகநபர் என்ற அடிப்படையில் சுவிஸ்குமாரை பொலிஸ் நிலையத்தில் முற்படுத்துமாறு அவருக்குப் பணிப்புரைவிடுத்தேன். அதனை ஏற்க அவர் மறுத்துவிட்டார். பின்னர் வடக்கு மாகாண மூத்த பிரதிப் பொலிஸ்மா அதிபரின் அறிவுறுத்தலில் சுவிஸ்குமார் விடுவிக்கப்பட்டார்" என்று மூத்த பொலிஸ் அத்தியட்சகர் லக்ஸ்மன் வீரசேகர சாட்சியமளித்தார்.

புங்குடுதீவு மாணவி சிவலோகநாதன் வித்தியா 2015ஆம் ஆண்டு மே மாதம் 13ஆம் திகதி கூட்டு வன்புணர்வின் பின் கோரமாகக் கொலை செய்யப்பட்டார். இந்தக் கொடூரச் சம்பவம் தொடர்பான விசாரணைகள் மேல் நீதிமன்ற நீதிபதி பாலேந்திரன் சசிமகேந்திரன் தலைமையில் மேல் நீதிமன்ற நீதிபதிகள் அன்னலிங்கம் பிரேமசங்கர், மாணிக்கவாசகர் இளஞ்செழியன் ஆகியோர் அடங்கிய தீர்ப்பாயத்தின் இரண்டாம் கட்ட அமர்வு நேற்றுக் காலை 9 மணியளவில் யாழ்ப்பாணம் நீதிமன்றக் கட்டடத் தொகுதியின் 2ஆவது மாடியிலுள்ள திறந்த மன்றில் கூடியது.

வழக்குத் தொடுநர் சார்பில் பிரதி மன்றாடியார் அதிபதி பி. குமாரரட்ணம் தலைமையில் அரச சட்டவாதிகள் நாகரத்தினம் நிஷாந்த், லக்சி டீ சில்வா, மாலினி விக்னேஸ்வரன் மற்றும் பிரிந்தா ரெஜிந்தன் ஆகியோர் முன்னிலையாகியிருந்தனர்.

பூபாலசிங்கம் இந்திரகுமார், பூபாலசிங்கம் ஜெயக்குமார், பூபாலசிங்கம் தவக்குமார், மகாலிங்கம் சசிதரன், தில்லைநாதன் சந்திரகாசன், சிவதேவன் துஷாந்த், பழனி ரூபசிங்கம் குகநாதன், ஜெயதரன் கோகிலன், மற்றும் மகாலிங்கம் சசிக்குமார் ஆகிய ஒன்பது எதிரிகளும் தீர்ப்பாயத்தில் முற்படுத்தப்பட் டனர்.

அதனைத் தொடர்ந்து இன்றைய தினம் ஏழாம் நாள் சாட்சிப் பதிவுகள் ஆரம்பமானது. இந்த வழக்கில் மேலும் இரு சாட்சியங்களையும் மூன்று சான்றுப் பொருள்களையும் இணைப்பதற்கு பிரதி மன்றாடியார் அதிபதி தீர்ப்பாயத்திடம் விண்ணப்பம் செய்தார்.

அதற்கு எதிரிகள் தரப்பு சட்டத்தரணி மகிந்த ஜெயவத்தன ஆட்சேபனை தெரிவித்து தீர்ப்பாயத்திடம் விண்ணப்பம் செய்தார். அதனை தீர்ப்பாயம் ஏக மனதாக நிராகரித்து. "இந்த வழக்கின் தீர்ப்பு வெளிப்படுத்தப்படும் வரையில் குற்றப்பகிர்வுப் பத்திரத்தில், தேவைக்கேற்ப திருத்தங்கள் செய்வதற்கு சட்டமா அதிபருக்கு உரித்துண்டு. அதன் பிரகாராம் புதிதாக இணைக்கப்பட இருக்கும் சாட்சியங்கள் இரண்டும் நிபுணத்துவ சாட்சியங்கள். அதனால் அவற்றை புதிதாக சேர்த்துக்கொள்வதற்கு வழக்குத் தொடுநருக்கு அனுமதியளிக்கப்படுகிறது" என்று தீர்ப்பாயம் கட்டளையிட்டது.

புதிதாக 52ஆவது சாட்சியாக இரசாயனப் பகுப்பாய்வுத் திணைக்கள மூத்த அதிகாரியும், 53ஆவது சாட்சியாக ஜின்டெக் நிறுவனத்தின் மூத்த விஞ்ஞானியும் நிபுணத்துவ சாட்சியங்களாக இணைத்துக்கொள்ளப்பட்டனர். அதே வேளை சான்றுப் பொருள்களாக பற்றுசீட்டுக்கள், இரசாயனப் பகுப்பாய்வு அறிக்கை, மரபணுப் பரிசோதனை அறிக்கை ஆகியவை புதிதாக இணைக்கப்பட்டன.

### எஸ்.ஐ. சாட்சியம்

இந்த வழக்கின் 21ஆவது சாட்சியான உப பொலிஸ் பரிசோதகர் மரகல இரான் சாட்சியமளித்தார்.

"சம்பவம் நடைபெற்ற காலப் பகுதியில் ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றி வந்தேன். அந்த பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியின் பணிப்பின் பேரில் ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்தின் கீழ் இயங்கும் குறிகாட்டுவான் பொலிஸ் காவலரணில் பொறுப்பதிகாரியாகப் பணிபுரிந்தேன். 2015 மே மாதம் 14ஆம் திகதி காலை நான் குறிகாட்டுவான் பொலிஸ் காவலரணில் கடமையில் இருந்தேன், புங்குடுதீவு ஆலடிச் சந்திக்கு அருகில் மக்கள் கூட்டமாக காணப்படுவதாக எனக்குத் தகவல் கிடைத்தது. அந்தப் பகுதிக்கு நான் எனது பொலிஸ் குழுவுடன் சென்றேன்.

ஆலடிச் சந்தியில் இருந்து சிறிது தூரம் உள்ளே சென்றால், பற்றைக்காடுகளுக்கு மத்தியில் பாழடைந்த கட்டடங்கள் உள்ள பகுதியில் மக்கள் கூட்டம் காணப்பட்டது. அந்தப் பகுதியில் பாடசாலை மாணவி ஒருவரின் சடலம் காணப்பட்டது. நான் நின்ற இடத்தில் இருந்து சுமார் 15 மீற்றர் தூரத்தில் சடலம் காணப்பட்டது" எனத் தெரிவித்து சடலம் காணப்பட்ட நிலையை திறந்த மன்றில் சாட்சி விவரித்துக் கூறினார்.

அவ்வேளை எதிரிகள் தரப்பு சட்டத்தரணி மகிந்த ஜெயவர்த்தன, குறித்த பொலிஸ் சாட்சி, தகவல் புத்தகத்தை பார்த்து சாட்சியம் அளிக்காமல் தனது வாக்குமூலத்தைப் பார்த்து சாட்சியம் அளிக்கின்றார். அதனை அனுமதிக்க கூடாது என மன்றில் கோரினார்.

அதனை அடுத்து தீர்ப்பாயம், சாட்சியத்திடம், வாக்குமூலத்தை பார்த்து சாட்சியம் அளிக்காமல் தகவல் புத்தகத்தைப் பார்த்து சாட்சியம் அளிக்குமாறு அறிவுறுத்தியது.

அதனை அடுத்து சாட்சியம் அளிப்பவர், தொடர்ந்து தனது சாட்சியத்தை அளித்தார்.

"நாம் அன்றைய தினம் சடலத்தை உடற்கூற்றுப்பரிசோதனைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவிட்டு, எமது பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி குயிண்டஸ் குணால் பெரேரா (அப்போதைய ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி) தலைமையில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன.

அதன் பிரகாரம் அன்றைய தினம் (14ஆம் திகதி) இரவு 10 மணியளவில் பூபாலசிங்கம் இந்திரகுமார், பூபாலசிங்கம் ஜெயக்குமார் மற்றும் பூபாலசிங்கம் தவக்குமார் ஆகிய மூவரையும் அவர்களது வீட்டுகளுக்கு அருகில் வைத்துக் கைது செய்தோம்.

மறுநாள் (15ஆம் திகதி ) மாணவியின் இறுதிச் சடங்கு இடம்பெற்றது. அன்றைய தினம் காலை முதல் இறுதிச் சடங்கு முடிவடைந்து சடலம் நல்லடக்கம் செய்யப்படும் வரையில், நான் மாணவி கல்வி கற்ற பாடசாலைக்கு அருகில் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்தேன்.

அதன் பின்னர் 17ஆம் திகதி மாலை எமது பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி குயிண்டஸ் குணால் பெரேரா எம்மை புங்குடுதீவில் உள்ள நாதன் கடைக்கு முன்பாக வருமாறு அழைத்தார். அதனை அடுத்து நாம் அந்த இடத்துக்குச் சென்று இருந்தோம்.

அந்தக் கடையில் இருந்து சுமார் 400 மீற்றர் தூரத்துக்கு அப்பால் உள்ள இடத்துக்கு பொறுப்பதிகாரி எம்மை வரச் சொன்னார். நாம் அங்கு சென்ற போது மகாலிங்கம் சசிதரன், தில்லைநாதன் சந்திரகாசன், சிவதேவன் துஷாந்த், பழனி ரூபசிங்கம் குகநாதன் மற்றும் ஜெயதரன் கோகிலன் ஆகிய 5 சந்தேக நபர்களையும் பொறுப்பதிகாரிக்கு கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் கைது செய்தோம். அவர்களைக் கைது செய்த போது அவர்களில் ஒரு சிலர் ஆலயத்துக்குச் செல்வதற்கு தயாரான நிலையில் வேட்டியுடன் மேலங்கி இல்லாமல் நின்று இருந்தார்கள். அவர்கள் ஐவரையும் ஒரே இடத்தில் வைத்தே கைது செய்தோம்.

### சந்தேகநபர்களின் நெருங்கிய உறவினர் பொலிஸ் உத்தியோகத்தர்

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களை எமது பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு செல்லவில்லை. ஏனெனில் சந்தேகநபர்களில் ஒருவரின் நெருங்கிய உறவினர் ஒருவர் ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றுவதனால் நாம் அவர்களை பொலிஸ் நிலையம் கொண்டு செல்லாது குறிகாட்டுவான் பொலிஸ் காவலரணுக்கு விசாரணைக்காகக் கொண்டு சென்றோம்.

நாம் அவர்களை குறிகாட்டுவான் பொலிஸ் காவலரணுக்கு கொண்டு சென்று வாக்குமூலங்களை பெற முயற்சிக்கும் போது, ஊரவர்கள் ஒன்று திரண்டு, சந்தேகநபர்களைத் தம்மிடம் ஒப்படைக்குமாறு கோரி காவலரணைத் தாக்கினார்கள்.

அதனால் எமது பொறுப்பதிகாரி மேல் அதிகாரிகளின் கவனத்துக்கு அதனை கொண்டு சென்று கடற்படையின் உதவியுடன் சந்தேக நபர்களை கடல் வழியாக நீருந்து விசை படகு (வோட்டர் ஜெட்) மூலம் காரைநகர் கடற்படைத் தளத்துக்குக் கொண்டு சென்று அங்கிருந்து வட்டுக்கோட்டை பொலிஸாரின் உதவியுடன் சந்தேகநபர்களை யாழ்ப்பாணத் தலைமை பொலிஸ் நிலையத்துக்கு கொண்டு வந்தோம்.

அன்றைய தினம் இரவு சந்தேகநபர்கள் வாக்குமூலம் அளிக்கும் நிலைமையில் இல்லாத காரணத்தால் அவர்கள் ஓய்வெடுக்க அனுமதிக்கப்பட்டனர். நாம் ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்துக்குத் திரும்பிவிட்டோம் என்று சாட்சியமளித்தார்.

பின்னர் மறுநாள் 18ஆம் திகதி அதிகாலை மீண்டும் யாழ்ப்பாண பொலிஸ் நிலையம் சென்று சந்தேகநபர்களின் வாக்குமூலங்களை கோபி எனும் தமிழ் பொலிஸ் உத்தியோகத்தரின் உதவியுடன் பெற்றுக்கொண் டேன்.

இதேவேளை, இந்தச் சாட்சி தீர்ப்பாயம் முன்னிலையில் நேற்று சுமார் 6 மணித்தியாலங்கள் சாட்சியமளித்தார்.

இந்த வழக்கின் 31ஆவது சாட்சியான யாழ்ப்பாண முன்னாள் மூத்த பொலிஸ் அத்தியட்சகர் லக்ஸ்மன் வீரசேகர சாட்சியமளித்தார்.

"2015ஆம் ஆண்டு மே மாதம் 18ஆம் திகதி காலை 8.45 மணியளவில் என்னை யாழ்ப்பாண மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபர் அலுவலகத்துக்கு வருமாறும் அங்கு வடக்கு மாகாண மூத்த பிரதிப் பொலிஸ்மா அதிபர் வரவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டது.

அதன் பிரகாரம் நான் அங்கு சென்றேன். அங்கு யாழ்ப்பாணப் பிரதிப் பொலிஸ்மா அதிபரும் யாழ்ப்பாண பொலிஸ் நிலைய உப பொலிஸ் பரிசோதகர் சிறிகஜனும் இன்னும் சில பொலிஸ் உத்தியோகத்தர்களும் இருந்தார்கள்.

காலை 9 மணியளவில் வடக்கு மாகாண மூத்த பிரதிப் பொலிஸ்மா அதிபர் லலித் ஜெயசிங்க அங்கு வந்தார். அவர் வந்து சில நிமிடங்களில் சட்டத்துறை பீடாதிபதி தமிழ்மாறனும் அங்கு வந்தார்.

பின்னர் சட்ட பீடாதிபதி தமிழ்மாறன், வடக்கு மாகாண மூத்த பிரதிப் பொலிஸ்மா அதிபருடன் சட்ட ஒழுங்குகள் குறித்துப் பேசினார். புங்குடுதீவு மாணவி படுகொலைச் சம்பவம் தொடர்பிலும் பேசினார். அதன்போது இந்த சம்பவத்துக்கு சுவிஸ்குமார் என்பவர் பணம் வழங்கியதாகவும் அங்கு பேசப்பட்டது. அதனையடுத்து மூத்த பிரதிப் பொலிஸ்மா அதிபர், உப பொலிஸ் பரிசோதகர் இரானை அங்கு வருமாறு அழைத்தார். அங்கு இரானிடம் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் தொடர்பில் விவரங்களை அவர் கேட்டார்.

சம்பவத்துடன் தொடர்புடையவர்களில் சுவிஸ்குமார் என்பவர் இல்லை. அந்தச் சந்தர்ப்பத்தில் சட்ட பீடாதிபதி தமிழ்மாறன், தன்னால் சுவிஸ்குமாரைப் பிடித்து தர முடியும் எனக் கூறினார். இரு பொலிஸ் அதிகாரிகளைத் தன்னுடன் அனுப்பி வைத்தால் சுவிஸ்குமாரைப் பிடித்து வர முடியும் எனவும் அவர் கூறினார். அதனை அடுத்து தமிழ்மாறனின் வெள்ளை நிற கப் ரக வாகனத்தில் உப பொலிஸ் பரிசோதகர் சிறிகஜனும் மற்றுமொரு பொலிஸ் உத்தியோகத்தரும் சென்றிருந்தனர். அவர்கள் சென்று 2 மணி நேரத்துக்குப் பின்னர் என்னை தொலைபேசி ஊடாகத் தொடர்பு கொண்ட சிறிகஜன், "சுவிஸ் நாட்டைச் சேர்ந்த ஒருவரைக் கைது செய்து இருக்கின்றோம். அவரைக் கொண்டு வருவதற்கு வாகன ஒழுங்கைச் செய்து தருமாறு" கோரினார்.

அது தொடர்பில் நான் யாழ்ப்பாண் தலைமைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்கு அறிவித்தேன்" என்று முன்னாள் மூத்த பொலிஸ் அத்தியட்சகர் சாட்சியமளித்தார்.

தீர்ப்பாயம் சாட்சியிடம் கேள்வி எழுப்பியது.

கேள்வி : நீர் மூத்த பொலிஸ் அத்தியட்சகர் தானே ?

பதில் : ஆம்.

கேள்வி : சாதரணமானவர்களுக்கே தெரியும், குற்றச்செயல் இடம்பெற்ற அருகில் உள்ள பொலிஸ் நிலையத்துக்குத்தான் அறிவிக்க வேண்டும் என்று. அவ்வாறு இருக்கையில் நீர் ஏன் ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்துக்கு அறிவிக்காமல், யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்திற்கு அறிவித்தீர் ?

பதில்: சந்தேகநபர்கள் தொடர்பான விசாரணைகள் ஊர்காவற்றுறை பொலிஸாரால் யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையத்தில் மேற்கொள்ளப்பட்டமையால் யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்துக்கு அறிவித்தேன்.

ஓய்வுபெற்ற மூத்த பொலிஸ் அத்தியட்சகர் லக்ஸ்மன் வீரசேகர தொடர்ந்து சாட்சியமளித்தார்.

சிறிது நேரத்தில் சிறிகஜன் என்னைத் தொலைபேசி ஊடாகத் தொடர்பு கொண்டு தமக்கு வாகனம் தேவையில்லை எனவும் கைது செய்த நபருடன் வாகனம் ஒன்றில் தாம் வந்து கொண்டு இருப்பதாகவும் தெரிவித்தார்.

பிற்பகல் 1 மணி அல்லது 2 மணி இருக்கும் சுவிஸ்குமார் என்பவரை உப பொலிஸ் பரிசோதகர் சிறிகஜன் யாழ்ப்பாணத்துக்கு அழைத்து வந்திருந்தார். நான் சுவிஸ்குமாரை யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் முற்படுத்துமாறு அவருக்குப் பணித்தேன்.

அதற்கு சிறிகஜன், "சுவிஸ்குமார் என்பவருக்கும் இந்த கொலைக்கும் எந்த தொடர்பும் இல்லை என தனக்கு ஊர்காவற்றுறை பொலிஸ் நிலைய உப பொலிஸ் பரிசோதகர் இரான் கூறியதாகவும், சுவிஸ் குமாருக்கு எதிராக சாட்சியங்கள் எதுவும் இல்லாத நிலையில் அவரை பொலிஸ் நிலையத்தில் முற்படுத்த முடியாது" எனவும் என்னிடம் கூறினார்.

அதற்கு நான் அவரை சந்தேகநபராக முற்படுத்துங்கள் எனக் கூறினேன். அவ்வாறும் முற்படுத்த முடியாது என சிறிகஜன் கூறினார்.

இது தொடர்பில் யாழ்ப்பாண மாவட்டப் பிரதி பொலிஸ்மா அதிபர் பேரேராவுக்கு தொலைபேசி ஊடாக அறிவித்தேன். அவர் சிறிகஜனை தன்னுடைய அலுவலகத்துக்கு வருமாறு அழைத்தார். அதனை அடுத்து அவரது அலுவலகத்துக்கு சிறிகஜன் சென்றார்.

சிறிது நேரத்தில் மீண்டும் என்னை சந்தித்த சிறிகஜன், "சாட்சியம் இல்லாத காரணத்தால், சுவிஸ்குமாரை பொலிஸ் நிலையத்தில் முற்படுத்தத் தேவையில்லை. அவருக்கு சட்ட மருத்துவ சோதனை விண்ணப்பம் வழங்கி, அவரை வைத்தியசாலையில் அனுமதிக்குமாறு யாழ்ப்பாண மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபர் எனக்குப் பணித்துள்ளார்" என்று கூறினார்.

நான் உடனேயே பிரதிப் பொலிஸ்மா அதிபரைத் தொடர்பு கொண்டு அது தொடர்பில் கேட்டேன். "சுவிஸ்குமாருக்குக் காயங்கள் இருக்குமானால் அது தொடர்பில் அவரிடம் விரிவான வாக்குமூலத்தைப் பெற்று அவருக்குசட்டமருத்துவசோதனைவிண்ணப்பத்தை வழங்கி அனுப்புமாறு வடக்கு மாகாண மூத்த பிரதி பொலிஸ்மா அதிபர் அறிவுறுத்தல் வழங்கினார்" என பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஜி.கே. பெரேரா என்னிடம் தெரிவித்தார். அதனைத் தொடர்ந்து பிரதிப் பொலிஸ்மா அதிபர் கூறியது போன்றே நடவடிக்கை எடுக்குமாறு நான் சிறிகஜனிடம் கூறினேன்.

அதன் பின்னர் மறுநாள் 19ஆம் திகதி புங்குடுதீவு சர்வோதய மண்டபத்தில் நடைபெற்ற கூட்டத்துக்கு சென்றிருந்தேன் அங்கு பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஜி.கே.பெரேரா, வடக்கு மாகாண மூத்த பிரதிப் பொலிஸ்மா அதிபர் லலித் ஜயசிங்க மற்றும் சட்டத்துறைப் பீடாதிபதி தமிழ்மாறன் ஆகியோர் அங்கு வந்து உரையாற்றினார்கள்.

அப்போது மக்கள் சத்தமிட்டார்கள். நாங்கள் பிடித்துக்கொடுத்த சுவிஸ்குமாரை விடுவித்து விட்டீர்கள். பணம் வாங்கிக்கொண்டுதான் அவரை விடுவித்துவிட்டீர்கள் என அவர்கள் கொதிப்படைந்தார்கள்.

அப்போது, சந்தேகநபருக்கு எதிராக சாட்சியங்கள் எவையும் இல்லை. நீங்கள் அந்தச் சாட்சியத்தை வழங்கினால் அவரை மீண்டும் கைது செய்வதாக வடக்கு மாகாண மூத்த பிரதிப் பொலிஸ்மா அதிபர் லலித் ஜயசிங்க கூறினார். அதன் போது அங்கிருந்த அரசியல்வாதியின் சகோதரர் ஒருவர் தான் சாட்சியம் வழங்குவதாகக் கூறினார். அவரது சாட்சியம் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரால் பதிவு செய்ய கட்டளையிடப்பட்டது.

அதன் பின்னர் நானும் பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஜி.கே.பெரேராவும் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஆகியோர் வெளியே வந்து வெள்ளவத்தைப் பொலிஸ் நிலையத்துக்கு தொடர்பு கொண்டோம். ஏனெனில் வெள்ளவத்தைப் பகுதியில் தான் சுவிஸ்குமார் நிற்பதாக கூட்டத்தில் இருந்தவர்கள் கத்தினார்கள். அதன் காரணமாக வெள்ளவத்தைப் பொலிஸாருக்கு தொடர்பு கொண்டு சுவிஸ் குமார் கைது செய்யப்பட்டமை குறித்துக் கேட்டோம். அவர்கள் சுவிஸ்குமாரைக் கைது செய்துவிட்டதாகத் தெரிவித்தனர்.

வெள்ளவத்தையில் இருந்து சந்தேகநபரை இங்கே கொண்டுவர நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஜி.கே.பெரேரா என்னிடம் கூறினார்.

நான் எனது பிரத்தியேக உதவியாளர் தலைமைப் பொலிஸ் பரிசோதகருடன் தொடர்பு கொண்டு, மானிப்பாய் பொலிஸ் நிலையத்தின் வாகனத்தைக் கொண்டு யாழ்ப்பாண பொலிஸ் நிலைய உப பொலிஸ் பரிசோதகரை ஆயுதம் தாங்கிய பொலிஸாருடன் வெள்ளவத்தை பொலிஸ் நிலையத்துக்குச் சென்று கைது செய்யப்பட்ட சந்தேகநபரை இங்கே கொண்டு வருமாறு கூறினேன்.

சுவிஸ்குமாரை நீதிமன்றில் முற்படுத்தும் நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு ஊர்காவற்றுறை பொலிஸ் நிலைய தலைமைப் பொலிஸ் பரிசோதகருக்கு கூறினேன். ஆனால் அவர் அதனைச் செய்யவில்லை. அதன் பின்னர் இது தொடர்பாக எழுத்து மூலமாக ஊர்காவற்றுறை பொலிஸ் நிலைய தலைமைப் பொலிஸ் பரிசோதகருக்கு தெரியப்படுத்தினேன். அப்போதும் அவர் அதனைச் செய்யவில்லை. இதன்பின்னர் ஒழுக்க விசாரணைமேற்கொள்ளுமாறு பிரதிப்பொலிஸ்மா அதிபருக்கு எழுத்து மூலமாக தெரிவித்தேன். பின்னர் குற்றவியல் நடவடிக்கை சட்டக்கோவையின் 125ஆவது பிரிவின் கீழ் எனக்கு வழங்கப்பட்டிருந்த அதிகாரத்தைப் பயன்படுத்தி உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் மற்றும் பொலிஸ் பரிசோதகர் சிந்தக்க பண்டார உட்பட ஆறு உத்தியோகத்தர்களும் இதனை பொறுப்பெடுத்து மேற்கொள்ளுமாறு கட்டளை வழங்கினேன். அவர்களால் சுவிஸ்குமார் நீதிவான் முன்னிலையில் 21ஆம் திகதி முற்படுத்தப்பட்டார்"என தனது சாட்சியத்தில் தெரிவித்தார்.

அதனை தொடர்ந்து எதிரிகள் தரப்பு சட்டத்தரணிகளின் குறுக்கு விசாரணைகள் முடிவடைந்த பின்னர் ஓய்வுபெற்ற மூத்த பொலிஸ் அத்தியட்சகர் லக்ஸ்மன் வீரசேகரவின் சாட்சியம் முடிவுறுத்தப்பட்டு சாட்சி வழக்கிலிருந்து விடுவிக்கப்பட்டார். (வ-37)

# அம்பாள், வாலிபர் அணிகள் வெற்றி

யாழ்ப்பாணம், ஜூலை 19
கைதடி சரஸ்வதி விளையாட்டுக் கழகத்தினால் நடத்தப்படும் கரப்பந்தாட்டத் தொடரில், அண்மையில் இடம்பெற்ற ஆட்டங்களில் நீர்வேலி காமாட்சி அம்பாள் விளையாட்டுக் கழக அணி, அச்சுவேலி தோப்பு வாலிபர் விளையாட்டுக் கழக அணி என்பன வெற்றிபெற்றன.

சரஸ்வதி விளையாட்டுக் கழகத்தில் தொடரின் ஆட்டங்கள் இடம்பெற்று வருகின்றன. அண்மையில் இடம்பெற்ற அச்சுவேலி தோப்பு வாலிபர் விளையாட்டுக் கழக அணிக்கும், சிறுப்பிட்டி கலையொளி விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் தோப்பு வாலிபர் அணி 25:23, 19:25, 25:14 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றி பெற்றது.

தொடர்ந்து இடம்பெற்ற நீர்வேலி காமாட்சி அம்பாள் விளையாட்டுக் கழக 'ஏ' அணிக்கும், மீசாலை சீமா விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில், நீர்வேலி காமாட்சி அம்பாள் விளையாட்டுக் கழக 'ஏ' அணி 25:24, 21:25, 25:17 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றது. (ம-23)

# இந்து இளைஞர் சம்பியன்

கிளிநொச்சி, ஜூலை 19
இலங்கை கிரிக்கெட் சபை மூன்றாம் பிரிவு அணிகளுக்கு இடையில் நடத்தும் தொடரில் கிளிநொச்சி மாவட்டத்தில் கிளிநொச்சி இந்து இளைஞர் அணி சம்பியனானது.

கிளிநொச்சி இந்துக் கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இறுதியாட்டத்தில் பரிஸ் அணியை எதிர்த்து இந்து இளைஞர் அணி மோதியது. முதலில் துடுப்பெடுத்தாடிய பரிஸ் அணி 22.2 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 122 ஓட்டங்களைப் பெற்றது. அந்த அணியின் சார்பில் கஜன் 38 ஓட்டங்களையும், அரவிந்த் 17 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் இந்து இளைஞர் அணியின் சார்பில் றொஸ்கோ 4 இலக்குகளையும் அகிலன், மயூரன் தலா 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இந்து இளைஞர் அணி 21.1 பந்துப் பரிமாற்றங்களில் 4 இலக்குகளை இழந்து 123 ஓட்டங்களைப் பெற்று 6 இலக்குகளால் வெற்றியீட்டியது. துடுப்பாட்டத்தில் றொஸ்கோ ஆட்டமிழக்காமல் 30 ஓட்டங்களைப் பெற்றார். (ம-422)

# சென்றலைட்ஸ் அணி இறுதிக்குச் சென்றது



யாழ்ப்பாணம், ஜூலை 19
இலங்கை கிரிக்கெட் சபை நடத்தும் மூன்றாம் பிரிவு அணிகளுக்கு இடையிலான தொடரில் யாழ்ப்பாணம் சென்றலைட்ஸ் அணி இறுதிக்குத் தகுதி பெற்றது.

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற அரையிறுதி ஆட்டத்தில் சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து வட்டுக்கோட்டை ஒல் கோல்ட்ஸ் அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய வட்டுக்கோட்டை ஒல்கோல்ட்ஸ் அணி 50 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 9 இலக்குகளை இழந்து 202 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக பிரியலக்சன் 75 ஓட்டங்களையும், நிறோசன் 30 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் கிருபாகரன், அலன்ராஜ் இருவரும் தலா 3 இலக்குகளைக் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழக அணி 41.4 பந்துப் பரிமாற்றங்களில் 9 இலக்குகளை இழந்து வெற்றிபெற்றது. அதிகபட்சமாக ஜேம்ஸ் 52 ஓட்டங்களையும், எடின் 27 ஓட்டங்களையும் பெற்றனர். (ம-23-422)

# டயமன்ஸ் – றோயல் இறுதியில் மோதல்

யாழ்ப்பாணம், ஜூலை 19
நவிண்டில் கலைமதி விளையாட்டுக் கழகம் யாழ்ப்பாண மாவட்ட ரீதியாக நடத்திய கால்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டத்தில் வதிரி டயமன்ஸ் அணியும், ஊரெழு றோயல் அணியும் இன்று மோதவுள்ளன.

இமையாணன் மத்திய விளையாட்டுக் கழக மைதானத்தில் இன்று இரவு 7 மணிக்கு இந்த ஆட்டம் நடைபெறவுள்ளது. இறுதியாட்டத்துக்கு முன்னதாக இடம்பெறும் மூன்றாம் இடத்துக்கான ஆட்டத்தில் கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து குப்பிளான் குறிஞ்சிக்குமரன் விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது. (ம-108)

# அமெரிக்கன் மிசன் வென்றது கிண்ணம்



யாழ்ப்பாணம், ஜூலை 19
இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரி நடத்திய கால்பந்தாட்டத் தொடரில் 14 வயது 'கப்' பிரிவில் கொற்றாவத்தை அமெரிக்கன் மிசன் தமிழ் கலவன் பாடசாலை அணி சம்பியனானது.

இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரி மைதானத்தில் அண்மையில் இந்தப் போட்டிகள் நடைபெற்றன. 14 வயதுப் பிரிவு 'கப்' கிண்ணத்துக்கான ஆட்டத்தில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணியை எதிர்த்து கொற்றாவத்தை அமெரிக்கன் மிசன் தமிழ்கலவன் பாடசாலை அணி மோதியது. 2:0 என்ற கோல் கணக்கில் கொற்றாவத்தை அமெரிக்கன் மிசன் தமிழ் கலவன் பாடசாலை அணி சம்பியனானது. (ம-23)

# நின்று நீளம் பாய்தல் போட்டியில் நவீல்ட் பாடசாலைக்குத் தங்கம்



யாழ்ப்பாணம், ஜூலை 19
வடமாகாணப் பாடசாலைகளுக்கு இடையிலான சிறப்புத் தேவையுடைய மாணவர்களுக்கான விளையாட்டுப் போட்டியில், 12 வயதுக்குட்பட்ட பெண்களுக்கான நின்று நீளம்பாய்தலில் கைதடி நவில்ட் பாடசாலையைப் பிரதிநிதித்துவம் செய்த து.நிதர்சினி தங்கப் பதக்கத்தைக் கைப்பற்றினார்.

யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நேற்றுமுன்தினம் இந்தப் போட்டி நடைபெற்றது. 12 வயதுக்குட்பட்ட பெண்களுக்கான நின்று நீளம் பாய்தலில் கைதடி நவில்ட் பாடசாலையைப் பிரதி நிதித்துவம் செய்த து.நிதர்சினி தங்கப் பதக்கத்தையும், கிளிநொச்சி ஐயனார்புரம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையைப் பிரதிநிதித்துவம் செய்த ரா.பிரசாயினி வெள்ளிப் பதக்கத்தையும், கைதடி நவில்ட் பாடசாலையைப் பிரதிநிதித்துவம் செய்த கி.தனுஸ்கா வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றினர். (ம-422)



## கௌரவிப்பு நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜூலை 19
வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான தடகளத் தொடரில் மூன்று போட்டிகளில் களமிறங்கி அத்தனையிலும் தங்கப் பதக்கங்களைச் சுவீகரித்த உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரியின் மாணவன் எஸ். செந்தீஸ் கல்லூரிச் சமூகத்தால் இன்று பாராட்டப்படவுள்ளார்.
கல்லூரி முதல்வர் எஸ்.கிருஸ்ணகுமார் தலைமையில் இன்று காலை 8 மணிக்கு நடைபெறும் நிகழ்வுக்கு தலைமை விருந்தினராக வடமராட்சி கல்வி வலய உடற்கல்வி உதவி கல்விப் பணிப்பாளர் ச.செந்தில்குமரன் கலந்து சிறப்பிக்கவுள்ளார். (ம-422)

## துடுப்பாட்டத் தொடர்



யாழ்ப்பாணம், ஜூலை 19
அனலைதீவு லக்கி ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தினர் தீவக பிரதேசத்திற்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட துடுப்பாட்டக் கழகங்களுக்கிடையிலான துடுப்பாட்டத் தொடரை எதிர்வரும் 22ஆம், 23ஆம், 24ஆம் திகதிகளில் நடத்தவுள்ளனர்.
அனலைதீவு மருத்துவமனைக்கு அருகில் உள்ள கழக மைதானத்தில் நடைபெறவுள்ள இந்தத் தொடரில் தீவகப் பிரதேசத்தைச் சேர்ந்த 17 துடுப்பாட்டக் கழகங்கள் பங்குபற்றவுள்ளதென அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-9)

## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 19
கைதடி குமரநகர் விளையாட்டுக் கழகம் மின்னொளியில் நடத்தும் தாச்சித் தொடரின் ஆட்டங்கள் குறித்த விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று புதன் கிழமை இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் சாந்தை விநாயகர் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கைதடி தூர்க்கா விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. இரவு 7.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் உடுவில் ஆலடி சிந்து விளையாட்டுக் கழக 'பி' அணியை எதிர்த்து இருபாலை விக்னேஸ்வரா விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (ம-23)



## டெஸ்ட் வரலாற்றில் மிகப்பெரிய விரட்டல்

சிம்பாப்வேக்கு எதிராக இலங்கை பெற்ற வெற்றியானது டெஸ்ட் வரலாற்றில் 5ஆவது மிகப்பெரிய விரட்டல் வெற்றியாகப் பதிவானது.
கொழும்பில் நேற்று முடிவுக்கு வந்த இந்த ஆட்டத்தில் இலங்கை அணிக்கு 388 ஓட்டங்களை இலக்காக நிர்ணயித்தது சிம்பாப்வே. இலங்கை அணி அசல குணரத்ன, டிக்வெல்ல மற்றும் குசல் மெண்டிஸ் ஆகியோரின் சிறந்த ஆட்டத்தால் அபார வெற்றிபெற்றது. இந்த வெற்றி டெஸ்ட் வரலாற்றில் மிகப்பெரிய விரட்டல் வெற்றியாக அதாவது நான்காவது இன்னிங்ஸை எதிர் கொள்ளும் அணி எட்டிய பெரிய வெற்றியாகப் பதிவானது.
மேற்கிந்தியத் தீவுகள் அணி கடந்த 2003ஆம் ஆண்டு ஆஸ்திரேலியாவுக்கு எதிராக 7 இலக்குகள் இழப்புக்கு 418 ஓட்டங்களைக் குவித்ததுதான் மிகப்பெரிய விரட்டல் வெற்றியாகும்.
ஆசிய மண்ணைப் பொறுத்தவரை இலங்கை அணியின் நேற்றைய வெற்றியே மிகப்பெரிய விரட்டல் வெற்றியாகும்.
2008ஆம் ஆண்டு இங்கிலாந்துக்கு எதிராக இந்திய அணி 387 ஓட்டங்களை விட்டியமை இதுவரை சாதனையாக இருந்தது. (ம)

# இலங்கை சம்பியன்

### சிம்பாப்வேயும் போராடியது



சிம்பாப்வேக்கு எதிரான டெஸ்ட் ஆட்டத்தில் 4 இலக்குகளால் வெற்றிபெற்று கிண்ணத்தைக் கைப்பற்றியது இலங்கை அணி.
நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற சிம்பாப்வே அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து 356 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்தது. அதிகபட்சமாக எர்வின் 160 ஓட்டங்களையும், வோலர் 36 ஓட்டங்களையும், ரசா 36 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் கேரத் 5 இலக்குக்ளையும், குமார, குணரத்ன இருவரும் தலா 2 இலக்குகளையும், டில்ருவான் பெரேரா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.
பதிலுக்குக் களமிறங்கிய இலங்கை அணி 346 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்தது. தரங்க 71 ஓட்டங்களையும், சந்திமல் 55 ஓட்டங்களையும், குணரத்ன 45 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் கிரீமர் 5 இலக்குகளையும், வில்லியம்ஸ் 2 இலக்குகளையும், திரிபானோ ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.
10 ஓட்டங்கள் முன்னிலையுடன் பதிலுக்குக் களமிறங்கிய சிம்பாப்வே அணி 23 ஓட்டங்களில் 4 இலக்குகளை இழந்து தவித்தது. எனினும் ரசா, மூர், வோலர் மூவரும் சிறப்பாகச் செயற்பட்டு சிம்பாப்வேயைத் தூக்கி நிறுத்தினர். இதனால் சிம்பாப்வே அணி சரிவில் இருந்து மீண்டு 377 ஓட்டங்களைக் குவித்தது. அதிகபட்சமாக ரசா 127 ஓட்டங்களையும், வோலர் 68 ஓட்டங்களையும், கிரீமர் 48 ஓட்டங்களையும் பெற்றனர்.
பந்துவீச்சில் கேரத் 6 இலக்குகளையும், டில்ருவான் பெரேரா 3 இலக்குகளையும், குமார ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.
முதல் இன்னிங்ஸில் 10 ஓட்டங்களால் சிம்பாப்வே முன்னிலை வகித்ததால் இலங்கை அணிக்கு 388 ஓட்டங்கள் இலக்காக நிர்ணயிக்கப்பட்டது. நேற்றுமுன்தின நான்காம் முடிவில் இலங்கை 3 இலக்குகளை இழந்து 170 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. குசல் மெண்டிஸ் 60 ஓட்டங்களுடனும், மத்தியூஸ் 17 ஓட்டங்களுடனும் நேற்றுக் களமிறங்கினர். 25 ஓட்டங்களுடன் மத்தியூஸை வெளியேற்றினார் கிரீமர். அவர் குசல் மென்டிஸையும் பவிலியனுக்குத் திருப்பினார். டெஸ்ட் ஆட்டத்திலும் இலங்கை தோல்வியடையப்போகிறது என்ற பதற்றம் உணரப்பட்டது. ஆனால் டிக்வெல்ல, அசல குணரத்ன இருவரும் இணைந்து ஆட்டத்தின் போக்கை அப்படியே மாற்றினர். இருவரும் அரைச்சதம் கடக்க 4 இலக்குகளால் வெற்றிபெற்று கிண்ணம் வென்றது இலங்கை.
குணரத்ன ஆட்ட நாயகனாகவும், கேரத் தொடராட்ட நாயகனாகவும் தெரிவாகினர். (ம)


## றொமேரோ – மன்செஸ்டர் நீண்டகால உடன்படிக்கை

மன்செஸ்டர் யுனைற்றெட் அணியின் சேர்ஜியோ றொமேரோ, நீண்ட காலத்துக்கான புதிய ஒப்பந்தமொன்றில் தனது கழகத்துடன் கைச்சாத்திட்டுள்ளார்.
ஆர்ஜென்ரீனா தேசிய அணியின் கோல் காப்பாளரான றொமேரோ, அடுத்த கோடைகாலத்துடன் ஒப்பந்தம் நிறைவடையும் நிலையை எதிர்நோக்கியிருந்தார். ஆனால், தற்போது அவர், ஆகக்குறைந்தது 2021ஆம் ஆண்டு வரையாவது, மன்செஸ்டர் யுனைற்றெட் கழகத்துக்காக விளையாடவுள்ளார். டேவிட் டீ கியா, ஜோயல் பெரெய்ரா ஆகியோருடன் கழகத்தில் இவர் போட்டிபோட வேண்டியிருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
ஒப்பந்தம் தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த றொமெரோ, "புதிய ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திட்டமை குறித்து நான் மகிழ்ச்சியடைகிறேன். உலகின் மிகப்பெரிய கழகத்தில் இருப்பதற்கு, யார் தான் விரும்ப மாட்டார்கள்?" என்று தெரிவித்தார். (ம)



# ஆமிருக்குப் பிடித்த வீரராக விராட் கோக்லி





பாகிஸ்தான் அணியின் வேகப்பந்து வீச்சாளரான மொகமட் ஆமிர் தனக்கு மிகவும் பிடித்த துடுப்பாட்ட வீரர் என்றால் அது இந்திய அணியின் தலைவர் கோக்லிதான் என்று தெரிவித்தார்.
கீச்சகப் பக்கத்தில் ரசிகர் ஒருவர் கேட்ட கேள்விக்குப் பதில் வழங்கையிலேயே ஆமிர் இவ்வாறு குறிப்பிட்டார்.
'தற்காலத்தில் ஆஸ்திரேலிய அணியின் தலைவர் சிமித், இங்கிலாந்து அணியின் தலைவர் ரூட், நியூசிலாந்து அணியின் தலைவர் வில்லியம்சன் உள்ளிட்ட வீரர்கள் மிகவும் சிறப்பாகச் செயற்பட்ட போதிலும் இந்திய அணியின் தலைவர் கோக்லியே எனக்குப் பிடித்தமானவர். அவர் தனித்துவம் வாய்ந்த வீரர். களத்தில் அவரை எதிர்த்துப் பந்து வீசும் தருணங்கள் அத்தனையும் அற்புதமானவை' என ஆமிர் மேலும் குறிப்பிட்டார்.
மினி உலகக்கிண்ணத் தொடர் அண்மையில் நடைபெற்றது. இறுதியாட்டத்தில் இந்தியாவை வீழ்த்தி பாகிஸ்தான் சம்பியனானது. இந்த ஆட்டத்தில் கோக்லியை ஆமிர் வீழ்த்தியிருந்தார். தன்னை ஆட்டமிழக்கச் செய்த ஆமிரை கோக்லி மிகையாகவே புகழ்ந்திருந்தார். "ஆமிரின் இந்த மிரட்டல் பந்துவீச்சுக்காக அவரை நான் புகழவே செய்வேன்" என்று கோக்லி குறிப்பிட்டார்.
கடந்த வருடம் ஆசியக் கிண்ணத் தொடர் நடைபெற்றது. இந்தியா சம்பியனானது. இந்தியா கிண்ணம் வெல்ல கோக்லி முக்கிய காரணமாக இருந்தார். இதற்காக ஆமிர் அவரைப் பாராட்டியிருந்தார். களத்தில் ஆமிரும் கோக்லியும் கீரியும் பாம்புமாக இருந்தாலும் களத்துக்கு வெளியே நட்புறவைப் பேணி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம)

## மரண அறிவித்தல்

மண்ணுலகில் 19 12 1937



விண்ணுலகில் 18 07 2017

## திருமதி.இராசம்மா சின்னத்துரை

நயினாதீவை பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த திருமதி இராசம்மா சின்னத்துரை அவர்கள் 18.07.2017 செவ்வாக்கிழமை நேற்று கொழும்பில் காலமானார்.

அன்னார் காலம்சென்ற வீரகத்தி - தெய்வானை தம்பதிகளின் மகளும் காலம்சென்ற ஐயம்பிள்ளை சின்னத்துரை அவர்களின் அன்பு மனைவியும், காலம்சென்ற வீரகத்தி நடேசனின் அன்பு தங்கையும், காலம்சென்ற தவமணிதேவி, டசீந்திரன்(கனடா), நிர்மலாதேவி (ஜேர்மன்), சுசிலாதேவி, சிறீந்திரன் (கனடா), சுதர்ஷினிதேவி (கனடா) ஆகியோரின் அன்புத்தாயாரும், கிரிஷ்ணமூர்த்தி, பிரேமா(கனடா), ஜோர்ஜ் (ஜேர்மன்) கலஞ்சென்ற கோர்டன், பிரபவேனி (கனடா), மகிழ்ராஜ் கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும், சுகந்தினி (கனடா) , பிரஷன்யா (கனடா) ஆர்த்தி (கனடா), ராகுல் (கனடா), பிரவின் (ஜேர்மன்), நவின் (ஜேர்மன்), விவியன் (கனடா), பவியன், அபிராமி (கனடா), ஜனனி (கனடா), ஜோனதன் (கனடா), ஸஹானா (கனடா), ஆகியோரின் அன்பு பேத்தியும், அபிஷேக் (கனடா), அஸ்ருதி (கனடா), ஆஷ்னா (கனடா), அபிடன் (கனடா),ஹேசியா (கனடா) ஆகியோரின் பூட்டியுமாவார்.

**அன்னாரின் பூதவுடல் 20.07.2017 வியாழக்கிழமை மாலை 4.00 மணியளவில் 427/40 வேகியுசன் வீதி, கொழும்பு 15. இல்லத்திலிருந்து தகனக் கிரியைகளுக்காக மாதம்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.**

இவ் அறிவித்தலை உற்றார் உறவினர்கள் மற்றும் நன்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளமாறு கேட்டுக்கொள்கிறோம்

நகவல்: பிள்ளைகள்
Tel: 077 1588792


# பன்னாட்டுத் தரப்படுத்தலில்; முன்னேறினார் முகுருசா

பன்னாட்டு ரென்னிஸ் தரப்படுத்தலில் பெண்கள் ஒற்றையர் பிரிவில் ஸ்பெயின் வீராங்கனை கார்பின் முகுருசா முன்னேற்றம் கண்டுள்ளார்.

விம்பிள்டன் தொடர் லண்டன் நகரில் நடந்தது. இது கடந்த ஞாயிற்றுக் கிழமை முடிவுக்கு வந்தது. பெண்கள் ஒற்றையர் பிரிவில் ஸ்பெயின் வீராங்கனை சம்பியனானார். இதையடுத்து நேற்றுப் புதுப்பிக்கப்பட்ட பன்னாட்டுத் தரப்படுத்தலில் முகுருசா ஐந்தாவது இடத்துக்கு முன்னேறினார்.

விம்பிள்டன் தொடரில் இரண்டாவது சுற்றுடன் வெளியேறிய வீராங்கனையான பிளிஸ்கோவா தரப்படுத்தலில் முதலிடம் பிடித்துள்ளார். நடப்பு வருடத்தில் இதுவரை முக்கிய தொடர்கள் எதையும் கைப்பற்றியிருக்காத பிளிஸ்கோவா, ஏகப்பட்ட சிறு தொடர்களை வென்றிருந்தார். அந்தத் தொடர்களே பிளிஸ்கோவாவுக்கு முன்னேற்றத்தைக் கொடுத்தன என்று சொல்லப்படுகிறது. (ம)




### Win Repair

சகல விதமான குளிர்சாதனப் பெட்டிகளும், A/C களும் உங்கள் வீடுகளுக்கு வந்து சிறந்த முறையில் திருத்திக் கொடுக்கப்படும்.
0779648942

20% விலைக்கழிவு 19/07 முதல் 22/07 வரை

PreEmier Kids Wears சிறுவர் ஆடை காட்சியகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.
(பலாலி வீதி, சுகர்னி வைத்தியசாலைக்கு அருகில்)

### இறுதிக் கருத்தரங்குகள்

☆ July 22.23 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ள
அரச முகாமைத்துவ உதவியாளர் (MA) போட்டிப்பரீட்சை கருத்தரங்கு
20/07/2017 (வியாழன்) 21/07/2017 (வெள்ளி) காலை - 9.00 - 4.00 மணிவரை

☆ July 29 ஆம் திகதி நடைபெறவுள்ள
அபிவிருத்தி உத்தியோகத்தர் (DO) போட்டிப்பரீட்சை கருத்தரங்கு
22/07/2017 (சனி) 23/07/2017 (ஞாயிறு) காலை - 9.00 - 4.00 மணிவரை

வழமையான ஆசிரியர் குழாம். நாவலர் கல்வி நிலையம்
ஆனைப்பந்தி, யாழ்.நகர். T.P. 077 469 6695


## நம்பிக்கை

விம்பிள்டன் கிண்ணத்தைக் கைப்பற்றிய பெடரர், தனது 40ஆவது வயதுவரை விளையாடும் நம்பிக்கையை வெளிப்படுத்தினார். அவருக்குத் தற்போது 36 வயது. (ம)


### FLC FRENCH LANGUAGE CENTRE

பிரெஞ்சு வகுப்புக்கள்

France இல் பயிற்றப்பட்ட விரிவுரையாளர் மூலம் கற்றுக் கொள்ளுங்கள்...
சர்வதேச டிப்ளோமா DELF A1,A2,B1,B2 வகுப்புக்கள் நடைபெறுகின்றன
2006 முதல் இன்றுவரை 1276 மாணவர்கள்...

இல. 40, பலாலி வீதி, (அரியாலை) 0779 789 456 021 221 7781
இல. 181, முதலாம் மாடி, பிரதான வீதி, நெல்லியடி. 021 320 2973
IELTS Life SkillsA1,B1 வகுப்புக்களும்.....
(இலுப்பையடி சந்திக்கு அண்மையில் கராஜ் முன்பாக)

### A/L - 2017

பௌதிகவியல் கருத்தரங்கு
யூலை - 22,23
(10.00 a.m.)
ஆசிரியர்
N.BABU
DMI
ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
077 936 5087

### வேலைக்கு ஆள் தேவை

ரியூசன் சென்ரர்க்கு கிளாக் வேலைக்கு ஆள்தேவை.
25 - 35 வயதிற்கு உட்பட்டவர்கள்.
(பெண்கள் மட்டும்)
077 293 5265
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.



## மரண அறிவித்தல்

பிறப்பு 12 10 1941



இறப்பு 18 07 2017

## நீக்கிலாப்பிள்ளை சவரிமுத்து

(ஓய்வுபெற்ற தபால் ஊழியர்)

யாழ்.நெடுந்தீவு கிழக்கைப் பிறப்பிடமாகவும் பரந்தன் பூங்காவனம் சந்தியை வசிப்பிடமாகவும் கொண்ட நீக்கிலாப்பிள்ளை சவரிமுத்து (ஓய்வுபெற்ற தபால் ஊழியர்) நேற்று (18.07.2017) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நீக்கிலாப்பிள்ளை - மரியப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான செல்வராசா - சிதம்பரம் தம்பதியரின் அன்பு மருமகனும் மேரி மாக்கிறட்டின் அன்புக் கணவரும் அன்னம்மா, பிலோமினா, பவுலினா, அக்கினேஸ் ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற மரிஸ்ரொலா, அனுசியா (ஜேர்மன்), வின்சன் (தபால் ஊழியர், இராமநாதபுரம்), ஜெயகாந் (கனடா), றெபோட் (பிரான்ஸ்), காலஞ்சென்ற ஜெனனக்குமார், ஜெனனாநந்தன் (R.D.H.S. அலுவலகம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஜெயக்குமார் (கல்வித் திணைக்களம், மன்னார்), குமரநாதன் (ஜேர்மன்), கமலினா (ஆசிரியர், இந்து ஆரம்ப பாடசாலை, கிளிநொச்சி), றனித்தா (கனடா), தாட்சாயினி (பிரான்ஸ்), தர்சினி (சுகாதார பணி உதவியாளர், மன்னார்) ஆகியோரின் அன்பு மாமனும் சிந்துஜா, பவித்திரன், அண்யா, அனித்தா, அபினேஸ், ஹபிசன், யக்சனா, அபிநாத், அரவிந், றொஷானி, றுசாந், பிரஞாத் ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்ற தனுஸ்கோடி, குமாரசாமி, அந்தேனிதாஸ், சந்திரசேகரம், மகாலிங்கம், அன்னலிங்கம், பஞ்சலிங்கம், தர்மலிங்கம், காலஞ்சென்ற சொர்ணலட்சுமி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.07.2017) புதன்கிழமை பி.ப. 2.00 மணியளவில் பரந்தன், அந்தோனியார் தேவாலயத்தில் திருப்பலி பூசை ஒப்புக்கொடுக்கப்பட்டு கோரக்கன்கட்டு சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

077 92 35 603,
077 525 7273

தகவல்:
குடும்பத்தினர்.



## மரண அறிவித்தல்

## ஜெகதீஸ்வரி கந்தையா (J.கந்தையா)



தோற்றம் 27.12.1931 மறைவு 17.07.2017

யாழ். இந்து மகளிர் கல்லூரியின் ஓய்வுபெற்ற ஆசிரியரும், யாழ். இந்து மகளிர் ஆரம்ப பாடசாலையின் முன்னாள் உபஅதிபரும், 166, நாவலர் வீதியை பிறப்பிடமாகவும், 54/13, சந்தனமாதா கோயில் முன் ஒழுங்கையை வசிப்பிடமாகவும் கொண்ட ஜெ.கந்தையா 17.07.2017 திங்கட்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குமாரசாமி தையலம்பாள் தம்பதிகளின் மகளும், காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை கந்தையா (அதிபர் - கொக்குவில் CCTMS) அவர்களின் அன்பு மனைவியும் விசாலாட்சி காலஞ்சென்ற குமாரசூரியர், பாலசுப்பிரமணியன் ஆகியோரின் சகோதரியும், சத்தியசீலன் (Australia) சசிகலா, சசிலேகா (London), சசிச்செல்வி ஆகியோரின் அன்புத் தாயும், மேகலா (Australia) சந்திரகுமார் (ஆசிரியர் -St. John's College), முரளிதரன் (London), சிவனேசன் (அதிபர் - கொட்டடி நமசிவாயம்) ஆகியோரின் மாமியும் அபிராமி, சௌமியா, பிரியங்கா, பிருதிவி, மீனாம்பிகா, மயூரி, முகிலன், மருதிஷா, மருதசகி, மருதபரணி, மருதசேசன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நாளை (20.07.2017) வியாழக்கிழமை நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக முற்பகல் 11.00 மணியளவில் துண்டிமாயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

021 222 0603/077 721 2428



### SB Travels and Tours (pvt) Ltd

இலங்கையின் விமானப் பயணச்சீட்டுக்களுக்களின் நேரடி முகவராக செயற்படும் தற்போது யாழ் தனது சேவையினை வழங்குகின்றது. இங்கு அனைத்து நாடுகளுக்குமான அனைத்து விமான பயணச்சீட்டுக்களையும் மிகக் குறைந்த விலையில் உடனடியாகப் பெற்றுக்கொள்ளலாம்.

No 216, Kasthuriyar Road, Jaffna,
021 222 9555/ 076 691 1083 (Branch)

SPECIAL AIR FARES
விமானப் பயணச்சீட்டுக்களுக்கான விசேட விலைக் கழிவுகள்

| | | |
|---|---|---|
| CHENNAI | R/T | 26300/= |
| CHENNAI | R/T | 25000/= |
| MADURAI | R/T | 25200/= |
| TRICHY | R/T | 31800/= |
| ZURICH | O/W | 89900/= |
| BOMBAY | R/T | 36700/= |
| MALAYSIA | R/T | 30700/= |
| DELHI | R/T | 47600/= |
| LONDON | O/W | 63500/= |
| TRIVANDRUM | R/T | 34500/= |
| PARIS | R/T | 85000/= |
| RORANTO | R/T | 78600/= |
| SINGAPORE | R/T | 31600/= |
| BANGKOK | R/T | 31000/= |

VISA ARRANGEMENTS INDIA, THAILAND, MALASIYA, ALL AIR TICKETING AND TRAVELS INSURANCE ARRANCEMENT

'Conditions Apply' Mobile - Sinthu - 076 691 1080
Thushani - 076 691 1083


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 19.07.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.